
# அவசரகாலம் 79



இ: நீ: சு: இயக்க வெளியீடு

DONATED TO THE LIBRARY
OF THE
EVELYN RUTNAM INSTITUTE
FOR INTER-CULTURAL STUDIES

by Rev. Jeyaseelan
St. Mary's Church, Jaffna

Date 26.12.1988

பகுதி I

# அவசரகாலம்

326
அம்

முதற்பதிப்பு : ஆவணி 1980

## நன்றி

ஆங்கிலத்தில் உள்ள இதன் மூலப் பிரதியின் பகுதி I ஐ தமிழில் மொழி பெயர்த்துதவியதிரு. A. J. கனகரட்ணு அவர்களுக்கு எமது இயக்க சார்பில் நன்றி உரித்தாகுக.

நல்லூர் 521/11 இலக்கத்தில் வசிக்கும் இ; நீ. ச; இயக்க பிரதிநிதி திரு. குமாரசாமி பரராசசிங்கம் என்பவரால் யாழ்; 102, பிரதான வீதியில் இருக்கும் அர்ச்; பிலோமினு அச்சகத்தில் அச்சிடப்பட்டது;

# பொருளடக்கம்

முன்னுரை

பக்கம்

பகுதி I அவசரகாலம்

1. யாழ்ப்பாணத்தில் அவசரகால ஆட்சி ... ... 1
2. காலத்தைக் கைப்பற்றுவோம் ... ... 52

பகுதி II இனங்களுக்கிடையில் நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கம்

இனங்களுக்கிடையில் நீதிக்கும், சமத்துவத்துக்குமான இயக்கத்தின் தோற்றமும் குறிக்கோளும் அதன் நடவடிக்கைகளும் ... ... 59

அனுபந்தம் ... ... 75

# முன்னுரை

1979-ம் ஆண்டு ஜுலை தொடக்கம் டிசம்பர் வரை யாழ்ப்பாண மாவட்டத்தில் அவசரகால ஆட்சி அமுலிலிருந்தபோது அரசாங்கத்தின் தணிக்கையினால் முக்கியமான உண்மைகள் மறைக்கப்பட்டதாலும், அரசின் கட்டுப்பாட்டின் கீழுள்ள தொடர்புச் சாதனங்கள் தம்மைத்தாமே தணிக்கை செய்து கொண்டதாலும் அங்கு நடைபெற்ற சம்பவங்கள் பற்றிய உண்மைகளை அம்மாவட்டத்திற்கு வெளியேயுள்ள மக்கள் அறிந்துகொள்ள முடியவில்லை. இந் நாட்டிலுள்ள எல்லா மக்கள் பகுதியினருக்கும் அந்த உண்மை விபரங்களை இனங்களுக்கிடையே நீதிக்கும், சமத்துவத்துக்குமான இயக்கம் (MIRJE) இந்நூலில் எடுத்துக்கூற முற்படுகின்றது.

இப்புத்தகத்தின் பகுதி I அவசரகால ஆட்சியின் போது ஏற்பட்ட உண்மை சம்பவங்களையும், இவ்வாறான குழப்ப நிலைக்கு இட்டுச் செல்வதற்கு ஏதுவாக இருந்த அடுத்தடுத்து வந்த இலங்கை அரசாங்கங்கள் தமிழ்பேசும் மக்கள் தொடர்பாகக் கடைப்பிடித்து வந்த கொள்கை விமர்சனங்களையும் ஸ்ரீ லங்காவின் இன உறவுகளில் ஏற்பட்டுள்ள முடிவற்ற இக்கட்டான நிலையிலிருந்து மீள்வது எப்படி என்ற கலந்துரையாடலையும் கொண்டுள்ளது.

இப்புத்தகத்தின் பகுதி II இனங்களுக்கிடையில் நீதிக்கும், சமத்துவத்துக்குமான இயக்கம் தோன்றிய வரலாற்றையும், அதன் நோக்கங்களையும் அது ஆரம்பித்த காலத்திலிருந்து ஈடுபட்டுவந்த நடவடிக்கைகள் பற்றிய விபரங்களையும் கொண்டுள்ளது.

## சித்திரவதை: உயிருக்கும் சுதந்திரத்திற்கும் ஏற்பட்டிருக்கும் ஒரு புதிய அபாயம்

"எல்லா மக்களையும் எல்லாக் காலங்களிலும் ஏமாற்ற முடியாது.

" .. மீண்டும் மீண்டும் ஏற்படுகின்ற கொடூரமான பொலிசாரின் சித்திரவதைகளும், அதன் விளைவாகப் பிரஜைகளின் மனங்களில் தமது உயிர்களுக்கும், சுதந்திரங்களுக்கும் ஏற்பட்டிருக்கும் புதிய அபாயம் பற்றிய பயங்கர திகிலும் சட்டத்தின் பாதுகாவலர்களே மனித உரிமைகளைக் குத்திக் கிழித்துக் கொல்லுகின்றபோது எமக்குப்பெருங்கலக்கத்தைத் தருகின்றது.

" ...... பத்திரிகைகளில் வெளிவரும் செய்திகள் சிறிதளவாவது உண்மையானால், பொலிஸ்பாதுகாப்பு அறைகள் பயங்கரமான கூடங்களாக மாறிவருகின்றன. .. ... ..... இத்தகைய வளர்ச்சியானது மனிதத்தன்மையில் அமைந்த சட்டரீதியான எமது வாழ்க்கை முறைக்கு ஆபத்தை விளைவிக்கும்.

"........ அதி உயர்ந்த நிர்வாக அரசியல் மட்டங்களில் பொலிஸ் முறைகளின் மூலமாக நடத்தப்படும் கொடுமைகளைத் தடை செய்யவும், கண்டிக்கவும் விசேட தந்திரோபாயங்களை அரசு கையாளுதல் வேண்டும். ... இல்லாவிடில் சட்ட முறையிலமைந்த ஆட்சி மீதுள்ள நம்பிக்கை சீரழிந்து விடும்.

திருட்டு வழக்கின்போது சந்தேகநபர் ஒருவரைச் சித்திரவதை செய்து கொலை செய்ததற்காக பஞ்சாப்—ஹைரியானு உயர் நீதிமன்றத்தினால் சதாகால சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட உதவி சப்இன்ஸ்பெக்டர் ரக்பீர்சிங், மேன்முறையீடு செய்வதற்கு மனுச்செய்த போது அம்மனுவை நிராகரித்து இந்திய சுப்றீம்கோட் நீதிபதிகள் வி; ஆர், கிருஷ்ண ஐயரும் ஈ. எஸ், வெங்கடராமையாவும் வழங்கிய தீர்ப்பிலிருந்து எடுக்கப்பட்டது.

(1980-ம் ஆண்டு ஏப்பிரல் 2-ந் திகதி வெளிவந்த மதராஸ் "இந்து" என்ற பத்திரிகையிலிருந்து எடுக்கப்பட்டது.

அத்தியாயம் ஒன்று

# யாழ்ப்பாணத்தில் அவசரகால ஆட்சி

''ஆயுதங்களின் மோதலில் சட்டங்கள் ஊமையாகின்றன; சட்ட ஆணைகளின் சார்பில், மனிதர் கொன்று குவித்து அழித்துக் கொண்டிருக்கும் பொழுது, சட்டத்தின் அமைதியான, சிறிய குரல் (மனச்சான்று) அமுக்கப்பட்டு விடுகின்றது.''

—சிசரோ

## 1. அவசரகாலமும் மக்களும்

கடந்த முப்பது ஆண்டுகளாக அல்லது அதற்கு மேலாக காலத்திற்குக் காலம் இந்த நாட்டு மக்கள் சட்டத்தால் (உண்மையில் அரசாங்கத்தால்) ஏவிவிடப் பட்ட கொலைகளையும், அழிவுகளையும் எதிர் நோக்க வேண்டியிருந்திருக்கின்றது. இத்தகைய கடும் சோதனைகள் அவசரகாலமென அழைக்கப்படும் காலங்களிலேயே வழக்கமாகியுள்ளன. அவசரகால நிலையில் நிறைவேற்றுத் துறை அதிகாரிகள் அவசரகால அதிகாரங்களைப் பயன்படுத்துதல் நியாயமானது, சட்டத்திற்குட்பட்டது என வாதிடப் படுகின்றது. இத்தகைய அவசரகால அதிகாரங்கள் மக்கள் உரிமைகளையும், சுதந்திரங்களையும் மீறுவனவாகும். அவசரகால சட்டங்களை நிறைவேற்றுவதிலும் பின்னர் அவற்றை நடைமுறைப் படுத்துவதிலும் ஒரு திட்ட வட்டமான ஒழுங்கினை இந்நாட்டில் நாம் காணக்கூடியதாக இருக்கின்றது. அவசரகால அதிகாரங்களை உள்ளடக்கிய பொதுப் பாதுகாப்புச் சட்டம் (இலக்கம் 25. 1947) பெரும்

பாலும் அந்த ஆண்டில் ஏற்பட்ட பொது வேலை நிறுத்தத்தின் எதிரொலி என்ருல் பின்னர் 1953லும், 58/59லும், 61லும் பிரகடனம் செய்யப்பட்ட அவசரகால நிலைமை ஒன்றில் உழைக்கும் வர்க்கத்தின் கிளர்ச்சியை அடக்குவதற்கோ அல்லது அமைதியிழந்த சிறு பான்மையினரின் ஆட்சேபனை இயக்கங்களை அடக்குவதற்கோ நிறைவேற்றப் பட்டன. எனலாம். 1965 க்குப் பின்னர் அவசரகால ஆட்சியே விதியாகிய தெனலாம். 1965 தொடக்கம் 1977 வரையிலான காலப்பகுதியில் சாதாரண சட்டங்களின் ஆட்சியை விட அவசரகால சட்டங்களின் கீழே நாடு ஆளப்பட்டது.

ஜனத்தா விமுக்திப் பெரமுன இளைஞர்களின் கிளர்ச்சி வெடிக்கு - முன்னர் 1971-ல் அவசரகால நிலைமை பிரகடனம் செய்யப் பட்டதும், பெப்ரவரி 77வரை அவசரகால ஆட்சி நீடித்ததும் மக்களிடையே கசப்பையும், வெறுப்பையும் வளர்த்தன. 1977-ம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் ஆளும் கட்சி படுதோல்வி அடைந்தமைக்கு இவையே முக்கிய காரணிகளாக அமைந்தன.

எதிர்பாராப் பெரும் வெற்றி யீட்டிய பெருமிதத்தில் ஐக்கிய தேசியக் கட்சிப் பேச்சாளர்கள் தமக்கு முன் ஆட்சியில் அமர்ந்தவர்கள் நீண்ட அவசரகால ஆட்சியில் புரிந்த அட்டூழியங்களை வன்மையாகக் கண்டித்தனர். 1977 ஆகஸ்டில் நடைபெற்ற வகுப்புக் கலவரங்களின் போது பிரதமர் ஜே. ஆர். ஜெயவர்த்தன நாட்டில் மீண்டும் அமைதியை நிலை நாட்டுவதற்கு அவசரகால அதிகாரங்களை நாடப்போவதில்லையென உறுதியாகத் தெரிவித்தார். அவசரகால ஆட்சி மீது அவரும், அவரது அரசாங்கமும் கொண்டிருந்த வெறுப்பை இது காட்டுவதாக அப்பொழுது பாராட்டப் பட்டது. ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியிலே ஜனநாயகம் செழித்தோங்கும் என்ற நம்பிக்கையை மக்கள் மனதில் வேரூன்றச் செய்யும்

1: பாராளுமன்றத்தில் மேற்கோள் காட்டப்பட்டது.
பாராளுமன்ற விவாதங்கள்; தொகுதி, 6, இல 7, வரி. 911

வகையில் அவர் பின்வருமாறு கூறினர்: ''அவசரகால நிலைமையைப் பிரகடனம் செய்ய நாம் விரும்பவில்லை; அவ்வாறு செய்தல் மக்களின் சுதந்திரங்களை அறவே ஒழிப்பதாகும். — குறிப்பாக கைது செய்தல் தடுத்து வைத்தல் ஆகியவற்றைப் பொறுத்தவரை — அத்துடன் பாராளுமன்றத்தைத் தவிர்த்து வர்த்தமானி மூலம் சட்டங்களை இயற்றுவதற்கு வழிகோலும்''.

ஆனல் ஆட்சிக்கு வந்து இரண்டு ஆண்டுகளுக்குள் இந்த நம்பிக்கைகள் எல்லாம் பொய்ப்பிக்கப்பட்டன. 1979 யூலை 12-ந் திகதி யாழ் மாவட்டத்தில் அவசரகால சட்டம் பிரகடனம் செய்யப் பட்டது. இந்த மாவட்டத்தில் பெரும்பாலும் தமிழ் பேசும் மக்களே வாழ்ந்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. அதே நாள் இராணுவத்தைச் சேர்ந்த பிரிகேடியர் வீரதுங்கவிற்கு ஜனதிபதி பின்வருமாறு ஆணையிட்டார். ''தீவு முழுவதிலிருந்தும் குறிப்பாக யாழ் மாவட்டத்திலிருந்தும் எல்லாவகையான பயங்கரவாத அச்சுறுத்தல்களையும் அகற்றுக.''

அவசரகால நிலைமை பிரகடனம் செய்யப் படுவதற்கு முன்னரும், ஜனதிபதி மேற்கூறிய ஆணையைப் பிறப்பிக்கு முன்னரும் தமிழ் பேசும் மக்களை அடக்கி ஒடுக்கும் நோக்குடன் பல சட்ட நடவடிக்கைகளும், நிர்வாக நடவடிக்கைகளும் தொடர்ச்சியாக மேற்கொள்ளப் பட்டன. தமிழ்ப் பிரதேசங்களில் நடைபெறும் ''பயங்கரவாத நடவடிக்கை'' களினுல் இத்தகைய அடக்குமுறைகள் அவசியமானவை; தவிர்க்கமுடியாதவையென அரசாங்கம் கூறிற்று. 1970 களில் தமிழ் பொலிசாரும், அரசாங்கத்தின் தமிழ் ஆதரவாளர்களும் கொலை செய்யப்பட்டது உட்பட பல பலாத்காரச் செயல்கள் யாழ்ப்பாணத்திலும் வேறு தமிழ் பகுதிகளிலும் நிகழ்ந்தன. இந்தப் பலாத்காரச் சம்பவங்கள் ''அரசியல் பயங்கரவாதம்'' என வர்ணிக்கப்

2. முழு ஆணையையும் 15-7-79 'சண்டே ஒப்சேவரில்' பார்க்கவும்.

பட்டு பயங்கரவாத ஆபத்தை எதிர்த்துப் போராடுவதற்கு விசேட சட்டங்களும், விசேட நடவடிக்கைகளும் தேவைப் பட்டன என அரசாங்கப் பேச்சாளர்கள் வாதிட்டனர். சுருங் கக் கூறின், அரசாங்கத்தின் நோக்கில் யாழ்ப்பாணத்தில் 'அவசரகால' நிலை உருவாகியிருந்தது. அதைச் சமாளிப்பதற்கு அவசரகால அதிகாரங்கள் தேவைப் பட்டன' எல்லாவற் றுக்கு மேலாக முன்பு எப்பொழுதுமே பிறப்பிக்கப் படாத ஜனுதிபதி ஆணை இராணுவ பிரிகேடியர் ஒருவருக்குப் பிறப் பிக்கப் படவேண்டியிருந்தது.

## 2. பிரிவினைப் போக்குகள் உருப்பெற்ற பின்னணி

அரசாங்கம் மேற்கொண்ட கடும் நடவடிக்கைகள் தேவை தானு, நிலைமை அவ்வளவு மோசமாகியிருந்ததா என்ற வினு க்களை எழுப்புதல் பொருத்தமாகும். இந்த வினுக்களுக்கு விடை காண்பதற்கு அரசியல் ''பயங்கரவாதத்தின் தோற்றத்தின்'' பின்னணியையும், தமிழ் பேசும் மக்களிடையே பிரிவினை வாதப் போக்குகள் தோன்றியமைக்கான காரணிகளையும் சுருக்கமாக விளக்குவது அவசியமாகும்.

யாழ்ப்பாணத்திலே பாரம்பரியமாக நிலவி வந்த அமைதி யான சூழ்நிலையை அவ்வப்போது குழப்பிய பலாத்காரச் செயல்கள், தான் தோன்றித்தனமாக நிகழ்ந்தவையல்ல. 1970 க்குப் பின்னர் தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப் பட்ட மிகமோசமான அரசியல் பாகுபாட்டிலிருந்தும், அவர் கள் மீது கட்டவிழ்த்து, விடப்பட்ட பொலிஸ், இராணுவ பயங்கர வாதத்திலிருந்தும் தான் இச்செயல்கள் நேரடியாகத் தோன்றின. இதே கால கட்டத்தில் தான் தமிழ் அரசியற் தலைமை ஒன்று பட்டதோடு, தமிழருடைய எதிர்ப்புணர்வு முனைப்பாகி தமிழ் ஈழக் கோரிக்கை முன் வைக்கப் பட்டது.

அடக்கு முறையை எதிர்த்துப் போராடும் எந்த ஒரு தேசிய இனத்திற்கும், பிரிந்து செல்லும் உரிமை உட்பட,

சுய நிர்ணய உரிமையே அவர்கள் கையாளக்கூடிய இறுதி ஆயுதமாகும். தனிநாடு என்ற கோரிக்கையை முன் வைக்க முன்னர், தமிழ் பேசும் மக்களோ அல்லது அவர்களுடைய அரசியல் பிரதிநிதிகளோ ஒற்றையாட்சியின் கீழ் சம உரிமைகளைப் பெறுவதற்கான வழி வகைகள் அத்தனையையும் கையாண்டனரா என்ற வினா எழுப்பப் படலாம். வரலாற்று ரீதியாக நோக்கும் போது 1920 லிருந்து பிரத்தியேகமான 'தமிழ்' அரசியல் நிறுவனங்களின் நிழலிலேயே தமிழர்கள் திரட்டப்பட்டிருந்தனர். ஆனல் 1950 களில் தான் இலங்கைத் தமிழரின் அரசியல் கட்சிகள் தமிழ் பேசும் மக்களை ஒரு இனமாகவோ அல்லது ஒரு தேசிய இனமாகவோ கருதலாயின. 1970 களில் தான் தனி அரசைப் பற்றி ஆழமாகச் சிந்திக்கலாயின. 1970 கள் வரை அவர்களின் கோரிக்கைகள் சட்ட மன்றத்தில் வகுப்புப் பிரதிநிதித்துவம், சமபிரதிநிதித்துவம், அரசமைப்புப் பாதுகாப்புக்கள், சமஷ்டி ஆட்சிமுறை, பிரதேச அல்லது மாவட்ட சபைகள் மூலம் அரச அதிகாரத்தைப் பன்முகப் படுத்துதல், தமிழ்மொழிக்கு சம அந்தஸ்து ஆகியவற்றையே சார்ந்து நின்றன. இந்தக் கோரிக்கைகள் வழங்கப் படாதபோதிலும்; சிங்கள, தமிழ்த் தலைவர்களால் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தங்களும் உடன்படிக்கைகளும் ஏதோ ஒரு சாக்குப் போக்கில் கிழித்தெறியப்பட்டபோதிலும், பெரும்பாலான தமிழர்கள் ஒற்றையாட்சியிலே சமத்துவத்தையும் நீதியையும் பெறலாமென்ற நம்பிக்கை கொண்டிருந்தனர்.

முக்கியத்துவம் எதுவுமற்ற ஒரு சில சிறு அரசியல் குழுக்களே பிரிவினைதான் தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு எனக்கருதினர். 'எமது நாட்டைத் துண்டாடவேண்டும் என வாதிடும் எந்த அரசியல் இயக்கத்திற்கும் உங்களது ஆதரவை வழங்காதீர்கள்' எனத் தமிழரசுக்கட்சி தமிழ் பேசும் மக்களை 1970 ம் ஆண்டு தேர்தல் காலத்தின் போது திட்டவட்டமாகக் கேட்டுக் கொண்டது.

3. சமஷ்டிக் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனம்: 'த ரைம்ஸ் வீக் கென்டர்' (மாகாணப் பதிப்பு) 5 - 5 - 1970.

1970 - ம் ஆண்டுப் பொதுத் தேர்தலிலே பிரிவினைக் கோஷத்தை எழுப்பிய ஒரு சில தமிழ் வேட்பாளர்கள் படு தோல்வி அடைந்தனர். தமிழரசுக் கட்சித் தலைவர்களில் முக்கியமான மூவர் — கலாநிதி ஈ. எம். வி. நாகநாதன். எஸ். இராசமாணிக்கம், ஏ. அமிர்தலிங்கம் – தேர்தலில் தோற் கடிக்கப் பட்டனர். தமிழ் மக்களிடையே, குறிப்பாக இளை ஞர்களிடையே, தமிழரசுக் கட்சியின் மலட்டுத்தனமான தனிமைப்பட்டு நின்ற துறவற அரசியல் மீது வெறுப்பேற பட்டு இருந்தமை தெட்டத் தெளிவாகியிருந்தது. 1970 - ம் ஆண்டு தமிழ் பேசும் மக்களின் வரலாற்றில் ஒரு திருப்புமுனை எனலாம். அவர்களும், முழு நாடும் முக்கியமான ஒரு திருப் புக் கட்டத்தில் நின்றனர். அப்பொழுதுதான் ஐக்கிய முன்னணி பரவலான வரவேற்போடு பதவி ஏற்றுப் பலருடைய மனதிலே சோஷலிச நம்பிக்கையைத் தூண்டியது. ஆனால் திருமதி. பண்டாரநாயக்காவினதும், அவருடைய அரசாங் கத்தினதும் கொள்கைகளும், செயல்களும் தமிழ் பேசும் மக் களைப் புறக்கணித்தமையால் எந்தப் பிரிவினைக் கோஷத்தை தமிழ் மக்கள் மே 1970 - இல் நிராகரித்தனரோ அதே பிரிவினைக் கோஷத்தை அவர்கள் எழுப்ப வேண்டிய நிர்ப்பந் தத்திற்கு ஆளாயினர்.

பல்கலைக்கழக அனுமதி சம்பந்தமான தரப்படுத்தற் திட் டமே தமிழ் இளைஞர்களை நம்பிக்கையின்மையின் விழிம்பிற்குத் தள்ளியது. பொதுத்துறை வேலைவாய்ப்பைப் பொறுத்தவரை காட்டப்பட்ட மிக மோசமான பாகுபாடு ஐக்கிய முன்னணி அரசின் கீழ் நிதி வழங்கப்படும் என்ற நம்பிக்கையைச் சுக்கு நூறுக்கியது. 1972 இலே ஆக்கப்பட்ட குடியரசு யாப்பு பெரும்பாலான தமிழர்களின் நோக்கில் தம்மை இரண்டாந் தரப் பிரஜைகள் என்னும் நிலைக்குத் தள்ளுவதற்கான ஒரு கருவி யாக்கப்பட்டது. தமிழ் இளைஞர்கள் குடியரசு யாப்பை நிரா கரித்து தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர். திருமதி பண் டாரநாயக்காவின் அரசாங்கம் இந்த எதிர்ப்பு நடவடிக்கை களை முறியடிப்பதற்கு அடக்கு முறைகளைக் கட்டவிழ்த்து விட்டது.

நூற்றுக் கணக்கான தமிழ் இளைஞர்கள் கைது செய்யப் பட்டு சிறைக்குள் தள்ளப்பட்டனர். சட்டப்படி அவர்களுக்கு எதிராக வழக்குத் தொடரப் படாமல் நீண்டகாலம் அவர் கள் சிறையில் வாடினர், இவர்களில் பலர் விசாரணைக்காகவே கைது செய்யப் பட்ட போதிலும் மிகக் கொடூரமாகச் சித்திர வதை செய்யப் பட்டனர். இத்தகைய சித்திரவதைகள் காலத் திற்குக் காலப் பாராளுமன்றத்தில் அம்பலப் படுத்தப்பட்டன. ஒரு இளம் பெண் கைது செய்யப்பட்ட பின் நிர்வாணமாக்கப் பட்டுத் தாக்கப் பட்டார். தமிழ்ப் பகுதிகளிலே கெட்டபெயர் எடுத்திருந்த ஒரு பொலிஸ் அதிகாரி, கைது செய்யப்பட் டிருந்த ஒரு தமிழ் இளைஞனின் ஆண் குறியை மோட்டார் சைக்கிள் புகை போக்கியிற்குள் புகுத்திவிட்டு இயந்திரப் பொறியை முடுக்கிவிட்டார். இந்தக் கொடும் பரிசோதனை யின் விளைவாக துரதிஷ்டசாலியான அந்த இளைஞன் ஆண் மையை இழந்தான்,

1974-ம் ஆண்டு ஜனவரியில் யாழ்ப்பாணத்தில் நடை பெற்ற நான்காவது அனைத்துலக தமிழாராய்ச்சி மகா நாட்டின் இறுதி நாளன்று பொலிஸ் அட்டூழியத்தின் விளைவாக ஒன்பது பேர் மாண்டனர். இது தமிழ் இளைஞர்களிடையே கசப்பான நினை வுகளை வளர்த்தது. தமிழ் இளைஞர்களில் சிலர் வன்முறை களைக் கையாளத் தொடங்கினர். 1971 இலே நடைபெற்ற ஏப்ரல் கிளர்ச்சியும், சிறையில் இருந்த போது சிங்கள கிளர்ச்சியாளரைச் சந்தித்தமையும் இதற்கு தூண்டு கோலாக அமைந்திருக்கலாம்.

1972 - ல் இயற்றப் பட்ட குடியரசு யாப்பு தமிழ் மக்களின் அரசியல் ஒற்றுமைக்கு வழி கோலியது. 1972 மே 14 - ல் திருகோணமலையில் தமிழர் கூட்டணி உருவாகியது. முதற் தடவையாக திருவாளர்கள். எஸ். ஜே. வி. செல்வநாயகம், ஜி. ஜி. பொன்னம்பலம், சி. சுந்தரலிங்கம், எஸ். தொண்ட மான், ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த கே. டபிள்யூ· தேவநாயகம் ஆகியோரும், அவர்களுடைய அரசியல் ஆதர

வாளரும் ஒன்று திரண்டனர்' தமிழ் பேசும் மக்களின் சார்பாக தமிழர் விடுதலைக் கூட்டணி அப்பொழுது பதவியிலிருந்த பிரதமருக்கு ஆறு அம்சக் கோரிக்கையைச் சமர்ப்பித்தது. இந்தக் கோரிக்கையைப் பிரதமரும், அரசாங்கமும், அரசியல் நிர்ணய சபையும் தட்டிக் கழித்தனர். தமிழ்த் தலைவர்கள் சங்கடமான நிலைக்கு உள்ளாகினர். அவர்களுடைய தனிப்பட்ட மன ஓதுக்கங்கள் எவ்வாறாக இருந்திருப்பினும், தனிநாட்டுக் கோரிக்கையைத் தாமதமின்றி வெளிப்படையாக முன் வைப்பது அவர்களின் அரசியல் வாழ்வின் உய்விற்கு இன்றியமையாததாயிற்று.

## 3. ஐக்கிய தேசியக் கட்சியின் வாக்குறுதிகள்

மே, 70-ல் நடை பெற்ற பொதுத் தேர்தலுக்கு ஏழு ஆண்டுகளுக்குப் பின்னர் ஜுலை 77-ல் பொதுத்தேர்தல் நடைபெறவிருந்த தருணத்தில் தமிழரசுக் கட்சியே தமிழர் விடுதலைக் கூட்டணியின் முக்கிய உறுப்பாக விளங்கியது தனி ஈழம் அமைப்பதற்கு ஆதரவு வழங்குமாறு இக் கூட்டணி தமிழ் பேசும் மக்களைக் கேட்டுக் கொண்டது. ஏனைய அரசியல் கட்சிகளைப் பொறுத்த வரையில் ஐக்கிய தேசியக் கட்சியே மிக நுண்ணறிவோடு தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில வருமாறு கூறியது: ''தமிழ் பேசும் மக்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டியிருக்கிறது என்பதை ஐக்கிய தேசியக் கட்சி ஒப்புக் கொள்கின்றது' தமது பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்படாத நிலையில் தனிநாட்டைக் கோரும் ஒரு இயக்கத்திற்கு ஆதரவளிக்க அவர்கள் நிர்ப்பந்திக்கப் பட்டுள்ளனர். முழுத் தேசத்தினதும் பொருளாதார அபிவிருத்திக்குத் தேவைப் படும் தேசிய ஒருமைப்பாட்டையும், ஒற்றுமையையும் கருதி இந்தப் பிரச்சினைகள் கால

---

4. ''1977 ஸ்ரீலங்காவின் பாராளுமன்றம்''. 'த சிலோன் டெய்லி நியூஸ், த அசோசியேற்றட் நியூஸ் பேப்பர்ஸ் ஒவ் சிலோன் லிமிற்றட் லேக்கவுஸ், கொழும்பு. பக். 262

தாமதமின்றித் தீர்த்து வைக்கப் படவேண்டு மென்பதை கட்சி உணருகின்றது. கட்சி பதவிக்கு வந்ததும் பின்வரும் துறைகளில் தமிழ்ப் பேசும் மக்களுக்கு இருந்து வரும் குறைகளைத் தீர்ப்பதற்கு இயன்ற எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும்.''

1. கல்வி
2. குடியேற்றத்திட்டங்கள்
3. தமிழ் மொழியைப் பயன் படுத்துதல்
4. பொதுக் கூட்டுத்தாபனங்களிலும் அவையொத்த நிறுவனங்களிலும் வேலை வாய்ப்புக்கள்

முன்னர் கூறியது போன்று ''நாம் சர்வகட்சி மகா நாட்டைக் கூட்டி அதன் முடிவுகளை நடைமுறைப்படுத்துவோம்.''

தேர்தல் விஞ்ஞாபனத்திலே அரசமைப்பு என்ற பகுதியில் சர்வகட்சி மகா நாடு கூட்டுவதன் நோக்கம் பற்றி தெட்டத் தெளிவாக விளக்கப்பட்டது:

''சிங்களம் பேசாத மக்களின் பிரச்சினைகளை ஆராய்வதற்கு சர்வ கட்சி மகா நாடு கூட்டப்பட்டு அதன் முடிவுகள் அரசமைப்பில் சேர்த்துக் கொள்ளப் படும்.''

தமிழ் ஈழக் கோரிக்கையைத் தடைசெய்வதற்கோ, தனிநாட்டை உருவாக்குவதற்கோ, தமிழரிடையே இயங்கும் எந்தவொரு இயக்கத்தையும் அடக்குவதற்கோ ஐக்கிய தேசியக் கட்சி மக்களின் ஆதரவை நாடவில்லை எனக் குறிப்பிடுதல் முக்கியம். மாறாக தேர்தல் விஞ்ஞாபனத்திலே குறிப்பிடப் பட்டிருக்கும் செயல் முறை மூலம் தமிழ் பேசும் மக்களின் பிரச்சினையைத் தீர்ப்பதற்கே மக்களின் ஆதரவை அது கோரிப் பெற்றது. தமிழ் பேசும் மக்களின் பிரச்சினையைத் தீர்க்கப்படா

5. முன் கூறியபடி:

மையே தனிநாட்டியக்கத்திற்கு ஆதரவு வழங்குவதற்கு அவர்களை நிர்ப்பந்தித்தது என்பதே ஐக்கிய தேசியக் கட்சியின் நிலைப்பாடாக இருந்தது.

மேற் குறிப்பிட்ட வாக்குறுதிகள் ஐக்கிய தேசியக் கட்சிக்குக் கணிசமான தமிழர்களின் வாக்குகளை சம்பாதித்துக் கொடுத்தன. தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு அடுத்ததாக ஐக்கிய தேசியக் கட்சிக்கே மிகப் பெரும்பாலான தமிழ் வாக்குகள் கிடைத்தன எனலாம். பாராளுமன்றத்திலே முதன் முதலாக வெளியிடப்பட்ட கொள்கைப் பிரகடனத்திலும் புதிய அரசாங்கம் தனது தேர்தல் வாக்குறுதிகளை வலியுறுத்தியமை ஐக்கிய தேசியக் கட்சிக்கு வாக்களித்த தமிழருக்குத் திருப்தியளித்தது. நீதி, சமத்துவம், ஆகியவற்றின் அடிப்படையில் இரண்டினங்களுக்குமிடையே நட்புமுறையில் உடன் பாடொன்றினை திரு. ஜெயவர்த்தனாவின் அரசாங்கம் உருவாக்குமென பல தமிழர்களும் கூடுதலான சிங்களவரும் திடமாக நம்பினர். இதன் பயனாக பிரிவினைக் கோரிக்கை பொருத்த மற்றதாயும், தேவையற்றதாயுமாகி விடுமென்றும் பெரும்பாலான தமிழர்கள் அக்கோரிக்கையினின்றும் தம்மை விடுவித்துக் கொள்வரென்றும் கருதப்பட்டது. சுருங்கக் கூறின் முன்னைய ஆட்சிக் காலத்தில் நிகழ்ந்ததெல்லாம் முற்றாக அகற்றப்படுமென எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் உண்மையில் நடந்தது என்ன?. தமிழரைப் பொறுத்தவரை முன்னர் கடைப்பிடிக்கப்பட்ட அதே பாகுபாட்டுக் கொள்கைகளும், பொலிஸ் அடக்குமுறைகளுமே விரிவுபடுத்தப்பட்டன. 2 ஆண்டுகளுக்கிடையே அதாவது ஜூலை 79 அளவில் ''தனிநாட்டை உருவாக்க விழைந்த இயக்கத்திற்கு ஆதரவு வழங்கத் தமிழ் பேசும் மக்களை நிர்ப்பந்தித்த பிரச்சினைகளுக்கு'' தீர்வு காண்பதற்கு பதிலாக ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் தமிழ் ஈழக் கோரிக்கை தடை செய்யப் படுவதோடு, தமிழரிடையே தனிநாட்டியக்கத்தை அடக்குவதற்கும் விழைந்தது. இந்த வெட்கங் கெட்ட நம்பிக்கை மோசடியே யாழ். மாவட்டத்தில் அவசரகால ஆட்சி பிரகடனஞ் செய்யப்பட்டதற்கான உண்மையான பின்னணியாகும்.

## 4. நம்பிக்கை மோசடி

"சிங்களவரல்லாத மக்களின் பிரச்சினைகளை ஆராய்வதற்கு" ஐக்கிய தேசியக் கட்சி பதவிக்கு வந்தது முதல் இரண்டு ஆண்டுகளில் சர்வ கட்சி மகாநாட்டைக் கூட்டுவதற்கு எந்த விதத்திலும் அரசாங்கம் முயற்சி எடுக்கவில்லை. பாராளுமன்றத் தேர்வுக் குழுவினூடாகவே புதிய அரசமைப்பு சட்டமாக்கப் பட்டது. இந்தக்குழுவில் தமிழர் விடுதலைக் கூட்டணி பங்கு கொள்ளவில்லை என்பது குறிப்பிடத் தக்கது. இதற்கான காரணங்களைத் திரு அமிர்தலிங்கம் பாராளுமன்றத்தில் எடுத்துரைத்தார்.; "ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்திலே வாக்குறுதி அளிக்கப்பட்ட அடிப்படையில் சர்வ கட்சி மகா நாட்டைக் கூட்டித் தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண விளையாது, அரசாங்கம் அரசமைப்பைத் திருத்த முயலுகின்றது...... இத்தகைய சூழ்நிலையில் நியமிக்கப்பட்ட பாராளுமன்றத் தெரிவுக் குழு இந்த நாட்டிலே உள்ள இரு தேசிய இனங்களுக்கிடையே எழுந்துள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியாது, அதற்கான சூழ்நிலையும் நிலவவில்லை."

அரசாங்கத்தின் சார்பாக வர்த்தக அமைச்சர் திரு. அத்துலத் முதலி பின்வருமாறு பதிலளித்தார்: "சர்வ கட்சி மகாநாட்டை ஏன் கூட்டவில்லை என அவர்கள் கேட்கிறார்கள்; தெரிவுக் குழு சர்வகட்சி மகாநாடுதானே." ஆகஸ்ட் 1978-ல் இப்பதில் அளிக்கப் பட்டது. அப்பொழுது இரண்டாவது குடியரசு அமைப்பு உருவாக்கப்பட்டுக் கொண்டிருந்தது; ஆனல் ஓராண்டுக்குப் பின்னர் சர்வ கட்சி மகாநாட்டைக் கூட்டாததற்கு அரசாங்கம் வேறு காரணங்களைக் காட்டியது. யாழ்ப்

---

அரசுப்பேரவை விவாதங்கள்: தொகுதி. 28, இல. 11 வரி 985.

அரசுப்பேரவை விவாதங்கள்: தொகுதி. 28, இல: 14 (பகுதி II), வரி. 1561.

பாணத்தில் அவசரகால ஆட்சி பிரகடனப் படுத்தவிருக்கும் தருணத்தில் ஜனதிபதி ஜெயவர்த்தன வருமாறு கூறினர்; " 1977 பொதுத் தேர்தலிலே முன் வைக்கப்பட்ட, ஐக்கிய தேசியக் கட்சி தேர்தல் விஞ்ஞாபனத்தில் தமிழ் பேசும் க் களின் பிரச்சினைகளை ஆராய்வதற்கு சர்வ கட்சி மகா நாடு ஒன்றினைக் கூட்டி அதன் முடிவுகளைச் செயற்படுத்துவோம் என வாக்குறுதி அளிக்கப் பட்டது. துரதிஷ்ட வசமாக பொதுத் தேர்தலில் எல்லா அங்கீகரிக்கப் பட்ட கட்சிகளும் தேர்தலில் வெற்றி பெறவில்லை. பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் பெற்றிருக்கும் கட்சிகளுக்கு அப்பால் சர்வ கட்சி மகா நாட்டைக் கூட்டுவது குழப்பத்திற்கு வழி கோலக் கூடும். இதனல் நோயை விட மருந்து கொடியதாக இருக்கலாம்."

எத்தனையோ வாரங்களுக்குப் பின்னர் — யாழ்ப்பாணம் அவசரகால ஆட்சியின் பிடிக்குள் சிக்குண்டிருந்த போது பாராளுமன்றத்திலே பயங்கரவாத தடுப்புச் சட்டம் விவாதிக்கப்பட்ட போது திரு. அத்துலத் முதலி குறுக்கிட்டு முற்றிலும் வேறு பட்ட காரணங்களைக் கூறினர். "1977 ல் கலவரம் நடைபெற்றதை நீங்கள் மறந்திருக்க முடியாது. கலவரச் சூழ்நிலையில் சர்வ கட்சி மகா நாடு ஒன்றினை நாம் நடாத்த முடியுமென நீங்கள் நினைக்கின்றீர்களா? பொலீஸ் அதிகாரிகள் சுட்டுத் தள்ளப் படும் போது சர்வ கட்சி மகா நாடு நடத்தப் படலாமென நீங்கள் உண்மையில் நம்புகிறீர்களா? சாட்சிகளுக்கு உயிராபத்து ஏற்பட்டிருக்கும் போது சர்வ கட்சி மகாநாட்டை நடாத்த முடியுமென நீங்கள் நினைக்கின்றீர்களா? உங்களுடைய கனவுகளில் தான் சர்வ கட்சி மகா நாட்டை நீங்கள் நடாத்தலாம். உண்மையான சர்வ கட்சி மகாநாடே எமக்குத் தேவை. பயன் விளைவிக்கக் கூடிய ஒன்றே நமக்குத் தேவை "

---

8. ஜனதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன அரசாங்கப் பாராளுமன்றக் குழுவுக்கு ஆற்றிய உரை: 4.7.79' சிலோன் டெய்லி நியூசில்' வெளியிடப்பட்டது.

அரசாங்கத்தின் சார்பாக எடுத்துரைக்கப் பட்ட இரு முக்கிய வாதங்களும் அறவே ஆதாரமற்றது. சர்வகட்சி மகா நாட்டை கூட்டுதல் என்ற வாக்குறுதி தேர்தல் விஞ்ஞாபனத்தில் மட்டுமல்ல அரசாங்கத்தின் 2 வது கொள்கைப் பிரகடனத்திலும் சேர்க்கப்பட்டிருந்தது. இக் கொள்கைப் பிரகடனம் தேர்தலுக்குப் பின்னர் வெளியிடப்பட்டது, அப்போது எல்லோருக்கும் தெரியும்; பொதுத் தேர்தலிலே போட்டியிட்ட எல்லா அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளும் பாராளுமன்றத்தில் பிரதி நிதித்துவம் பெறவில்லை என்பது, மேலும் சில அரசியல் கட்சிகள் பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் பெறவில்லை என்பதால் சர்வ கட்சி மகா நாடு நிச்சயமாக குழப்பத்தில் முடியுமெனச் சொல்வதற் கில்லை. அவ்வாறு கூறுவது ஜனநாயகத்திற்கு முரணானது. தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைக்கு ஏற்றுக் கொள்ளப்படக் கூடிய ஓர் தீர்வினை உருவாக்குவதற்கு எல்லா அரசியல் கட்சிகள் மட்டுமல்ல, சமய திருவனங்களும் தயாராக இருந்தன. முன்பு எப்போதும் இத்தகைய சாதகமான அரசியல் சூழ்நிலை இருந்ததில்லை. எமது அண்மைக் கால அரசியல் வரலாற்றிலே முதல் தடவையாக ஆளுங் கட்சிக்கு எதிராக முக்கிய அரசியற் கட்சிகள் வகுப்புவாத எதிர்ப்பைத் தூண்டிவிடவில்லை. இந்த நிலைமையை 1956 - 1960, 1965 - 1970 காலகட்டங்களின் நிலைமையுடன் ஒப்பிட்டால் உண்மை புலப்படும்.

கலவரச் சூழ் நிலையிலும், பொலிஸ்காரர் சுட்டுக் கொல்லப்படும் சூழ் நிலையிலும் சர்வகட்சி மகா நாட்டினை நடாத்துவது பொருத்தமற்றது என்ற மற்ற வாதத்தைப் பற்றிக் கூறுவதானால் மட்டரகமான பாடசாலை விவாதத்தில் கூட இத்தகைய வாதம் முன் வைக்கப்படத் தகுதியற்றதெனலாம்.

ஆகஸ்ட் 1977 ல் இனக்கலவரங்கள் நடைபெற்றுக் கொண்டிருந்த போது தான் அரசாங்கத்தின் 2 வது கொள்கைப் பிரகடனம் பாராளுமன்றத்தில் விவாதிக்கப் பட்டு நிறைவேற்றப் பட்டது. இந்தக் கொள்கைப் பிரகடனத்தில் சர்வ கட்சி மகாநாடு பற்றிய வாக்குறுதி இடம் பெற்றிருந்தமை

குறிப்பிடத் தக்கது. இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர் இந்தத் தூங்கு மூஞ்சிகள் விழித் தெழுந்து கலவரச் சூழ்நிலையில் அரசியல் மகா நாடுகள் நடாத்தப் படுவது பொருத்தமா இல்லையா என வினவுகின்றனர்.

பொலிஸ்காரர் கொலை செய்யப் பட்டமை ஐக்கிய தேசியக் கட்சி தேர்தல் விஞ்ஞாபனத்திற்கு முன்னரும் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் பதவிக்கு வருமுன்னரும் நிகழ்ந்தவையாகும். தமிழ்ப் பகுதிகளிலே இடைக்கிடை பலாத்கார செயல்கள் நிகழ்ந்தது பற்றி ஐக்கிய தேசியக் கட்சி நன்கு அறிந்திருந்ததோடு இதற்கான காரணங்களையும் அது புரியாமலில்லை. இதனால் தான் போலும் தனது தேர்தல் விஞ்ஞாபனத்திலே ஐக்கிய தேசியக் கட்சி தமிழ் ஈழத்தையோ, பிரிவினை வாதத்தையோ எதிர்ப்பதைத் தவிர்த்துக் கொண்டது. இதற்குப் பதிலாக தமிழரின் பிரச்சினைகளைத் தீர்க்கப் போவதாக துணிச்சலான வாக்குறுதியை அளித்தது. இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படாமையினாலேயே தனி நாட்டு இயக்கத்திற்கு ஆதரவு வழங்குவதற்கு தமிழ் பேசும் மக்கள் நிர்ப்பந்திக்கப் பட்டுள்ளனரென ஐக்கிய தேசியக் கட்சி தேர்தல் விஞ்ஞாபனத்திலே குறிப்பிட்டிருந்தமை இங்கு மனங் கொள்ளத் தக்கது.

ஐக்கிய தேசியக் கட்சி தனது தேர்தல் வாக்குறுதிகளை இவ்வாறு காற்றில் பறக்கவிட்டதைக் குறித்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பிரதித் தலைவரான திரு. மைத்திரிபால சேனநாயக்கா கூடக் கண்டனம் தெரிவித்தார். யாழ்ப்பாணத்திலே அவசரகால ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருந்த சமயம் பாராளுமன்றத்தில் அவர் பின்வருமாறு கூறினார். ''இந்த நாட்டிலே உள்ள தமிழ்ச் சிறுபான்மையினரின் தீர்க்கப் படாத பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் பொருட்டு சர்வ கட்சி மகா நாட்டைக் கூட்டப் போவதாக ஐக்கிய தேசியக் கட்சி தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் வாக்குறுதி அளித்திருந்தது. இந்த வாக்குறுதியால் கவரப்பட்ட பல்லாயிரக் கணக்

ான தமிழ் பேசும் மக்கள் ஐக்கிய தேசியக் கட்சிக்கு வாக்களித்தனர். இரண்டு ஆண்டுகள் ஆகியும் அரசாங்கம் தனது வாக்குறுதிகளை காப்பாற்றத் தவறி விட்டது. பதிலாக நிலைமை மேலும் மோசமாவதற்கும்; பலாத்காரமும் பயங்கரவாதமும், பரவுவதற்கும் அது அனுமதித்தது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைப் பொறுத்த வரை அது அன்றும் இன்றும் சர்வகட்சி மகா நாட்டில் பங்கு பற்றுவதற்குத் தயாராக உள்ளது.''

ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் தானாக தேசிய இனப் பிரச்சினையைத் தீர்க்க முயன்றிருந்தால் சர்வ கட்சி மகா நாட்டைக் கூட்டுவது. பற்றிய பேச்சே எழுந்திருக்காது. அரசாங்கம் விரும்பியிருந்தால் தன்னந்தனியாகவே அதைச் செய்திருக்கலாம். அது விரும்பியவாறு நடப்பதற்கு அதற்கு எல்லா அதிகாரமும் இருந்தது. பெரும்பாலான சிங்கள வாக்காளரின் ஆதரவும் அதற்குக் கிடைத்திருந்தது. பாராளுமன்றத்திற்குள்ளும், வெளியேயும் தனது கட்சியிலிருக்கும் பேரினவாதிகளைச் சமாளிப்பதற்கு திரு. ஜே. ஆர். ஜெயவத்தன அவர்களிடம் போதிய அதிகாரமும் இருந்தது. கல்வி வேலைவாய்ப்பு, மொழி, குடியேற்றம் ஆகிய துறைகளிலே அரசாங்கம் தமிழர்களின் குறைகளை நிவர்த்தி செய்திருந்தால் போதுமானதாயிருந்திருக்கும். ஆனல் அவசரகால நிலைமைப்பிரகடனம் செய்யப்படுவதற்கு முற்பட்ட இரண்டு ஆண்டு காலத்தில் தமிழ் மக்களின் துயரத்தைத் துடைப்பதற்கு அரசாங்கம் எந்த வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. பதிலாக நிலைமை மோசமாக, மோசமாக தமிழ் மக்களின் துயரமும் மேலும் பெருகிற்று.

மொழி உரிமைகள் பற்றி சற்று ஆராய்வோம். புதிய அரசமைப்பு உருவாக்கப் பட்டதோடு மொழிப் பிரச்சனை ஏறக்குறைய தீர்ந்து விட்டதென ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் மார்பு தட்டுகிறது. ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தில் இடம் பெற்றிருக்கும் தமிழ் மந்திரியாகிய திரு. கே. டபிள்யூ. தேவநாயகம் பின்வருமாறு கூறுகின்றார். ''சிறுபான்மையினரின் பிரச்சினைகளை யாராவது ஆராய்ந்திருந்தால் புதிய அரசமைப்பு நடைமுறைக்கு வந்த பின்னர் மொழிப்

பிரச்சினை ஏறக்குறையத் தீர்க்கப் பட்டுவிட்டதென்பது அவர்களுக்குப் புரியும்.''

ஆனால் காலஞ் சென்ற கலாநிதி என். எம். பெரேரா அரசமைப்பிலே இடம் பெற்றிருந்த மொழி சம்பந்தமான ஏற்பாடுகளைப் பற்றிக் குறிப்பிடுகையில்; ''அவை போதுமானவையேயல்ல; மிகக் காலந்தாழ்த்தி வழங்கப் பட்டவை'' யெனக் கூறினார். கலாநிதி பெரேரா புதிய அரசமைப்பைக் கவனமாக ஆராய்ந்ததோடு, சிறுபான்மைப் பிரச்சினைகளையும் நன்கு அறிந்திருந்தார். அவருடைய கூற்று தன்னைக் காலந் தாழ்த்தியாவது நியாயப் படுத்தும் நோக்கோடு கூறப்பட்டதெனக் கருதப்படலாம். ஆனால் அவரின் கருத்துக்கள் பொருத்தமானவையே. 1950 களில் சிங்களத்துக்கும் தமிழுக்கும் சம அந்தஸ்து வழங்கப்பட வேண்டுமென உறுதியாகக் கூறியகலாநிதி பெரேரா நாடு துண்டாடப் படுவதை ஒரு சில தசாப்தங்களுக்காக வேனும் பின் போட்டாரென பேராசிரியர் வில்சன் குறிப்பிட்டிருத்தல் ஈண்டு நோக்கற் பாலது. புதிய அரசமைப்பு பற்றிய தனது விமர்சன நூலில் கலாநிதி பெரரா பின்வருமாறு கூறுகின்றார்: ''அத்தியாயம் 4 இனித் திருப்தியைத் தராது. 20 ஆண்டுகளுக்கு முன்னர். தமிழ்ச் சமுதாயத்திற்கு திருப்தி அளித் திருக்கக் கூடிய ஒன்று; 20 ஆண்டுகளுக்குப் பின்னர் –போதுமானதாக இருக்க முடியாது. ஆரோக்கியமான இணக்கமான உறவுகள் மீண்டும் நிலை நாட்டப்பட வேண்டுமாயின் பிரதேச சுய ஆட்சியில் அமைந்த சலுகைகள் வழங்கப் பட்டே ஆகவேண்டும்.''

பல்கலைக் கழக அனுமதியில் தரப்படுத்தல் பற்றி நாம் ஏற்கனவே குறிப்பிட்டிருந்தோம். சென்ற அரசாங்கத்தின் ஆட்சிக்காலத்தில் தமிழ் இளைஞர்களை நம்பிக்கை யின்மையின் விளிம்பிற்குத் தள்ளிய நடவடிக்கை இதுவே. வெற்றிப் பெருமிதத்தில் தரப்படுத்தலைத் தாம் ஒழிக்கப் போவதாக ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் தேர்தல் முடிந்தவுடன் வாக்குறுதி அளித்தது. ஆனால் உயர்கல்விக்கான கேள்வி அதிகரித்துக் கொண்டு போகவே முன்னைய அரசாங்கத்தின்

முன்மாதிரிகையையே ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கமும் பின்பற்ற வேண்டி நேர்ந்தது. ஒழுங்கான நீண்ட கால அடிப் படையில் இப்பிரச்சினைக்கு நியாயமான சரியான தீர்வு காண அது விளையவில்லை. இனக் கோட்டா முறை மறைமுக மாக மீண்டும் புகுத்தப் பட்டது. இதற்கு முன்னோடியாக கைத்தொழில் அமைச்சர் திரு. சிறில் மத்தியூ ஒரு பெரும் நாடகத்தையே நடாத்தி முடித்தார். வினாத் தாள்களைப் பார்வையிடும் தமிழர்கள் மோசடிகளில் ஈடுபடுகின்றனர்; எனவே சிங்கள மாணவர்களின் நலன்களைப் பாதுகாப்பதற்கே இனக் கோட்டாமுறை மீண்டும் புகுத்தப் படுவது தவிர்க்க முடியாதது மட்டுமல்ல; நியாயமானதும் கூட எனச் சிறில் மத்தியூ வாதாடினார். இந்த அமைச்சர் மத்தியூ சுமத்திய குற்றச் சாட்டுக்கள் எண்பிக்கப்படவுமில்லை; அக்குற்றச் சாட் டுக்களை ஆராய்ந்து உண்மையைக் கண்டு பிடிப்பதற்கு விசார ணைக்குழு எதுவும் நியமிக்கப் படவுமில்லை. இரு சாராரிடை யேயும் வகுப்பு வாதத்தை தேவையற்றுத் தூண்டி விட்டது தான் மிச்சம். தமிழ் மக்களைப் பொறுத்த வரை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தீங்கு மட்டும் தான் விளைவித்தது. இன்றைய ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கமோ தீங்கு விளைவிப்பதோடு மட்டும் நில்லாமல் வசை மாரியையும் பொழிகின்றது.

பொதுத் துறையிலே வேலைவாய்ப்புக்களைப் பங்கிடுவதில் பாகுபாடு காட்டப்பட மாட்டாது என்ற கொள்கை இன் றைய அரசாங்கத்திலே உதட்டளவில் மட்டும் தான் கடைப் பிடிக்கப் படுகின்றது. தமிழ் பிரஜைகளைப் பொறுத்த வரை இந்த அரசாங்கம் கடைப்பிடிக்கும் வேலை வாய்ப்புக் கொள்கை முன்னைய எந்த அரசாங்கத்தையும் விட மிகப்பாகுபாடானது எனக் குற்றம் சாட்டப் பட்டுள்ளது.

அரசாங்க ஆதரவுடன் நடைபெறும் குடியேற்றத் திட் டங்களைப் பொறுத்தவரை கூட ஐக்கிய தேசியக் கட்சி அர சாங்கம் தமிழர்களின் உணர்ச்சிகளைச் சாந்தப் படுத்தத் தவறி

விட்டது. அரசாங்க ஆதரவில் நடைபெறும் குடியேற்றங்களைத் தமிழ் மக்கள் எப்போதும் எதிர்த்து வந்துள்ளனர். இதன் மூலம் தமது பாரம்பரியத் தாயகங்களிலேயே தாம் சிறு பான்மையினராக ஆக்கப்பட்டு விடுவர் என அஞ்சுகின்றனர். சிங்கள மக்கள் தாமாக விரும்பி தமிழ்ப் பகுதிகளில் குடியேறுவதை அவர்கள் ஒரு போதுமே எதிர்க்கவில்லை. சிங்களப் பகுதிகளில் காணப்படும் கணிசமான தொகைத் தமிழர்கள் அரசாங்க ஆதரவோடு அங்கு போய்க் குடியேறியவர்களல்லர். அவர்கள் தாமாக விரும்பி அங்கு சென்றனர். இந்த விடயம் குறித்து தமிழர்களின் உணர்ச்சிகளை முன்னைய பிரதமர்களான திரு எஸ். டபிள்யூ. ஆர். டி பண்டாரநாயக்காவும், திரு டட்லி சேன நாயக்காவும் புரிந்திருந்மையால் தான் சமஷ்டிக் கட்சித் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகத்துடன் அவர்கள் தனித்தனியே ஒப்பந்தங்கள் செய்தனர் இந்த ஒப்பந்தங்களிலே அங்கீகரிக்கப்பட்ட நிலைப் பாட்டையே ஐக்கிய தேசியக் கட்சி தேர்தல் விஞ்ஞாபனமும், பின்னர் வெளியிடப் பட்ட கொள்கைப் பிரகடனமும் மீண்டும் வலியுறுத்தின என அவர்கள் நம்பினர் ஆனால் தமது நம்பிக்கை தவறானது என்பதை அவர்கள் விரைவிலேயே உணர்ந்து திகைப் படைந்தனர் பயபக்தியோடு கொடுக்கப் பட்ட இன்னொரு வாக்குறுதியையும் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் வெட்கமில்லாது காற்றில் பறக்கவிட்டது. மேலும் தமிழ் மக்களுடைய அல்லது தமிழர் விடுதலைக் கூட்டணியினுடைய அச்சங்களையோ, ஆட்சேபனங்களையோ பொருட்படுத்தாது திட்டமிட்டு குடியேற்றங்களை நடாத்தும் என அரசாங்கம் கூறாமல் கூறியதோடு மட்டும் நில்லாமல் இதற்கும் ஒரு படி மேலே சென்று 3-ந் திகதி யூலை 1979-ல் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட சாதாரண தீர்மானத்தின் மூலம் மதவாச்சியின் சில பகுதிகளையும் (ஏறக் குறைய 100 க்கு 100 வீதம் சிங்களப் பகுதி) வவுனியா மாவட்டத்தையும் (பெரும்பாலும் தமிழ்ப்பகுதி) இணைக்க முயன்றது. தமிழர் பெரும் பான்மையினராக வாழ்ந்த மாவட்டத்தை சிங்களப் பெரும் பான்மை மாவட்டமாக மாற்றுவதே இந் நடவடிக்கை

யின் நோக்கமாகும். ஆனால் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி கூட இத் தீர்மானத்திற்கு எதிராக வாக்களித்தது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினரை தமது பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்திருந்த மதவாச்சி மக்களை வசதிக் குறைவுக்குட் படுத்துவதே இந் நடவடிக்கையின் நோக்கமென்றும், மதவாச்சித் தொகுதியில் தோல்வியுற்ற ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளரின் தேர்தல் எதிர்காலத்தை உய்விக்கும் நோக்கத்துடனுமே இந் நடவடிக்கை மேற் கொள்ளப் பட்டதென. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி கூறிற்று. இந்தச் ''சாதாரண தீர்மானம்'' தமிழ் மக்களைத் திகிலடையச் செய்தது தமிழர் விடுதலைக் கூட்டணி இத் தீர்மானத்தை வன்மையாகக் எதிர்த்ததோடு பாராளுமன்ற விவாதத்தின் போது பரபரப்பான முறையில் வெளி நடப்புச் செய்தது.

இந்தத் தீர்மானத்தின் முக்கிய அம்சம் ஒன்றினை இங்கு குறிப்பிட்டே ஆகவேண்டும்.—அதாவது அது கொண்டு வரப் பட்ட நேரம்—3-ந் திகதி ஜூலை 1979-ல் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப் பட்ட இத் தீர்மானம் அக்கால சட்டத்திலே நாடு முழுவதிலும் உருவாகி வந்த வகுப்பு— வாதப் பதட்டத்திற்கு வழிகோலிய ஒரு காரணியாகும். இதனை நாம் பின்பு ஆராய்வோம். யானைக்கு முன்வரும் மணியோசை போன்று வரப்போகும் நிகழ்ச்சியின் அறிகுறிகள் ஜூலை பிற்பகுதியில் தென்பட்டன. இந்தச் ''சாதாரண தீர்மானம்'' வேண்டுமென்றே வகுப்புக் கலவரத்தைத் தூண்டுவதற்கான ஒரு முயற்சியென யாரும் திட்டவட்டமாகக் கூறமுடியாது. எனினும் பாராளுமன்றத்தால் நிறைவேற்றப் பட்ட இத் தீர்மானத்தை நிறுத்தி வைப்பது என்ற அரசாங்கத்தின் பின்னைய முடிவு பலரின் மனதில் எழுந்த சந்தேகங்களை அகற்றுவதற்கு உதவவில்லை.

## 5. பொலிஸ்சும், மக்களும்:-

தனக்கு முன் ஆட்சிப் பீடத்தில் அமர்ந்திருந்த அரசாங்கங்கள் தொடக்கிச் செயற்படுத்தி வந்த இனப் பாகுபாட்டுக்

கொள்கைகளை இன்றைய அரசாங்கம் எவ்வாறு விரிவுபடுத்தியது. என்பதை இதுகாறும் விளக்கினோம். அரசாங்கம் மாறிய பின்பும், அரசின் அடக்கு முறை இயந்திரம் எவ்வாறு தமிழ் பேசும் மக்களை அடக்கி ஒடுக்கி, அச்சுறுத்துவதற்குக் கட்டவிழ்த்து விடப் பட்டதென்பதை இனி நாம் வாசகர்களுக்குத் தெரிவு படுத்துதல் வேண்டும். 1961-இலே சமஷ்டிக் கட்சியின் தலைமையில் தமிழ் பேசும் மக்கள் மேற்கொண்ட சத்தியாக்கிரக இயக்கத்தை முறியடித்து அடக்குவதற்கு யாழ்ப்பாணத்திற்கும் ஏனைய தமிழ்ப் பகுதிகளுக்கும் அனுப்பப்பட்டதோடு பொலிஸ் படையும் பலப்படுத்தப் பட்டது. அன்று தொட்டுத் தமிழ்ப் பகுதிகளிலே குறிப்பாக யாழ் மாவட்டத்தில் ஒரு பொலிஸ் அரசு தடையின்றிச் சமாந்தரமாக இயங்கி வளர்ந்துள்ளது. போரிலே கைப்பற்றப் பட்ட ஒரு பகுதியிலே நடப்பது போன்று தமிழ் மக்கள் பொலிஸ் அட்டூழியங்களுக்கு ஆளாகி வந்துள்ளனர். எத்தனையோ வருடங்களாக பொலிஸ் படையிலும் முப்படைகளிலும் இடம் பெற்று வந்த தமிழரின் தொகை குறைக்கப்பட்டு வந்ததால் தமிழ்ப் பகுதிகளிலே பெருந் தொகையான சிங்களப் பொலிஸ்காரர் கடமையாற்றி வந்தனர் என்பது விரிவாக விளக்க வேண்டியதில்லை.

தமிழ்ப் பகுதிகளிலே பொலிஸ், பொது மக்கள் உறவு சீர் குலைந்தமைக்கு தனிப்பட்ட ஒரு பொலிஸ் காரனையோ இராணுவ வீரர்களையோ அல்லது உயர் உத்தியோகத்தர்களையோ குறை கூறுவதில் அல்லது கண்டிப்பதில் அர்த்தமில்லை ஒரு தேசிய இனம் அடக்கப்படும் போது இந்த நிலைமை உருவாவது தவிர்க்க முடியாதது. இதில் அரசியல் காரணிகளும், மனிதக் காரணிகளும் கலந்திருக்கின்றன. 1961 இலிருந்து தமிழ் விரோத அரசியல் சூழ்நிலை தமிழ் பேசும் மக்களை அடக்குவதே தமது பணியெனப் பொலிஸ்சையும், இராணுவத்தையும் எண்ணத் தூண்டியிருந்தது. இந்த அரசியல் அல்லது இன வாத மேலாதிக்க உணர்வுக்கு அவர்களது மனிதக் குறைபாடுகளும் துணைபோயின. அவர்கள் தாம் முற்றிலும் அந்நியமான சமூக, பண்பாட்டுச் சூழ் நிலைக்குள் தள்ளப்பட்டு

விட்டதாக உணர்ந்தனர். இத்தகைய உணர்வில் தவறுமில்லை. தமிழ்த் தெரியாததனால் மக்களோடு எந்தவகைத் தொடர்புகளையும் மேற்கொள்ள அவர்களால் முடியவில்லை. தமிழ்ப் பகுதிகளை குறிப்பாக யாழ் மாவட்டத்தைத் " தண்டனைப் பிரதேசங்களாக " அவர்கள் கருதியதால் தமது ஆத்திரத்தை அடக்கிக் கொண்டு தான் அங்கு மாற்றலாகிச் சென்றனர். இந்த ஆத்திரத்தைப் போக்குவதற்கு ஒரே வழி அகப்பட்டவனை அடித்துத் துன்புறுத்துவதுதான். இதைக் காரணம் இருந்தோ, இல்லாமலோ அவர்கள் செய்து வந்தனர். தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர் அல்லது உதவி அரசாங்க அதிபர் தொடக்கம் மிகச் சாதாரண அப்பாவிப் பிரஜைவரை எந்த வித பாகுபாடுமின்றி பொலிசாரின் கைகளில் ஒரே வகையான " மரியாதையையே " பெற்றனர். 1970 களிலிருந்து தமிழ்ப் பகுதிகளில் அரசியல் பலாத்காரம் பரவி வந்ததோடு பொலிசாரும் எதேச்சாதிகாரமாக நடக்கத் தொடங்கியிருந்தனர். " பயங்கரவாதிகள் " என அழைக்கப்பட்டவர்களை கைது செய்வதற்குப் பதிலாக பொலிசாரே மக்கள் மீது பயங்கர வாதத்தைக் கட்டவிழ்த்து விட்டனர்.

தமிழ்ப் பகுதிகளில் பொலிசார் பயங்கர அட்டூழியங்களில் ஈடுபட்டு வந்தது பற்றி ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்திலே குறிப்பெதுவுமில்லை. ஆனால் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவின் அரசாங்கம் நீதியாகவும் பாரபட்சமின்றியும் நடக்கு மென்றும் பொலிசாரைக் கட்டுப்படுத்துவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்றும், தமிழ்ப் பகுதிகளிலுள்ள பொலிஸ்காரரின் விகிதாசாரத்தை தக்கபடி மாற்றி உள்ளூர் அதிகாரிகளுக்கு அவர்களைப் பொறுப்பாளிகள் ஆக்குமென்றும் பல தமிழர் உண்மையில் நம்பினர். ஆனால் விரும்பப்பட்ட இம்மாற்றங்களைச் செய்வதற்கு எவ்வித முயற்சியும் மேற்கொள்ளப்படவில்லை. மாறாக புதிய சட்டங்கள் மூலம் பொலிசாரின் அதிகாரங்கள் அதிகரிக்கப் பட்டன. தமிழர் விடுதலைக் கூட்டணியும், மனித உரிமைகளோடு சம்பந்தப்பட்ட நிறுவனங்களும் தமது

எதிர்ப்பைத் தெரிவித்த போதிலும் பொலிசாரின் பயமுறுத்தலும், சித்திரவதையும் தொடர்ந்து இடைவிடாது இடைவிடாது நடைபெற்று வந்தது.

யாழ்ப்பாணத்தில் அவசரகால ஆட்சி பிரகடனம் செய்யப்படுவதற்கு ஏறக்குறைய ஒரு மாதத்திற்கு முன்னர் நிர்வாக மாற்றமொன்று நடைபெற்றது. வெளிப்பார்வைக்கு அது வழக்கமானதோர் மாற்றமாகத் தான் தென்பட்டது. 1977 கடைசிக் கந்தாயத்திலிருந்து அரசாங்க அதிபராகக் கடமையாற்றி வந்த திரு. லயனல் பெர்னாண்டோ யாழ்ப்பாணத்திலிருந்து இடமாற்றம் செய்யப் பட்டார். பொலிசாரின் மிருகத் தனத்தை எதிர்த்து மிகத் தைரியமாக நின்ற ஒரே ஒரு யாழ்ப்பாணத்து (சிவில்) அதிகாரி அவர் தான். யாழ்ப்பாணத்திலுள்ள அப்பாவிப் பிரஜைகளுக்கு உதவி செய்ய அவர் தயங்கவில்லை அதுவே அவருடைய அசாதாரண நெஞ்சுறுதிக்கு நல்ல சான்றாகும். அவர் யாழ்ப்பாணத்திலே மிகக்குறுகிய காலம் பணியாற்றிய போதிலும் யாழ்ப்பாணத்திலே கடமையாற்றிய அரசாங்க அதிபர்களுள் பொது மக்களின் மதிப்பைக் கூடுதலாகப் பெற்றவர் அவரே. இரு இனங்களுக்கிடையே ஆரோக்கியமான நல்லுறவுகளைப் பேணி வளர்க்கும் கடினமான பணியிலே அவர் முன்மாதிரியாகத் திகழ்ந்தார். இத்தகைய ஒருவரைத் தான் அரசாங்கம் இடமாற்றம் செய்யத் தீர்மானித்தது. அவரின் இடத்தை நிரப்பியவர் திரு. யோகேந்திரா துரைசாமி. யாழ்ப்பாண மக்களின் அன்பையும் ஆதரவையும் பெற்ற ஒரு சிங்களவருக்குப் பதிலாக 1977 தேர்தலிலே தோல்வியுற்ற ஒரு தமிழர் நியமிக்கப் பட்டார். பின்னர் நடந்த சம்பவங்களின் போது திரு. லயனல் பெர்னாண்டோவின் அருமையைத் தாம் நன்றாக உணர்ந்தனரென இன்றும் கூட யாழ்ப்பாணத்து மக்கள் ஏகமனதாகக் கூறுகின்றனர்.

## 6. வகுப்பு வாத எரிமலை மீண்டும் வெடிக்கக் கூடிய அபாயம்.

ஐக்கிய தேசியக் கட்சியின் காட்டிக் கொடுக்கும் நாடகத்தின் இறுதிக் கட்டத்திற்கு ஏறக் குறைய வந்து விட்டோம். அதற்கு முன் அக்கட்சி கையாளும் சூழ்ச்சி அரசியல் பற்றிக் குறிப்பிட வேண்டியிருக்கின்றது தமிழ் பேசும் சிறுபான்மையினர் தொடர்ந்தும் அடக்கி ஆளப்படுவதை உறுதிப்படுத்தும் முகமாக காலனித்துவ யுக்தியான பிரித்தாளும் தந்திரத்தை அரசாங்கம் கையாண்டது. அரசியல் மட்டத்தில் தான் ஆக்கிய யாப்பையே அரசாங்கம் திருத்தியது. தமிழர் விடுதலைக் கூட்டணியிலிருந்து அரசாங்கக் கட்சிக்குத் தாவும் கட்சி மாறிகளைப் பாதுகாக்கும் பொருட்டே இத்திருத்தம் செய்யப்பட்டதை மனதிற் கொள்ளவேண்டும்.

ஆரம்பத்திலிருந்தே அரசாங்கம் இரட்டை அரசியல் வேடத்தைப் பூண்டது. அதன் தலைவர்களில் சிலர் தமிழருக்கு உருகுபவர்களாகப் பாசாங்கு செய்யும் அதே வேளையில், இன்னொருசாரார் வகுப்புத் துவேஷத்தைக் கக்கிய வண்ணமே இருந்தனர். அந்த இரட்டை வேடம் தனிப்பட்டவர்களின் போக்கெனத் தமிழர் விடுதலைக் கூட்டணி கூட ஏனோ நம்பியது அரசாங்கம் அமைக்கப்பட்ட காலத்திலிருந்தே தமிழருக்கெதிரான பிரச்சாரத்தை அரசாங்கத்தின் இனத்துவேஷக் குழு தொடர்ந்து நடத்தி வந்தது. ஜூலை 79 கிட்டியதும் தமிழருக்கெதிரான இப்பிரச்சாரம் கரை புரண்டோடியது. தனிப்பட்ட பலாத்கார சம்பவங்களை அரசாங்கம் மிகைப் படுத்தி "பயங்கரவாதம்" என்னும் பூதாகர உருவத்தை அதற்குக் கொடுக்க முனைந்தது. "பயங்கரவாதத்தை"ப் பற்றி அமைச்சர் மத்தியூ பாராளுமன்றத்தில் காரசாரமாகப் பொழிந்து தள்ளினார் "சட்டத்தின் மூலம் பயங்கரவாதத்தைத் தடுக்க முடியாது; தடுக்கவும் இயலாது. பயங்கரவாதத்தைப் பயங்கரவாதத்தால் தான் தடுக்க முடியும். வேறுவழியில் இது சாத்தியமில்லை. பயங்கரவாதிகள் பயங்கரவாதிகள் என்பதற்காகவே

கொல்லப் படவேண்டும். அவர்கள் விசர் நாய்களே ஒழிய வேறு ஒன்றுமல்ல'' இரண்டு ஆண்டுகளுக்குள் மீண்டும் ஒரு முறை வகுப்பு வாத எரிமலை வெடித்துக் கக்கக் கூடிய ஆபத்து உருவாகிக் கொண்டு வந்தது. அந்தப் பின்னணியில் வெருட்டல்களும், தமிழர் விடுதலைக் கூட்டணி பயங்கரவாதத்திற்கு உடந்தையாகவுள்ளது என்னும் குற்றச் சாட்டுகளும் தமிழர் விடுதலைக் கூட்டணி மீதும், பயங்கரவாதிகள் மீதும் கடும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றெல்லாம் பேசப்பட்டது. அரசாங்கத்தின் கட்டுப் பாட்டிற்குள் இருந்த வெகுஜன தொடர்புச் சாதனங்கள் குறிப்பாகப் பத்திரிகைகள் வெளிப்படையாகவே இனத் துவேஷத்தைத் தூண்டக் கூடிய பிரச்சாரத்தில் ஈடுபடத் தொடங்கின. ஒரு தலைப்பட்சமான செய்திகள் மூலம் சிங்கள மக்களுக்கும், தமிழ் மக்களுக்குமிடையே மோதல்களை ஏற்படுத்தக்கூடிய வகையில் அவை இயங்கி வந்தன. ஒரு அரசாங்கத் திணைக் களகத்தின் உத்தியோக பூர்வமான அஞ்சலுறையில் இனத்துவேஷத்தை அதிகம் தூண்ட வல்ல சிங்களப் பிரசுரங்கள் சிங்களப் பாடசாலைகளுக்குத் தபாலில் அனுப்பி வைக்கப்பட்டன. சிங்கள மாணவர்களும், தமிழ் மாணவர்களும் கற்ற கொழும்புப் பாடசாலைகளில் வகுப்பு வாதத்தைத் தூண்டவல்ல பேச்சுக்களை சிரேஷ்ட அரசாங்க அரசியல் வாதிகள் நிகழ்த்தினர். பிரிவினை வாதத்திற்கு எதிர்ப்பு என்ற போர்வையில் சில பௌத்த குருமாரும் 'மாதுரு பூமி' போன்ற நிறுவனங்களும் சிங்கள மக்களிடையே இனத் துவேஷத்தைத் தூண்ட முயன்றன.

இந்தச் சந்தர்ப்பத்தில் பாராளுமன்றத்திலே அமைச்சர் ஆனந்த திச டி அல்விஸ் நிகழ்த்திய உரையைக் குறிப்பிட வேண்டும்; ''இப்பொழுது இந்த நாட்டின் சிங்களப் பகுதிகளிலே சில ஆபத்தான போக்குகளைக் காணக் கூடியதாக இருக்கின்றது. நாட்டுப் பற்றால் உந்தப் பெற்ற வணக்கத்துக்குரிய பௌத்தகுருமார் கிராமம் கிராமமாகச் செல்கின்றனர். புத்த பெருமானுடைய அன்புப் போதனைகளைப் போதிக்க

வேண்டிய குருமார் ஏன் இவ்வாறெல்லாம் செய்கின்றனரெனச் சில தமிழர் கேட்கலாம். எத்தனையோ நூற்றுண்டு காலமாகத் தமது உயிரைக் கூடப் பொருட்படுத்தாமல் இந்த வணக்கத்துக்குரிய குருமார் உரிமைகளுக்காகப் போராடி வந்திருக்கா விட்டால் இன்று சிங்கள இனம் இருந்திருக்காது; இந்த நாட்டிலே பௌத்த மதமும் பூண்டோடு அழிந்திருக்கும்; இலங்கைப் பண்பாடென ஒன்று இருந்திருக்காது. நாம் பிளவு பட்டு, இந்தக் குருமாரைக் குறுகிய கட்சி நலனுக்காகப் பயன்படுத்தக் கூடாது நாம் அவ்வாறு செய்ய முனைந்தால் நாமே நமக்கு அழிவைத் தேடிக் கொள்வோம்.''

தமிழ் ஈழ இயக்கத்தை எதிர்க்கும் பொருட்டு சிங்கள மக்களிடையே இருக்கும் இருபெரும் சக்திகளும் ஒன்றிணைய வேண்டுமென இதே அமைச்சர் உணர்ச்சி ததும்ப வேண்டுகோள் விடுத்தார்; ''பாராளுமன்றத்திலும் அதற்கு வெளியேயுமுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு ஒரு வேண்டுகோள். இந் நாட்டின் வரலாற்றைத் திரும்பிப் பாருங்கள். சிங்கள மக்களை எந்தப் பயங்கரவாதமோ, எந்தத் தமிழ் ஈழ இயக்கமோ, எந்தத் துப்பாக்கியோ, எந்த வாளோ, எந்த சக்தியோ அடக்கியாளவில்லை நாம் பிளவு பட்டிருக்காதவரை. இந்தச் சந்தர்ப்பத்தில், இந்தச் சூழ் நிலையில் இப்பிரச்சினையில் சிங்களமக்களிடையே இருக்கும் இருபெரும் சக்திகளும் பாராளுமன்றத்திலேயோ, நாட்டிலேயோ பிளவுபட்டு நிற்கக் கூடாதென நான் வேண்டுகின்றேன்.''

யாழ்ப்பாணத்திலே அவசரகாலச் சட்டம் பிரகடனம் செய்யப்பட்டு ஒரு கிழமைக்குப் பின்னர் பாராளுமன்றத்திலே 1979-ம் ஆண்டு ஜூலை மாதம் 19-ந் திகதி பயங்கரவாத தடுப்பு சட்டத்தைப் பற்றி நடைபெற்ற விவாதத்தின் போது அமைச்சர் அல்விஸ் பேசியவற்றையே நாம் மேலே மேற்கோள் காட்டியுள்ளோம். அவசரகால நிலைமை பிரகடனம் செய்யப்படு முன்னரே அரசாங்கத்தின் மன நிலையை இந்தப் பேச்சு நன்கு விளக்குகின்றது. அதுமட்டுமல்ல; அத்தகைய மன நிலையை

நாட்டிலே வளர்க்க அரசாங்கம் விளைந்தது என்பதையும் இது எடுத்துக் காட்டுகின்றது. இதைவிட இன்னுமொன்று குறிப்பிடத்தக்கது தமிழர் விடுதலைக் கூட்டணியின் பேச்சாளரின் கணிப்பிலே அமைச்சர் அல்விஸ் தமிழ் மக்களைச் சாந்தப்படுத்த முயற்சிக்கும் முக்கியஸ்தர்களில் ஒருவராகவும் கருதப்பட்டார். அறிகுறிகள் தெட்டத் தெளிவாகி விட்டன. பயங்கரவாதிகளை அடக்குவது என்ற போர்வையில் அரசங்கம் அடக்குமுறைகளைக் கையாளத் தயாராகிவிட்டது. எனவே தமிழர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பது குறித்து வழமையான வாக்குறுதிகள் அளிக்கவேண்டிய தேவை மேலும் இருக்கவில்லை. அரசியற் சூழ்ச்சிகளுக்கும், தந்திரங்களுக்கும் பதிலாக வெளிப்படையாகவே அரசியல் எதிர்ப்பை நசுக்குவதற்கு வேண்டிய ஆயத்தங்கள் செய்யப்பட்டுக் கொண்டிருந்தன. யாழ்ப்பாணத்திலே இன்னொரு கொலை நடந்தால் போதும்; அதைச் சாட்டாக வைத்துக் கொண்டு அடக்குமுறை இயந்திரங்களைப் பயங்கரவாதத்திற்கும், பிரிவினைவாதத்திற்கும் எதிராக முடுக்கிவிட அரசாங்கம் தயார் நிலையிலிருந்தது.

இந்த வாய்ப்பை அரசாங்கம் 1979-ம் ஆண்டு ஜூலை மாதம் 1-ந் திகதி பெற்றது. அன்று பொலிஸ் இன்ஸ்பெக்டர் குருசாமி பயங்கரவாதிகள் என வர்ணிக்கப்பட்டவர்களால் தனது இல்லத்தில் சுட்டுக் கொல்லப்பட்டார் அரசாங்கம் மிக விரைவாகச் செயலில் இறங்கியது. 1979-ம் ஆண்டு ஜூலை மாதம் 23-ந் திகதி நடைபெற்ற அரசாங்கப் பாராளுமன்றக் குழுக் கூட்டத்தில் ஜனாதிபதி ஜெயவர்த்தனா தமிழர் விடுதலைக் கூட்டணிக்குச் சாட்டையடி கொடுத்தார். பயங்கரவாதிகளுக்கெதிரான சட்டமொன்று நிறைவேற்றப்பட இருப்பதாக அறிவித்தார். அதே நாளில் மதவாச்சியின் சில பகுதிகளை வவுனியா மாவட்டத்தோடு இணைப்பதற்கான தீர்மானத்தை அரசாங்கம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றியது. தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஆட்சேபனையை அரசாங்கம் பொருட்படுத்தவில்லை. அதே சமயம் அடிப்பதிலும், அணைப்பதிலும் வல்லவரான ஜனாதிபதி ஜெயவர்த்தனா தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு,

தமிழர் விடுதலைக் கூட்டணியைப் பொருட்படுத்தாது தானே நடவடிக்கைகள் எடுக்கப் போவதாகப் பரவலாகப் பிரச்சாரம் செய்யப்பட்டது. வடக்கிலே ''பயங்கரவாதத்தை'' ஒழிப்ப தற்கும், ஒருமாத காலத்திற்குள் தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கும் திட்டம் தீட்டும் பொருட்டு அரசாங்கத்திலே இடம் பெற்றிருந்த தமிழ் அமைச்சர்களுடன் அவர் கலந்தாலோசித்தார். தமிழர் பிரச்சினையைத் திர்ப்பதற்கு, ஆட்சியைப் பரவலாக்கும் முறை குறித்து தகவுரை செய்யும் பொருட்டு ஆணைக்குழு ஒன்றினை நியமிப்பதெனத் தான் தீர்மானித்துள் ளதாக அவர் அறிவித்தார். ஜனாதிபதி இவ்வாறு திருவாய் மலர்ந்து கூறியவாத்தையெல்லாம் அரசாங்கக் கட்டுப்பாட் டிற்குள் இருந்த பத்திரிகைகள் கொட்டை எழுத்துக்களில் வெளியிட்டன. ஆனால் அரசாங்கத்தின் உண்மையான நோக் கங்கள் ஜூலை மாதம் 12-ந் திகதி அம்பலமாகின. அன்று யாழ்ப்பாணம் மீது அவசரகால ஆட்சி கவிந்தது.

## 7, அவசரகால சட்டத்தின் கீழ் யாழ்ப்பாணம்

அவசரகால நிலைமை பிரகடனம் செய்யப்பட்டதும் வெறுக் கத்தக்க அவசரகால சட்டத்தின் கீழ் இயற்றப்பட்ட, 69 சட்ட ஏற்பாடுகள் நடைமுறைக்கு வந்தன. 24 மணித்தியா லத்திற்கு மேல் ஒருவரைக் கைது செய்து பாதுகாப்பில் வைத் திருக்க முடியாது என்ற சாதாரண சட்டமும், திடீர் மரணங் கள் ஏற்படுமாயின் அவ்வாறு இறந்தவர் அடக்கம் செய்யப் படுவதற்கு முன் நீதி விசாரணை நடாத்தப் படவேண்டும் என்ற சாதாரண சட்டமும் தடுத்து வைக்கப்பட்டன. இது யாழ்ப் பாண மக்களுக்கு ஆபத்து வரபோவதைக் கட்டியங் கூறிற்து. யாழ்ப்பாணத்தில் பரபரப்பான சூழ்நிலை நிலவிற்று. ஆனல் இரண்டு நாட்களும் ஒரு இரவும் கழிந்த பின்னர் தான் அசம் பாவிதம் நிகழ்ந்தது. ஜூலை மாதம் 13-/ 14-ந் திகதி இரவு மின்னல் போன்று அவசரகாலம் யாழ்ப்பாணத்தைத் தாக்கிற்று. எத்தனையோ இளைஞர்கள் தமது வீடுகளிலிருந்து கடத்திச்

செல்லப்பட்டனர். அன்று இரவு இவ்வாறு கொண்டு செல்லப் பட்ட இளைஞர்களில் 6 பேர் திரும்பி வரவேயில்லை. இருவரின் சடலங்கள் கோரமாகச் சிதைக்கப்பட்ட நிலையில் பண்ணைப் பாலத்தில் கிடந்தன. அவர்களில் ஒருவர் எஸ். விஸ்வஜோதி ரட்ணம் அல்லது ' இன்பம் ' என அழைக்கப்பட்டவர் 27 வயது நிரம்பிய இவர் மானிப்பாய் தேர்தல் தொகுதியி லுள்ள நவாலி ஒன்னும் கிராமத்தைச் சேர்ந்த சமூகப் பணி யாளர். துரையப்பா கொலை வழக்கில் குற்றஞ் சாட்டப்பட் டவர்களில் இவரும் ஒருவர். ஆனால் அவ்வழக்குத் தள்ளுப் பட்ட பின் சாதாரண வாழ்க்கை வாழ்ந்து வந்தார்.

ஜுலை மாதம் 14-ந் திகதி ஏறக்குறைய விடியற் காலை 1-00 மணிபோல் தனது வீட்டின் முன் விறாந்தையில் படுத்தி ருந்த இன்பத்தின் தகப்பனார் யாரோ முன் பின் தெரியாத ஒருவர் அடித்த ரோச் லைற் ஒளியில் எழுந்தார். அந்த உருவம் "இன்பம்" எனக் கூப்பிட்ட —வாறு வெளியில் நின்று யன் னலின் ஊடாக ரோச் ஒளியைப் பாய்ச்சிக் கொண்டிருந்தது. தகப்பனார் முன் கதவைத் திறந்தார். வெளியே பல ஆண் கள் நின்றனர். காக்கிக் காற் சட்டையும் வெள்ளை பனியனும் அணிந்திருந்த இவர்கள் ஆயுத பாணிகளாகக் காணப்பட்டனர். அவர்களிடம் "றிவோல்வரும்"' "ஸ்ரென் துப்பாக்கி" (sten gun) யும் இருந்தன. அவர்கள் சீருடை அணிந்திருக்க வில்லை. அடையாள இலக்கங்களும் இல்லை. பிடிவிறுந்தோ, கைது செய்வதற்கான ஆணையோ அவர்களிடம் இருக்கவில்லை. யாழ்ப்பாணக் குடா நாட்டிலே உள்ள ஒரு குக்கிராமத்தில் வாழ்ந்த ஒரு எழுதுவினைஞரின் வீட்டிற்குள் புகுவதற்கு இவை யெல்லாம் தேவையில்லைப் போலும். "இன்பம் எங்கே" எனக் கேட்டவாறு ஆணவத்தோடு அவர்கள் உள்ளே பாய்ந்தனர். அந்தச் சின்னஞ் சிறு வீட்டிலிருந்த ஒரே அறையில் படுத் திருந்த ஒன்றுமறியாத இளைஞன் சரியாக விழித்தெழாத நிலையில் வெளியே வந்தான். வீட்டிற்குள் புகுந்த கோஷ்டி யின் தலைவன் இன்பத்தை சறத்திலே பிடித்தவாறு அவனைத் தம்மோடு கூட்டிச் செல்வதாக தடுமாறிக் கொண்டிருந்த

குடும்பத்தினருக்கு அறிவித்தான். இன்பத்தை மட்டும் அவர்கள் கூட்டிச் செல்லவில்லை. அவருக்குத் துணையாக இன்பத்தின் மச்சானையும் கூட்டிச் சென்றனர். 29 வயது நிரம்பிய சரவணமுத்து செல்வரட்ணம் என்பவர் இன்பத்தின் தங்கையான ரட்ணராணி என்பவரைத் திருமணம் செய்திருந்தார். அவர்களுக்கு 5 மாதக் கைக்குழந்தை ஒன்று இருந்தது. செல்வரட்ணம் முன்பு எந்த விதத்திலும் இந்தச் செயலில் ஈடுபடாதவர் சவுதி அரேபியாவிற்கு ''வெல்டராக'' வேலை செய்யும் பொருட்டு வேண்டிய பிரயாணப் பத்திரங்களையெல்லாம் பெற்றுக் கொண்டு உறவினருக்குப் பிரியாவிடை கூறிச் செல்வதற்காக கொழும்பிலிருந்து திரும்பி வந்திருந்தார். ஆனல் பழங்காலத்து யாழ்ப்பாண மக்கள் கூறுவது போன்று விதி விளையாடியது. இன்பத்தையும், அவரது மச்சானையும் அன்று தான் குடும்பத்தினர் இறுதியாகப் பார்த்தனர். கவலையோடு இருந்த தகப்பனுருக்கு அடுத்த நாள் காலையில் செய்தி எட்டியது. பண்ணைப் பாலத்திலே இரு சடலங்கள் கிடப்பதாக செய்தி வந்தது. சடலங்கள் கோரமாகச் சிதைக்கப் பட்டிருந்த போதிலும் அவை தமது மகனினதும், மருமகனினதும் சடலங்கள் என அவர் அடையாளம் கண்டு கொண்டார்.

சனிக்கிழமை 1979-ம் ஆண்டு ஜூலை மாதம் 14-ந் திகதி காலை; யாழ்ப்பாணம் விழித்தெழுந்த போது இரவு நடந்த இரகசியக் கொலைகள் பற்றி ஒன்றும் தெரிந்திருக்கவில்லை. ஆனல் விரைவில் செய்திகள் மெல்ல மெல்லப் பரவத் தொடங்கின. பரவைக் கடலிலே மீன் பிடித்துக் கொண்டு இருந்த மீனவர்களும், அந்தப் பாலத்தில் அதிகாலையில் சென்ற பஸ்களிலே இருந்த பிரயாணிகளும், அவ்வீதிகளிலே வாகனங்களிலே சென்றவர்களும் அவ்விரு சடலங்கள் பற்றிக் குசுகுசுக்கத் தொடங்கினர். ஆனல் இவற்றை விட இன்னும் எவ்வளவோ அம்பலமாக இருந்தன.

அதே இரவு அதே கிராமத்தில் இன்பத்தின் வீட்டிலிருந்து 2 மைல்களுக்குள் அமைந்திருந்த ஒரு வீட்டிலிருந்தே இன்னேர் இளைஞனை 22 வயது நிரம்பிய ரீ. எஸ். பாலேந்திரா

பவரை நாங்கு பேர் நடத்திக் கூட்டிச் சென்றனர். வயது முதிர்ந்தவரான அவருடைய தாயாரும், சகோதரியும் எவ்வளவோ கெஞ்சியும் பலன் கிடைக்கவில்லை. இந்த நால்வரும் பொலிஸ் படையைச் சேர்ந்தவர்கள் போல் காட்சியளித்தனர். இவ்வாறு கூட்டிச் செல்லப்பட்ட பாலேந்திரா வீடு திரும்பவில்லை. அவர் இறந்து விட்டதாக நம்பப்படுகின்றது.

அதே இரவு யாழ்ப்பாண நகரிலுள்ள சட்டநாதர் கோவில் வீதியில் ஆயுதம் தாங்கிய, ஆனுல் சீருடை எதுவும் அணியாத ஒரு கோஷ்டியினர் சந்திரசேகரம் என்ற ஏழைச் சாஸ்திரியாரின் வீட்டின் மீது படையெடுத்தனர். சந்திரசேகரத்தின் இரு பெண்களை மணந்திருந்த இரு சகோதரர்களான எஸ். பரமேஸ்வரனையும், எஸ். ராஜேஸ்வரனையும் அவர்கள் கூட்டிச் சென்றனர். மூத்த சகோதரரான ராஜேஸ்வரனுக்கு ஏழு மாதக் குழந்தை ஒன்று இருந்தது. சிறிய மரக்காலை ஒன்றை அவர் நடாத்தி வந்தார். அவருடைய இளைய சகோதரன் மிக அமைதியானவர். குடிப்பழக்கம் எதுவுமற்ற அவர் சிறு அளவில் உப்பு வியாபாரம் செய்து வந்தார். அவருடைய மனைவி கருவுற்றிருந்தார். இரு சகோதரர்களும் கொல்லப்பட்டு விட்டதாக நம்பப்படுகின்றது. இளையவனின் மனைவி இப்போது குழந்தை பெற்று விட்டாள். இரு பெண்களும் கைக்குழந்தைகளோடு நிற்கும் காட்சி எவருடைய உள்ளத்தையும் நெகிழச் செய்யும்.

பலியிடப்பட்ட 6-வது நபர் யாழ்ப்பாணம் 54, பருத்தித்துறை வீதியைச் சேர்ந்த ஐயாத்துரை இந்திரராஜன் என்பவராவர். 19 வயதான இவர் யாழ்ப்பாண ஆயுள் வேத மருத்துவக் கல்லூரியில் முதல் ஆண்டு மாணவனுக இருந்தார் இவருடைய தாயார் ஒரு விதவை. ஜுலை மாதம் 14-ந் திகதி தொடக்கம் இவர் காணப்படாததைத் தொடர்ந்து பீதியுற்ற தாயார் யாழ்ப்பாணப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. வி. யோகேஸ்வரனிடம் சென்ருர். தனது மகன் சிறையிலிருப்பதாக அங்கு அறிந்தார். ஆனுல் மகன் ஆஸ்பத்திரி அனுமதிக்கப் படும் வரை தாயாரால் அவரைக் காணமுடிய

வில்லை. ஜூலை மாதம் 21-ந் திகதி அவர் மருத்துவ மனையில் இறந்தார். இடுப்பிற்குக் கீழே 37 காயங்களும் மூக்கிற்கு மேல் ஒரு காயமும், முகத்தில் எரிகாயங்களும், நகங்கள் அரை குறையாக வெளி இழுக்கப் பட்டிருந்தமையும் மருத்துவ பரிசோதனையில் தெரிய வந்தன.

கொழும்பிலிருந்த தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் ஜனாதிபதி ஜெயவர்த்தனவிடம் முறையிட்டனர். 13/14 -ந் திகதி இரவு நடைபெற்ற கொலைகளில் பொலிசார் சம்பந்தப் பட்டிருப்பதாக அவர்கள் குற்றம் சாட்டினர். நீதி விசாரணையின்றிச் சடலங்களை அடக்கம் செய்ய அனுமதித்த அவசர கால சட்ட ஏற்பாடு உடனடியாக வாபஸ் பெறப்பட்டது. ஆனால் ஏற்கனவே யாழ்ப்பாணக் குடாநாடு மீது தனது இராணுவப் படையின் முழுப்பலத்தையும் ஜனாதிபதி கட்டவிழ்த்து விட்டிருந்தார். 15-ந் திகதி வெளிவந்த தினசரிகள் பிரிகேடியர் வீரதுங்கவிற்கு ஜனாதிபதி வழங்கிய ஆணையை வெளியிட்டன. 1979 ஜூலை 12 எனத் திகதியிடப்பட்ட இவ்வாணை வருமாறு: ''இலங்கையிலும் குறிப்பாக யாழ்மாவட்டத்தில் இருந்தும் சகல விதமான பயங்கரவாதத்தையும் ஒழித்துக் கட்டுக.'' அரசின் சகல சாதனங்களும் பிரிகேடியர் வீரதுங்கவிற்கு வழங்கப் பட்டன. யாழ்ப்பாணத்திலிருந்த மூன்று அதிகாரிகளான திரு. யோகேந்திரா துரைசாமி, பிரிகேடியர் எஸ். ரி. சி. ரணதுங்க, டி. ஐ. ஜி.-எல். டீ. சி. கெரத் ஆகியோருக்கு, பிரிகேடியர் வீரதுங்கவிற்கு வேண்டிய உதவிகளை நல்குமாறு ஆணையிடப் பட்டது.

ஜனாதிபதியின் ஆணையைச் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிப் பிரதித் தலைவர் திரு. மைத்திரிபால சேனநாயக்கா (பா- உ.) வன்மையாகவும் கண்டித்தார்; ''1979- ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31- ந் திகதிக்கு முன்னர் சகல விதமான பயங்கர வாதத்தையும் ஒழித்துக் கட்டுமாறு ஜனாதிபதி யாழ்ப்பாணத்திலுள்ள முப்படைத் தளபதிக்குப் பிறப்பித்துள்ள ஆணை யூதப் பிரச்சினைக்கு இறுதித் தீர்வு காண்பதற்கெனத் திகதி குறித்த ஹிட்லரின் ஆணைக்கு ஒப்பாகும். இராணுவ நடவடிக்கையின்

மூலம் வடபகுதியிலுள்ள தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணமுடியாது. காலம் பிந்திய இக்கட்டத்திலேயாவது ஒரு அரசியல் தீர்வைக் காணவிளையுமாறு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அரசாங்கத்தை வேண்டுகின்றது.

அரசாங்கத்திற்கு ஆதரவாக அமைச்சர் ஆனந்த திசடி அல்விஸ் மீண்டும் எழுந்தார். திரு ஜெயவர்த்தனவின் செயல்களை வாயாரப் புகழ்ந்து அவர் பேசியதை நாம் கீழே தருகின்றோம்; —எமது இடையீடு எதுவுமின்றி; ''ஒரு காலத்திலே ஸ்ரீ ஜயவர்த்தன புரக் கோட்டையிலிருந்து பெருந் தளபதியான சப்புமால் என்ற இளவரசன் யாழ்ப்பாணம் சென்று ஆயுதபலத்தால் அதைக் கைப்பற்றினன். இத்தீவு முழுவதும் ஒரே கொடியின் கீழ் கொண்டுவரப் பட்டது. இப்பொழுதும் ஜெயவர்த்தன யுகம் எனப்படும் இக்கால கட்டத்தில் அவர் நாட்டை ஒன்றுபடுத்துவாரென வரலாறு கூறும் ஆயுதபலத்தால் அல்ல; நீதியினதும், ஒற்றுமையினதும் பலத்தால் அதை அவர் சாதிப்பார். பாராளுமன்றத்திலும், வெளியேயும் நீதியும் மக்கள், ஒற்றுமையும் நிலவும். அஃதின்றி நாம் எதுவும் சாதிக்கமுடியாது''.

இது எவ்வாறுயினும் பிரிகேடியர் வீரதுங்க யாழ்ப்பாணத்திற்குப் புறப்படுமுன்னர் எதிர்க்கட்சித் தலைவர் திரு. அமிர்தலிங்கத்தினதும், தமிழர் விடுதலைக் கூட்டணித்தலைவர் திரு. எம். சிவசிதம்பரத்தினதும் முன்னிலையில் அவருக்கு ஜனாதிபதி திரு. ஜெயவர்த்தன சில அறிவுறுத்தல்களை வழங்கினர். இச் சந்திப்பை திரு. சிவசிதம்பரம் பாராளுமன்றத்தில் வருமாறு வர்ணித்தார்; ''கௌரவ சபாநாயகர் அவர்களே அவசர காலம் பிரகடனம் செய்யப் பட்டதும், யாழ்ப்பாணத்திலே சில மரணங்கள் நிகழ்ந்ததும்—நானே, வேறு உறுப்பினர்களோ அதுபற்றி எதுவும் குறிப்பிடமாட்டோம். ஏனென்றால் இச் சபையின் தெரிவுக்குழு விசாரணை நடாத்தி வருகின்றது — கௌரவ எதிர்க்கட்சித் தலைவரும் நானும் ஜனாதிபதியின் அழைப்பை ஏற்று அவரைச் சென்று சந்தித்தோம். ஜனாதிபதியுடன் கௌரவப் பிரதமரும், பிரிகேடியர் வீரதுங்கவும்

கூட இருந்தனர். பிரிகேடியர் வீரதுங்கவிடம் கௌரவ ஜனாதிபதி இரண்டு மூன்று விடயங்களை மிகத் திட்டவட்டமாக அழுத்திக் கூறினார். 1-வதாக ஒருவரைக் கைது செய்வதானால் 'ஏ. எஸ். பி.' பதவிக்குக் குறையாத ஒருவராலேயே அவ்வாறு கைது செய்யப்படல் வேண்டும். 2-வதாக ஒருவர் கைது செய்யப்படும் போது அவருடைய உறவினர்களுக்கு கைது செய்பவர்களின் பெயர்களும் அடையாளமும் கொடுக்கப்படல் வேண்டும். 3-வதாக கௌரவ ஜனாதிபதி பிரிகேடியர் வீரதுங்கவிற்கு கூறினார்; ''கைது செய்யப் படுபவர்களின் உயிர்களை உமது பொறுப்பிலேயே ஒப்படைக்கின்றேன். எந்த வித சித்திரவதையும் இருக்கக் கூடாது.'' பிரிகேடியர் வீரதுங்க யாழ்ப்பாணத்திற்கு உயர் அதிகாரியாகச் செல்லு முன்னர் இவையே கௌரவ ஜனாதிபதியால் திட்டவட்டமாகக் கூறப்பட்டவை.

விமானம் மூலம் பிரிகேடியர் வீரதுங்க யாழ்ப்பாணத்துக்குச் சென்று ஜூலைமாதம் 17-ந் திகதி பொறுப்பேற்றார். ஆரம்பத்திலே மக்களின் அன்பைப் பெற அவர் முயன்றார், 13/14 ந் திகதி இரவு கொலை செய்யப்பட்டவர்களின் இல்லங்களுக்குச் சென்றார். யாழ்ப்பாணத்திலுள்ள பிரசித்தமான கோயில்களிலே பிரிகேடியர் வீரதுங்கவினால் அர்ச்சனை செய்விக்கப்பட்ட போது எடுக்கப்பட்ட படங்கள் பத்திரிகைகளிலே பிரசுரிக்கப்பட்டன. ஆனால் இஷ்ட தெய்வங்களுக்குப் பூசை செய்ய பிரிகேடியர் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பப்படவில்லை. அவருடைய பணி மிகத் தெளிவானது: அது ''பலாத்காரத்தை'' ஒழித்துக்கட்டல் ஜனாதிபதியின் திட்டவட்டமான ஆணை அவருக்குப் பிறப்பிக்கப்பட்டிருந்தது. பின்னர் நிகழ்ந்த சம்பவங்களிலிருந்து இவ்வாணை முற்றுமுழுதாக நிறைவேற்றப்பட்டது என்பது தெளிவாகும்.

17-ந் திகதிக்குப் பின்னர் கொலைகள் எதுவும் நடைபெறவில்லை. ஆனால் ஆட்கள் கைது செய்யப்பட்டனர்; சித்திர

வதைகள் தொடர்ந்து நடைபெற்றன. முன் எப்பொழுதும் யாழ்ப்பாணத்தில் காணப்படாத அளவில் ஆட்கள் எதேச்சாதிகாரமாக கைது செய்யப்பட்டனர். கைது செய்தல் பற்றியும் தடுப்புக் காவல் பற்றியும் ஜனாதிபதி வழங்கிய அறிவுறுத்தல்கள் மீறப்பட்டன. பல தடவைகளிலே சீருடை அணியாத பாதுகாப்புப் படையினர் ஆட்களைக் கைது செய்யும்போது தமது அடையாளத்தையோ, பதவியையோ அம்பலப்படுத்தவில்லை. கைது செய்யப்பட்டவர்கள் எங்கு கொண்டுசெல்லப்படுகின்றனர் என்பது உறவினருக்கு அறிவிக்கப்படவில்லை. வீதிகளிலும், வேலைத்தலங்களிலும், வீடுகளிலும் ஆட்கள் கைது செய்யப்பட்டனர். யாழ்ப்பாணத்திலேயோ. வேறு தமிழ்ப் பகுதியிலேயோ இருந்த எந்த வீடும் பாதுகாப்பான இடமாக இருக்கவில்லை இவர்கள் கைது செய்யப்பட்ட நேரமும், முறையும் பெரும்பாலும் விளங்க முடியாதவையாய், மன்னிக்க முடியாதவையாய் இருந்தன. பணயக் கைதிகளாகச் சிலர் கைது செய்யப்பட்டனர்; தேடப்பட்டு இன்னும் சிக்காமலிருந்த இளைஞர்களின் உறவினர்கள் பணயக் கைதிகளாகக் கொண்டு செல்லப்பட்டனர் தேடப்பட்டவர்கள் சரணடையும்வரை நிரபராதிகள் தவறுதலாகவோ, பிழையான தகவல்களாலோ அல்லது எந்தவித காரணமுமின்றியோ கைது செய்யப்பட்டு மிக மோசமான முறையில் விசாரணை செய்யப்பட்டு, பல தடவைகளிலே சித்திரவதை செய்யப்பட்டு இறுதியிலே எந்தவித குற்றச்சாட்டுகளும் சுமத்தப்படாது விடுதலை செய்யப்பட்டனர். அரசாங்கத்திற்கு எதிராக சட்டத்திற்குட்பட்ட அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்களுக்கு வேண்டுமென்றே தொல்லை கொடுக்கப்பட்டது. யாழ்ப்பாண மாவட்டத்தில் மட்டுமல்ல ஏனைய தமிழ்ப் பகுதிகளிலும் கொழும்பிலும்கூட ஆட்கள் கைது செய்யப்பட்டனர். யாழ் மாவட்டத்தில் அமுலிலிருந்த அவசரகால சட்டத்திற்குள் தஞ்சம் தேடும் நோக்குடன் இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் இரவோடு இரவாக யாழ்ப்பாணத்திற்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

தனிப்பட்டவர்கள் கைது செய்யப்பட்டதைத் தவிர யாழ்ப்பாணத்திலே கிராமங்கள் தோறும் முகாமிட்டிருந்த பாதுகாப்புப் படையினர் தேடுதல் வேட்டைகளை நடாத்தினர். 1979, ஆகஸ்ட் 21-ந் திகதி இரவு 10-00 மணி தொடக்கம் அடுத்த நாள் அதிகாலை 2-00 மணி வரை யாழ் குடா நாட்டிலுள்ள 5 கிராமங்கள் — வளலாய், இடைக்காடு, தம்பாலை, கதிரிப்பாய், பத்தமேனி வடக்கு — இராணுவத்தினராலும், கடற்படையினராலும் முற்றுகையிடப்பட்டன. இயந்திரத் துப்பாக்கிகளைத் தாங்கிய இவர்கள் ஜீப்களிலும், ரக்குகளிலும், கவச வண்டிகளிலும் வந்திருந்தனர். வீடு வீடாகச் சோதனையிடப்பட்டது. இறுதியாக அடையாள அணிவகுப்பொன்று நடாத்தப்பட்டது. கிராமங்களிலிருந்த இளைஞர்கள் வரிசையில் நிறுத்தப்பட்டனர். முகமூடி அணிந்த 3 உளவாளிகள் 17 இளைஞர்களைச் சுட்டிக் காட்டினர். அவர்கள் கைது செய்யப்பட்டுப் பாதுகாப்புப் படையினரால் அப்புறப்படுத்தப்பட்டனர்.

ஒரு கிழமைக்கு முன்னர் ஆகஸ்ட் மாதம் 14-ந் திகதி நூற்றுக்கணக்கான பொலிசாரும் இராணுவத்தினரும் நெடுங்கேணியிலுள்ள "கென்ற் பாமையும்" (Hent Farm) "டொலர் பாமையும்"(Dollar Farm) மத்தியானம் 1-00 மணி தொடக்கம் பின்நேரம் 6-00 மணிவரையும் முற்றுகையிட்டனர். கமத்தில் தொண்டர்களாகப் பணியாற்றிய நால்வரை இவர்கள் கைது செய்தனர். இந்த நால்வரும் 77-ம் ஆண்டு ஆகஸ்டில் நிகழ்ந்த வகுப்புக் கலவரங்களுக்குப் பின்னர் அகதி முகாம்களிலிருந்து இங்கு வந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாண வீதிகளிலே கடும் தேடுதல் வேட்டைகள் நடாத்தப்பட்டன இதனால் மக்களுக்கு எவ்வளவோ அசௌகரியங்கள் ஏற்பட்டன. நேரத்தைப் பொருட்படுத்தாது பஸ்களை நடுத்தெருவில் நிறுத்தி, கைகளை உயர்த்திய வண்ணம் பிரயாணிகளைக் கீழே இறங்குமாறு உத்தரவிடுதல் சர்வசாதாரணமான ஒரு நிகழ்ச்சியாயிற்று. இத்தகைய "தடுத்து

திருத்தித் தேடுதல்'' வேட்டைகள் பஸ்களோடு மட்டும் நின்று விடவில்லை. தனிப்பட்டவர்களின் கார்களும் தடுத்து நிறுத் தப்பட்டு சோதனையிடப்பட்டன. அவசரகாலம் பிரகடனம் செய்யப்படும் முன்னரே இது வழக்கமாகிவிட்டது. ஒரு முறை எதிர்க்கட்சித் தலைவரும் வேறு பாராளுமன்ற உறுப்பினர்க ளும் பிரயாணம் செய்த கார் தடுத்து நிறுத்தப்பட்டு சோதனை யிடப்பட்டது. எத்தனையோ சட்டங்கள் மேற்கோள் காட்டப் பட்டுச் சட்டத்தின் போர்வையில் இந்தப் பொலிஸ் நடவ டிக்கை பாராளுமன்றத்தில் நியாயப்படுத்தப்பட்டது.

அவசரகாலத்தின் போது யாழ்ப்பாணத்தில் மட்டுமல்ல இலங்கையிலே எந்தப் பகுதியிலே வாழ்ந்த தமிழருக்கும் உயிர் ஆபத்து ஏற்பட்டிருக்கக் கூடுமென்பதை திருமதி சேவியருக்கு நடந்த சம்பவம் சான்று பகரும். திருமதி சேவியரின் கணவ ரும் ஒரு தமிழன். ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் பொறி யியலாளராக அவர் பணியாற்றி வந்தார். சொய்சாபிலுள்ள பெயர்போன குடியிருப்புப் பகுதியில் இத்தம்பதிகள் வசித்து வந்தனர். சம்பவம் நடைபெற்ற நாள் 1979, செப்ரெம்பர் 5-ந் திகதி, போயா தினம். புத்தர் ஞான ஒளி பெற்ற தினத்தை நினைவூட்டும் நாள் தியானத்திலே நாளைக் கழிப்ப தற்காக இந்த நாள் பெரும்பான்மைப் பௌத்தர்களின் நன்மை கருதி அரச விடுமுறையாகப் பிரகடனம் செய்யப்பட் டுள்ளது. இத்தகைய சமய முக்கியத்துவம் வாய்ந்த நாளில் சேவியர் தம்பதிகள் இரவு 8-30 மணிபோல் வீட்டைநோக்கிக் கால் நடையாகச் சென்றுகொண்டிருந்தனர். தமது வீட்டி லிருந்து ஒரு சில யார்களுக்கப்பால் இவர்கள் நடந்து வந்து கொண்டிருந்தபோது கார் ஒன்று திடீரென இவர்களுக்கு அருகே வந்து நிறுத்தப்பட்டது. காரிலிருந்து நால்வர் வெளியே பாய்ந்து வந்தார்கள். மூவர் சாரம் அணிந்திருந்தனர். நான் காவது பேர் அரைக்காற்சட்டை அணிந்திருந்தார். இவர்க ளில் மூவர் திருமதி சேவியரைத் தூக்கிக் காருக்குள் தள்ளி னார்கள். நான்காவது நபர் கணவனை வீதியிலே தள்ளிவிட் டார். திருமதி சேவியர் கூக்குரலிட்டும் கார் பறந்து சென்

றது. தனது மனைவியை யாரோ கடத்திச் சென்றுவிட்டார்கள் என்ற நினைப்பில் இருதய நோயாளியான கணவர் அண்மையிலிருந்த வானொலி நிலையத்திற்கு ஓடிச்சென்று, பின்னர் கறுவாக் காட்டுப் பொலிஸ் நிலையத்திற்குச் சென்றார். மனைவி வெள்ளவத்தை பொலிஸ் நிலையத்திலிருப்பதாக அங்கு அறிவித்தனர். இதற்கிடையில் வெள்ளவத்தைப் பொலிஸ் நிலையத்திலிருந்த மனைவி தொலைபேசி மூலம் தனது வீட்டோடு தொடர்பு கொண்டு, பிள்ளைகளோடு கதைப்பதற்கோ அல்லது கணவனைப்பற்றி விசாரிப்பதற்கோ அனுமதிக்கப்படவில்லை. இவர் பதகளிப்படைந்து அழுத வண்ணமே இருந்தார். இறுதியாகக் கணவன் வந்தபின்னர், தவறுதலாக அடையாளம் காட்டப்பட்டதன் விளைவாக ''பயங்கரவாதி'' என இவர் கைது செய்யப்பட்டுள்ளதாக அவர்கள் அறிவித்தனர். ஆனால் இத்தோடு இச்சோக நாடகம் முடியவில்லை. இவர்கள் உடனடியாக விடுதலை செய்யப்படவுமில்லை யாழ்ப்பாணத்திலிருந்து புது உத்தரவுகள் வந்திருந்தன. பிரிகேடியர் வீரதுங்க தான் இவற்றைப் பிறப்பித்திருக்க வேண்டுமென ஊகிக்க வேண்டியுள்ளது இருவரும் பாதுகாப்பில் வைக்கப்பட்டு அடுத்த நாள் மத்தியானம் யாழ்ப்பாணத்திற்குக் கொண்டு செல்லப்பட்டனர். நல்லவேளையாக இவர்களுடைய உறவினர்களும், நண்பர்களும் செல்வாக்குடையவர்களாக இருந்ததனால் எல்லா வசதிகளோடும் அவர்கள் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பப்பட்டு அங்கு சௌகரியமாக இருந்தனர். இவர்கள் அதிர்ச்சியடைந்த போதும் யாழ்ப்பாணத்தில் ஒன்றரை நாட்களுக்கு மேலாக கடும் விசாரணைக்குட்படுத்தப்பட்டனர். இவர்களைப் பற்றி மட்டுமல்ல இவர்களுடைய உறவினர்கள். நண்பர்கள் எல்லோரையும் பற்றிப் பூரண அறிக்கைகள் தயாரிக்கக்கூடிய அளவிற்கு விசாரணைகள் நடாத்தப்பட்டன. சனிக்கிழமை இரவு 11-30 மணியளவில் இத்தம்பதிகள் மீண்டும் கொழும்பிற்குக் கொண்டுவரப்பட்டனர். ஏறக்குறைய 72 மணித்தியாலங்கள் இவர்கள் பாதுகாப்பில் இருந்தனர். இவர்கள் சித்திரவதைக்குட்படுத்தப்படாதது இவர்களின் அதிஷ்டம் என்றே கூறுதல் வேண்டும். இவர்களுடைய உறவினர்கள் பெரிய இடத்

தவர்களாக இருந்தாலும், இவர்களுக்கும் பயங்கரவாத நடவடிக்கைகளுக்கும் தொடர்பு இருந்ததற்கான சான்றுகள் இல்லாததினாலுமே இந்த நற்பேறு இவர்களுக்கு வாய்த்தது. இத்தம்பதிகளைப் பின்னர் ஜனாதிபதி அழைத்து மன்னிப்புக் கோரினாரென அறியப்படுகின்றது;

இவர்களைப்போன்று எத்தனையோ பேர் நிரபராதிகளாக இருந்தும் சித்திரவதையிலிருந்து தப்பும் நற்பேறு கிட்டவில்லை ஜனாதிபதி மன்னிப்புக் கோரும் அனுபவமும் இவர்களுக்கு வாய்க்கப்பெறவில்லை. இத்தகைய துர்ரதிஷ்டசாலிதான் திருச்செல்வம் என்ற இளைஞன். இவர் யாழ்ப்பாணத்திலுள்ள 'றீகல்' தியேட்டர் காவலாளி. இவர் புரிந்த ஒரே ஒரு "குற்றம்" இதுதான்: இவர் தனது சாதாரண கடமை நேரத்தில் சில இராணுவ அதிகாரிகளிடம் ஜீப்பைக் கொட்டகைப் படலைக்கு வெளியே நிற்பாட்டுமாறு அவர்களைக் கேட்டுக்கொண்டார். உள்ளே நெரிசல் ஏற்படாது தடுப்பதற்காகத்தான் இவர் அவ்வாறு கேட்டார். அடுத்த நாள் இவர் கூட்டிச் செல்லப்பட்டுத் தாக்கப்பட்டார். சுவரொட்டிகளை இவரது உடம்பிலே ஒட்டி, சுலோக அட்டையை இவரது வாயிலே திணித்து யாழ்ப்பாணத் தெருக்களினூடாக அவர் பவனி கொண்டு செல்லப்பட்டார். இந்த உலா ஏறக்குறைய மூன்று நான்கு மணித்தியாலங்கள் நீடித்தது. இறுதியாக ஒரு பெண்கள் பாடசாலைக்கு முன்னால் முழங்கால் தாழிட்டு இருக்குமாறு பணிக்கப்பட்டார். அப்பொழுதும் சுவரொட்டிகளும், சுலோக அட்டைகளும் அப்படியேயிருந்தன.

மயிலிட்டியைச் சேர்ந்த திரு. சிவனடியார் பணயக்கைதியாகக் கைது செய்யப்பட இன்னொரு துர்ரதிஷ்டசாலி. அவருடைய மருமகள் பாதுகாப்புப் படையினரின் கையில் சிக்காதது தான் இதற்குக் காரணம். இருதய நோயாளியான இவர் எவ்வித குற்றமும் செய்யாமலிருந்தும், கைது செய்யப்பட்டு மூன்றுபேர் இருக்கக்கூடிய அறையில் எட்டுப்பேருடன் சிறை வைக்கப்பட்டார். இறுதியிலே இவருடைய கை ஒன்று வழங்காமல் போய்விட்டது.

ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தை ஆதரித்த தமிழர்கள் கூட விட்டுவைக்கப்படவில்லை. வல்வட்டித்துறையைச் சேர்ந்த திரு. இராசேந்திரனின் அனுபவம் இதற்குச் சான்று பகரும். 1979-ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 17-ந் திகதி ஜனாதிபதியின் பிறந்த தினத்தைக் கொண்டாடும் முகமாக நல்லூர் சிவன் கோவிலிலே மீன்பிடி அமைச்சருடன் அருச்சனை செய்வித்தவர்களில் இந்தத் துர்ரதிஷ்டசாலியும் ஒருவர். இவருக்கெதிராக யாரோ இராணுவ அதிகாரிகளுக்குப் "பெட்டிசம் (petition) அனுப்பியதன் விளைவாக விசாரணைக்காகக் கொண்டு செல்லப்பட்டார். அவர் "புலியோ", "பயங்கரவாதியோ" அல்ல என்பது ஊர்ஜிதம் ஆகிய பின்னர்தான் இறுதியிலே விடுதலை செய்யப்பட்டார். எனினும் ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் யாழ்ப்பாண அரசாங்க அதிபரின் உத்தியோக பூர்வமான இல்லத்தில் சமூகமளிக்க வேண்டுமென இவர் பணிக்கப்பட்டார். இவ்வுத்தரவுக்கமைய இவர் அங்கு சென்றபோது தடுத்து நிறுத்தி வைக்கப்பட்டார். மாடுபோல் அவரைக் கட்டி இழுத்துச் சென்றுர்கள். இதனுல் இவர் அறிவு கெட்டு வீழ்ந்தார். பின்னர் விடுதலை செய்யப்பட்டதும் மருத்துவ மனைக்குச் செல்ல வேண்டியிருந்தது.

கைது செய்யப்பட்டு யாழ்ப்பாண அரசங்க அதிபரின் உத்தியோக பூர்வமான இல்லத்தில் தடுத்து வைக்கப்பட்டவர்கள் தான் மிக மோசமான அனுபவங்களுக்கு உள்ளாக்கப்பட்டனர். இங்கு தான் திரு. லயனல் பெனுண்டோ அரசாங்க அதிபராக இருந்தபோது எந்தவித பாதுகாப்புமின்றி வாழ்ந்து வந்தார். அவர் நித்திரைக்கு செல்லும் போதுகூட யன்னல்களும், கதவுகளும் திறந்து தான் இருந்தன. இதே வாசஸ்தலம் தான் அவசரகாலத்தின் போது சித்திரவதைக் குகையாக மாறியது. அவசரகால ஆட்சி பற்றிப் பாராளுமன்றத்தில் விவாதம் நடைபெற்ற போது இங்கு நடந்த சித்திரவதைகள் பற்றியும், கையாளப்பட்ட யுக்தி முறைகள்பற்றியும் பல உண்மைகள் அம்பலமாகின. அவையாவன; பற்றவைத்த சிகெரட்டால் சுடுதல்; இரண்டு கதிரைகளுக்கிடையே நிறுத்தப்பட்ட

ஒரு தடியில் சிலரின் கை, கால்கள் சேர்த்துக் கட்டி அறிவு கெடும் வரை அல்லது வாக்குமூலம் அளிக்கும் வரை அவர்களைச் சுழற்றினார்கள்; கைது செய்யப்பட்டவர்களின் மூக்கிலும் எளிதில் புண்படக்கூடிய வேறு உறுப்புக்களிலும் மிளகாய்த் தூள் பூசப்பட்டது. கடி எறும்புகளின் தாக்குதலால் சிலருடைய உறுப்புக்கள் வீங்கின; சிலர் கொடூரமாகத் தாக்கப் பட்டனர். சிலரை சப்பாத்துக் கட்டும் நாடாவினால் 'சீலிங்கிலிருந்து' தொங்க விட்டார்கள். நாடா அறுந்ததும் இவர்கள் தரையில் ''தொப்பென'' வீழ்ந்தனர்; ஆட்களை கைது செய்யும் போது விலங்கை மாட்டுதல், சங்கிலியாற் பிணைத்தல் போன்றவை குறித்து ஐக்கிய நாடுகள் சபை வரையறுத்துள்ள விதிகள் படுமோசமாக மீறப்பட்டன. கைது செய்யப் பட்டவர்கள் ஓரிடத்திலிருந்து இன்னோர் இடத்திற்கு ஜீப்களில் கொண்டு செல்லப்பட்டபோது வாகனத்தின் கூரையோடு சேர்த்து அவர்களுக்குக் கைவிலங்கு மாட்டப் பட்டது. அரசாங்க அதிபர் இல்லத்தில் இறக்கி விடப்பட்ட பின்னரும், தூண்களோடு சேர்த்து சங்கிலியால் பிணைக்கப் பட்டனர். அறிவு கெடும் வரை அல்லது வாக்கு மூலம் அளிக்கும் வரை இந்த நிலையிலேயே இவர்கள் கொதிக்கும் வெய்யிலில் விடப் பட்டனர். யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையத்திலுள்ள ஒரு அறையில் மூவருக்கும் கூட இடமில்லை. இது கல்கத்தாவின் இருட்டு அறையை ஒத்திருந்தது. ஆனால் ஒருதடவை அங்கு எட்டுப் பேர் சிறை வைக்கப் பட்டனர். குடிப்பதற்கும் கழுவுவதற்கும் அவர்களுக்கு ஒரு போத்தல் நீரே கொடுக்கப் பட்டது. குடிப்பதற்கு நீரில்லாத போது சிலர் தாகம் தாங்காது தமது சிறு நீரையே குடித்தனர்; சித்திரவதைகள் நடக்கும் போது அங்கு சமூகமளித்திருந்த ஒரு இராணுவ மருத்துவரைப் பற்றிய செய்திகளே கைதிகள் வெளியிட்ட தகவல்களில் மிகவும் அதிர்ச்சியூட்டுவதாக உள்ளது. சித்திரவதைநயைக் கைதிகளால் தாங்கமுடியாத போது இந்த நபர் ''திறுத்துங்கள் நாளைக்குத் தொடரலாம்'' என்பாராம்.

பயங்கரவாதத்தை ஒழித்துக் கட்டுதல் என்ற போர்வையில் யாழ்ப்பாண மக்களும், வேறு இடங்களில் வாழ்ந்த

தமிழரும் எல்லா வகையான அடக்கு முறைகளுக்கும் உட்படுத்தப் பட்டமை வெளிப்படை. இந்த அடக்கு முறையின் குறிக்கோளும், அதன் விளைவுகளும் அரசாங்கத்திற்கு எதிரான, சட்டத்திற்குட் பட்ட அரசியல் எதிர்ப்பை குறிப்பாகத் தமிழர்களிடையே காணப்பட்ட எதிர்ப்பை ஒழித்துக் கட்டுவதேயாகும். பயங்கரவாதிகளைக் கைது செய்வதற்காக அவசரகால ஆட்சி பிரகடனம் செய்யப் பட்டு அரை ஆண்டுக்கு மேலாகியும் இப்பயங்கரவாதிகள் யாரென்பதை அறிவதற்கு எல்லோரும் ஆவலாயிருக்கின்றனர். பயங்கரவாதிகள் கைது செய்யப்படவில்லை; ஆனல் தமிழ் மக்களைப் பயமுறுத்த எல்லா முயற்சிகளும் மேற்கொள்ளப் பட்டன. தம்முடைய இனத்தின் தலைவிதியை நிர்ணயிப்பதற்கு தமிழ் இனத்திற்குரிய ஜனநாயக உரிமை பறிக்கப் பட்டது. கடந்த காலத்தைப் போலன்று இம்முறை அரசாங்கம் ஏதோ காரணத்திற்காக ஆனல் மிகக் கெட்டித் தனமாக பிரபலமான தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களை குறிப்பாகப் பாராளுமன்ற உறுப்பினர்களைத் தீண்டவேயில்லை. 1958 இல் அல்லது 1961 இல் போலல்லாது இம் முறை அவர்கள் கைது செய்யப் படவுமில்லை; தடுப்புக் காவலில் வைக்கப் படவுமில்லை. கீழ் மட்டத்தில் உள்ளவர்களை அதிகம் பிரபல்யம் அடையாதவர்களைத் தாக்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்தது. அரசாங்கத்தின் கணிப்பில் இந்த இளைஞர்கள் தான் ''பிரிவினை வாதத்தின்'' சூத்திரதாரர்கள். இவர்களுடைய விருப்பத்திற்கேற்ப தான் தமிழர் விடுதலைக் கூட்டணிப் பொம்மைகள் ஆடினரென அரசாங்கம் கருதியது போலும்.

பேச்சுச் சுதந்திரம், பிரசுரச் சுதந்திரம் போன்ற ஜனநாயக உரிமைகளையும் அவசரகால ஆட்சி ஒழித்தது. யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்து பத்திரிகைத் தணிக்கை விதிக்கப்பட்டது. திரு. யோகேந்திரா துரைசாமி தகுதிவாய்ந்த அதிகாரியாக யாழ்ப்பாணத்தில் கடமையாற்றினர். யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த இளங்

களுக்கிடையில் நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கக் குழுவினரின் அறிக்கை குறிப்பிட்டதுபோல ''அபாண்டமான கூற்றுக்களும், உணர்ச்சியைத் தூண்டவல்ல வதந்திகளும் பரவாமல் தடுப்பதற்கு மட்டுமல்ல பத்திரிகைத் தணிக்கை பயன்படுத்தப்பட்டது. அரசாங்கத்தை நியாயமான முறையில் கண்டிப்பதைத் தடுப்பதற்கும் ஆளும் கட்சிக்கு அரசியல் ரீதியாகப் பாதகமான செய்திகள் வெளிவராது தடுப்பதற்குமே இது திட்டமிட்டுப் பயன்படுத்தப் பட்டது.''

இந்தத் தணிக்கை யாழ்ப்பாணத்தில் வெளிவந்த பிரசுரங்களோடு மட்டும் நிற்கவில்லை. கொழும்பில் வெளியிடப்பட்ட பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் கூடத் தணிக்கைக்கு உட்பட்டன அவை யாழ். மாவட்டத்திலும் விற்பனையாயின என இதற்குக் காரணம் கூறப்பட்டது. உத்தியோக பூர்வமான தணிக்கை ஒரு புறமிருக்க, அரசாங்கக் கட்டுப்பாட்டிற்குள்ளிருந்த பத்திரிகைகளும், அரசாங்க சார்பான வெளியீடுகளும் தம்மைத்தாமே தணிக்கை செய்து சட்டத்திற்குட்பட்ட செய்திகளைக் கூட இருட்டடிப்பு செய்தன. எடுத்துக் காட்டாக யாழ்ப்பாணத்தில் அவசர கால பிரகடனம் செய்யப் பட்டது குறித்து இ.நீ.ச. இயக்கம் ஆரம்பத்தில் அனுப்பிய அறிக்கைகளை முன்னணிப் பத்திரிகைகள் வெளியிடவில்லை.

யாழ்ப்பாண மக்களும், வேறு இடங்களில் வாழ்ந்த தமிழரும் அனுபவித்து வந்த மேற்கூறிய துயரங்கள் குறித்து திரு. அமிர்தலிங்கம் ஜனாதிபதி ஜெயவர்த்தனாவிற்குக் கடிதம் எழுதினார். இது தொடர்பாக அவர் பாராளுமன்றத்தில் கூறியது. மிக முக்கியத்துவம் வாய்ந்தது; ''ஜூலை மாதம் 11-ந் திகதி அவசரகால ஆட்சி பிரகடனம் செய்யப் பட்ட போது ஆட்சேபனை தெரிவிக்கக் கூட உண்மையில் நாம் விரும்பவில்லை. மூன்று மாதங்கள் நாம் பொறுத்திருந்தோம். பயங்கரவாத நடவடிக்கைகள் விசாரணை செய்யப்படுவதையும் நாம் குழப்புகிறோம் என்ற பழி கேட்க நாம் விரும்பவில்லை.

கௌரவ ஜனாதிபதிக்கு 1979-ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம், 19-ம் திகதி (கிட்டத்தட்ட அவர் நாடு திரும்பிய அன்றே) தான் எழுதிய கடிதத்தில் வடக்கிலே பயங்கரவாதிகளென அழைக்கப்படுபவரின் நடவடிக்கை குறித்து நடைபெற்று வரும் விசாரணைகளில் நான் தலையிடவும் விரும்பவில்லை; அப்படித் தலையிடுவதாகக் காட்டிக் கொள்ளவும் விரும்பவில்லையெனக் குறிப்பிட்டிருந்தேன். விசாரணைக்குக் கொண்டு செல்லப் பட்டவர்கள் மீது புரியப்பட்ட வன் செயல்கள் குறித்துக் கூட நான் எதுவும் பேசாதிருந்தேன்.''

திரு. அமிர்தலிங்கத்தைத் தவிரப் பல தனி நபர்களும் நிறுவனங்களும், தமிழரும், சிங்களவரும் சமயத்தலைவர்களும், அரசியல் தொழிற் சங்க வாதிகளும் இ. நீ.ச. இயக்கத்தில் இடம் பெற்றுள்ள எல்லா நிறுவனங்களும் ஜனாதிபதி ஜயவர்த்தனவிற்கும், வேறு அரசாங்கத் தலைவர்களுக்கும் ஆட்சேபனைகள் தெரிவித்துக் கடிதங்கள் அனுப்பினர். யாழ்ப்பாணத்திலே அவசரகால அதிகாரங்கள் மிக மோசமாகத் துஷ்பிரயோகம் செய்யப்படுவதையிட்டு யாழ் ஆயரும் கத்தோலிக்க குருக்களும், கத்தோலிக்க நிறுவனங்களும் ஆட்சேபனை தெரிவித்தனர். ''அப்பாவிப் பிரஜைகளைப் பயமுறுத்துவதற்கும், சிறுமைப் படுத்துவதற்கும் இராணுவத்தினரும் பொலிசாரும் இன்றைய அவசரகால நிலையையும், பத்திரிகைத் தணிக்கையையும் துஷ்பிரயோகம் செய்கின்றனரென நாம் கருதுகின்றோம். இதனால் பதட்ட நிலை மேலும் மோசமடைகின்றது. எனவே அவசரகால ஆட்சியை ரத்துச் செய்து நாட்டின் ஏனைய பகுதிகளிலுள்ளது போல யாழ்ப்பாணத்திலும் சகஜ நிலைமையை மீண்டும் நிலை நிறுத்துமாறு நாம் அரசாங்கத்தை வற்புறுத்தி வேண்டுகிறோம்.''

ஒரு கோணத்திலிருந்து நோக்கும் போது அவசரகால ஆட்சியின் துஷ்பிரயோகங்கள் பற்றி முறையிடுவது அர்த்தமற்றது. யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது போன்றுதான் அவசரகால அதிகாரங்கள் பெரும் பாலும் கையாளப்படுகின்றன. பலாத்காரத்தில் ஈடுபடுவதற்கே இலங்கைப் பொலிசாரும்,

இராணுவத்தினரும் பயிற்றப்படுகின்றனர். இவர்களுக்கு அதிகாரங்கள் வழங்கப்பட்டால் வேறு எதையும் நாம் எதிர்பார்க்க முடியாது. ஆனல் ஒன்றை நாம் சுட்டியே ஆகவேண்டும். யாழ்ப்பாணத்திலும் வேறு இடங்களிலும் வாழ்ந்த தமிழ் மக்கள் மீது அவசரகாலத்தின் போது கட்டவிழ்த்து விடப்பட்ட அட்டூழியங்கள் இனவெறியின் வெளிப்பாடுகள் என்பது தெட்டத் தெளிவு. பொலிஸ் படையினதும், இராணுவத்தினதும் இன அமைப்பை நோக்கும் போது இவை தவிர்க்க முடியாதவையே.

ஜனதிபதி, பிரிகேடியர் வீரதுங்கவிற்குத் திட்டவட்டமாகப் பிறப்பித்த உத்தரவையும் சட்டத்தையும் மீறிச் சட்டப் பாதுகாவலரே மோசமாக நடந்து கொண்டார்கள் என்ற முறைப்பாடுகள் குறித்து அரசாங்கம் ஏதும் நடவடிக்கைகள் எடுத்ததா என ஆராய்வது பொருத்தமாகும். 1979-ம் ஆண்டு ஜூலை மாதம் 13/14-ந் திகதி இரவு நடை பெற்ற கொலைகளைப் பற்றி விசாரணை செய்வதற்கெனப் பராளுமன்றத் தெரிவுக் குழு நியமிக்கப் பட்டது உண்மைதான். ஆனல் திரு. அமிர்தலிங்கம் குறிப்பிட்டது போன்று; ''பொலிஸ் அதிகாரிகள் கொல்லப்படும் போது அவசரகால ஆட்சி விதிக்கப்படுகின்றது. ஆனல் பிரஜைகள் கொல்லப் படும் போது தெரிவுக்குழுக்கள் நியமிக்கப்படுகின்றன.'

யாழ்ப்பாணத்திலே பயங்கரவாதம் முறியடிக்கப்படுவதற்குக் கையாளப் படுகின்ற யுக்திகளை அமைச்சர் சிறில் மத்தியூ மீண்டும் ஆதரித்துப் பேசினர். 1979-ம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 4-ந் திகதி அவர் பாராளுமன்றத்தில் உரையாற்றிய போது தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் பல தடவைகளில் குறுக்கிட்டனர். அப்பொழுது அவருக்கும் திரு. அமிர்தலிங்கத்திற்கு மிடையே நடைபெற்ற குறுக்குப் பேச்சை இங்கு மேற்கோள் காட்டுவது பொருத்தம்; திரு. சிறில் மத்தியூ; ''அவசரகாலத்தைப் பிரகடனம் செய்வதில் அரசாங்கம் தாமதித்து விட்டதெனப் பலர் கூறுகின்றனர். இந்த நடவடிக்கையை முன்னமே எடுக்

கவில்லை யெனப் பலர் அரசாங்கத்தைக் குறை கூறுகின்றனர்: அவசரகாலம் பிரகடனம் செய்யப் பட்டபின்னர் அரசியல் கொலைகளும், பொலிஸ்காரர் கொலை செய்யப்படுவதும், தகவல் கொடுப்போர் கொலை செய்யப்படுவதும் பெரும்பாலும் நின்றுவிட்டதை நாம் காணக்கூடியதாகவுள்ளது. இப்பொழுது யாழ்ப்பாணத்திலே மக்கள் பயமின்றிச் சுதந்திரமாக நடமாடக் கூடியதாக இருக்கின்றது. மக்கள் தத்தமது அலுவல்களிலே செல்லக் கூடியதாக இருக்கின்றது. பயங்கரவாதிகள் தான் நடமாடமுடியவில்லை.''

திரு. அமிர்தலிங்கம். ''இது நல்ல பகிடி தான். முதுகிலே சவரொட்டிகள் ஒட்டப்பட்ட வண்ணம் மக்கள் சுதந்திரமாக நடமாடுகின்றனர். நீகல் தியேட்டர் காவலாளி எவ்வாறு கால் நடையாகச் சென்ருன் என்பதை உமக்கு முன்னரே கூறினேன்.''

அரசாங்கத்தின் சார்பாகப் பேசிய பாதுகாப்பு உதவி அமைச்சர் திரு. ரி. பி. வீரபிட்டிய பின்வருமாறு கூறினர்; ''தமிழர் விடுதலைக் கூட்டணிப் பாராளுமன்ற உறுப்பினர்களின் பேச்சுகளைக் கேட்ட போது அவற்றில் சில உள்ளூர் நுகர்விற்கும், சில வெளிநாட்டு நுகர்விற்குமாக ஆற்றப்பட்டது என்பதை உணர்ந்தேன். யாழ்ப்பாணத்தில் பணியாற்றும் உயர் உத்தியோகத்தரிடமிருந்து அறிக்கைகளைப் பெற்ற பின்னர் தமிழர் விடுதலைக் கூட்டணி சுட்டிக் காட்டிய சம்பவங்கள் மிகைப்படுத்தப் பட்டிருக்கின்றன என்பதை என்னல் கூற முடியும். அப்பாவி மக்களைத் துன்புறுத்துவதல்ல அவசர காலப் பிரகடனத்தின் நோக்கம்; யாழ்ப்பாணக் குடாநாட்டிலே சட்டத்தையும் ஒழுங்கையும் நிலை நாட்டுவதற்காகவே அது பிரகடனம் செய்யப் பட்டது. இதனை உங்களுடைய ஒத்துழைப்புடனே அல்லது அது இன்றியோ நாம் செய்ய உத்தேசித்திருக்கின்ருேம். இந்த நடவடிக்கைகளின் போது சில மீறல்கள் நிகழலாம். அதனை நான் மறுக்கவில்லை, இத்தகைய பிரமாண்டமான ஒரு நடவடிக்கையை மேற்கொள்ளும் போது மீறல்கள் ஏற்படுவது இயல்பு. அத்தகைய நடவடிக்கைகள்

நியாயமற்றவையெனக் காணப்படும் போது அவை குறித்து கண்டிப்பான நடவடிக்கை எடுக்கப்படும்.''

அமிர்; ''கௌரவ அமைச்சருடைய பேச்சு உள்ளூர் நுகர்வுக்காகவோ அல்லது வெளிநாட்டு நுகர்வுக்காகவோ ஆற்றப்பட்டிருந்தது பற்றி எமக்கு ஒன்றும் தெரியாது. சொற்சிலம்பம் அல்லது மிகைப்படுத்தல் மூலம் உயிரோடிருப்பவர்களை யம லோகத்திற்கு அனுப்பக் கூடிய வல்லமை தமிழர் விடுதலைக் கூட்டணிப் பேச்சாளர்களிடம் இருக்கின்றதா என்பது பற்றியும் எமக்கு ஒன்றும் தெரியாது. பொலிஸ் யாதுகாப்பிலிருந்த இந்திரராஜன் இடுப்பிற்குக் கீழே 37 காயங்கள் காணப்பட்ட நிலையில் இறந்தமை மிகைப்படுத்தப் பட்ட சம்பவமல்ல. — கொழும்பைச் சேர்ந்த திருமதி. சேவியர், வல்வெட்டித் துறையைச் சேர்ந்த இராஜேந்திரம் மயிலிட்டியைச் சேர்ந்த சிவனடியார், றீகல் தியேட்டர் காவலாளி திருச்செல்வம் — இவர்களுக்கு நிகழ்ந்தவையெல்லாம் மிகைப்படுத்தப்பட்ட கூற்றுக்கள் அல்ல எனத் திட்டவட்டமாக நாம் கூறுகின்றோம். மீறல்களிலே ஈடுபட்டவர்கள் மீது கண்டிப்பான நடவடிக்கை எடுக்கப்படுமென்ற வாக்குறுதி காற்றில் பறக்க விடப்படுமா இல்லையா என்பதற்குக் காலம் தான் பதில் சொல்லும் ''

யாழ். மாவட்டத்திலே அரசாங்கம் மேற் கொண்ட நடவடிக்கைகள் பற்றிய முனைப்பான கண்டனம் மறைமுகமாகக் கொழும்பில் நடைபெற்ற சட்டவல்லுனர் மகாநாட்டிலிருந்து கிளம்பியது, முரண்சுவையுடையதொன்றாகும். யாழ்ப்பாணத்தில் அவசரகால சட்டம் அமுலிலிருந்த போது கொழும்பில் நடைபெற்ற மகா நாட்டிற்கு திரு. எச். டபிள்யூ ஜயவர்த்தனா தலைமை தாங்கினார். இவர் மிகப் பிரபல்யமான இலங்கை வழக்கறிஞர் மட்டுமல்ல; ஜனாதிபதி ஜெயவர்த்தனாவின் சகோதரர் என்பதும் குறிப்பிடத்தக்கது. இந்த மகா நாட்டிற்கு ஆசிய நாடுகளின் பிரதிநிதிகளும், இலங்கைப் பாராளுமன்ற உறுப்பினர்களாகிய வழக்கறிஞர் உட்பட இலங்கை வழக்கறிஞர்களும் சமூகமளித்திருந்தனர். பயங்கரவாதம் குறித்து

மகாநாடு பின்வரும் தீர்மானத்தை நிறைவேற்றியது: பயங்கரவாதத்தைப் பற்றிச் சில பிரதிநிதிகள் அக்கறை கொண்டிருந்தனர். இது ஒரு பிரச்சினையென ஏற்றுக் கொள்ளப்பட்டபோதும், பயங்கரவாதத்திற்கு எதிராக எடுக்கும் நடவடிக்கைகள் மனித உரிமைகள் மீறுதலைகளாக இருத்தல் வேண்டும் எனக் கூறப்பட்டது.

## 8. பின் விளைவு

பயங்கரவாத ஆபத்தை ஒழித்துக் கட்டுமாறு பிரிகேடியர் வீரதுங்கவிற்கு ஜனாதிபதி ஜெயவர்த்தனா உத்தரவு பிறப்பித்தபோது 1979 டிசம்பர் 31-ந் திகதியைக் கால எல்லையாக வரையறுத்தார். பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் திரு. ரி. பி. வீரப்பிட்டிய 1979, ஒக்ரோபர் 4-ந் திகதி பாராளுமன்றத்தில் உரையாற்றுகையில் பின்வரும் வாக்குறுதியை அளித்தார்; ''குற்றம் புரியும் சக்திகள் கட்டுப் பாட்டிற்குள் கொண்டுவரப் பட்டதும் நாம் அவசரகாலத்தை நிச்சயமாக ரத்துச் செய்வோம். தேவைக்கு அதிகமாக ஒரு நிமிடம் தானும் அவசரகாலத்தை நீடிப்பது எமது உத்தேசமல்ல, இந்த வாக்குறுதியை நான் தரமுடியும். தேவை முடிந்து விட்டதும் அவசரகாலம் ரத்துச் செய்யப்படும். கால எல்லையாக வரையறுக்கப் பட்டுள்ள டிசம்பர் மாதம் 31-ந் திகதிக்கு முன்னரே இது நடைபெறலாமென எதிர்பார்க்கிறேன்.''

1979-ம் ஆண்டின் இறுதியில் அவசரகாலம் இனிமேலும் தேவைப் படாதென அரசாங்கம் திருப்தியுற்றிருந்தது போலும் புத்தாண்டு விடிந்த போது யாழ் மாவட்டத்தில் அவசரகால ஆட்சி நிலவவில்லை.

யாழ் மாவட்டத்தில் அவசரகால ஆட்சி பிரகடனம் செய்யப்படுவதற்கு ஏதேனும் தேவை இருந்ததா என்ற வினாவை நாம் ஆரம்பத்திலேயே எழுப்பினோம். பின்னணி நிகழ்ச்சிகளின் வரலாற்றைக் கூறும் போது ஐக்கிய தேசியக் கட்சியின்

ஆட்சியிலே உருவாகிய இரு சமாந்தரப் போக்குகளின் தர்க்க விளைவே அவசரகாலப் பிரகடனம் என்பதை விளக்கினேம். ''தமிழர் பிரச்சினைகளைத் தீர்ப்போம்'' என்ற வாக்குறுதிகள் கட்டம் கட்டமாகக் காற்றில் பறக்கவிடப்பட்ட அதே சமயத்தில் தமிழருக்கெதிரான பேரினவெறி திட்டமிட்டு நாட்டிலே ஊட்டப்பட்டு வந்தது. இப்போக்கின் இறுதிக் கட்டமாக தமிழ் ஈழக் கோரிக்கை மீது தடை விதிக்கப் பட்டு அதைத் தொடர்ந்து அவசரகால ஆட்சி பிரகடனம் செய்யப் பட்டு இராணுவத் தலையீடு நிகழ்ந்தது. தமிழ் பேசும் சிறு பான்மையினரைப் பெரும் பான்மைச் சிங்கள இனத்தாரோடு சமமானவர்களென ஏற்க மறுக்கும் ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கத்தின் பேரின மனப்பான்மையின் வெளிப்பாடாகவே இப்போக்குகள் ஐயத்திற்கு இடமின்றி அமைகின்றன.

அவசரகால ஆட்சி பிரகடனம் செய்யப் படும் முன்னர் இருந்த நிலைமையைப் பற்றிய எமது கணிப்பீடு சரியானதே என்பதை அவசரகால ஆட்சியின் போது நடைபெற்ற சம்பவங்கள் எண்பிக்கின்றன. அவசரகாலத்திற்குப் பின்னர் கூடத் தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகள் முன்பை விடத் தீர்க்கப் படக் கூடிய நிலையில் இருப்பதாகச் சொல்வதற்கில்லை. பிரச்சினைகள் மேலும் சிக்கலடைந்துள்ளதாகவே தோன்றுகிறது. ''இந்தப் பிரச்சினைகளை'' ஐக்கிய தேசியக் கட்சியே தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் இனங் கண்டிருந்தமை நன்கு மனங் கொள்ளத் தக்கது. இவை தீர்க்கப்படாமையே தமிழ் பேசும் மக்களைத் தனிநாட்டியக்கத்திற்கு ஆதரவளிக்க நிர்ப்பந்கித்திருக்கின்றன என அத் தேர்தல் விஞ்ஞாபனம் மேலும் கூறிற்று என்பதும் நினைவுகூரத்தக்கது.

அவசரகால ஆட்சியின்போதும், அதற்குப் பின்னரும் அரசிற்கெதிராகவோ, அரசாங்கத்திற்குச் சார்பான தமிழ் அரசியல் வாதிகளுக்கு எதிராகவோ எவ்வித அரசியல் பலாத்கார சம்பவங்களும் நடைபெறவில்லை என்பது உண்மையே. ஆனால் முன்னர் இத்தகைய பலாத்கார சம்பவங்கள் நிகழ்வதற்கு வழிகோலிய வெளிப்படையான காரணங்களையும் மறைமுக

மான காரணங்களையும் அவசரகால ஆட்சி முற்றாக அகற்றவில்லையென்பதும் உண்மையே. இந்தப் பலாத்காரச் சம்பவங்கள் மாபெரும் நெருக்கடியின் அறிகுறிகளே. ஆனால் இந்தப் பலாத்காரத்திற்கு வழிகோலிய அடிப்படைக் காரணங்கள் தொடர்ந்தும் நிலவுவதால் நெருக்கடி இன்னும் தீர்ந்தபாடில்லை. அவசரகால ஆட்சியின் போது அரசியல் பலாத்கார சம்பவங்கள் நிகழவில்லையென நாம் கூறினால் அது உண்மைக்குப் புறம்பானது. அக்கட்டத்திலே தான் இத்தகைய சம்பவங்கள் நிகழ்ந்தன. அவற்றுக்கு அரசே பொறுப்பாக இருந்தது. அப்பாவிப் பிரஜைகளும், சட்டவரம்பிற்குட்பட்ட அரசியல் எதிர்ப்பு இயக்கமுமே அவற்றுக்குப் பலியாயினர்.

அவசரகால ஆட்சியின் விளைவாக மக்கள் யாழ்ப்பாணத்திலே சுதந்திரமாக நடமாடக்கூடியதாக இருக்கின்றது எனக் கூறி அவசரகாலத்தை நியாயப்படுத்த விளைபவர்கள் வேண்டுமென்றே உண்மை நிலையை மறைக்க முயலுகின்றனர். அவசரகால ஆட்சி பிரகடனம் செய்யப்பட்டதன் விளைவாக பயங்கரவாத ஆபத்து ஒழித்துக் கட்டப்பட்டு விட்டதென அரசாங்கத்தின் சார்பாகக் கூறப்படுமாயின் இந்த ஒழித்துக் கட்டல் என்ன என்பதைச் சுட்டிப்பாக அறிவதற்கு மக்கள் ஆவலுற்றிருக்கின்றனர் என்பதை நாம் கூற விரும்புகின்றோம். பயங்கரவாத ஒழிப்பு என்பது; பயங்கரவாதிகளைக் கைது செய்தல் எனப் பொருள்படுமா என்பது மக்களுக்குத் தெரியாது. அவ்வாறாயின் இந்தப் பயங்கரவாதிகள் யாரென அவர்கள் அறிய விரும்புகின்றனர். யாழ்ப்பாணத்திலும் வேறு தமிழ்ப் பகுதிகளிலும் அவசரகால ஆட்சி பிரகடனம் செய்யப்படுவதற்கு முன்னரும், அவசரகால ஆட்சியின்போதும் நடைபெற்ற கோரக் கொலைகளுக்குப் பொறுப்பானவர்களை நீதி மன்றங்களில் அரசாங்கம் நிறுத்துமா என அறிய மக்கள் ஆவலுற்றிருக்கின்றனர். இவை பற்றியெல்லாம் எதுவித அறிவிப்புக்களுமில்லை. அவசரகால ஆட்சி ரத்துச் செய்யப்பட்ட பின்னர், 21 இளைஞர்கள் பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின்

7

கீழ் கைது செய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருக்கின்றனரென்பதை பத்திரிகைச் செய்திகள் வாயிலாக அறிகின்றோம். ஜுலை 79- இற்கு முன்னர் புரிந்த குற்றச் செயல்களுக்காக இவர்கள் கைது செய்யப்பட்டிருக்கலாம்; இதுவரையிலும் இவர்களுக்கெதிராகக் குற்றச்சாட்டுக்கள் எதுவும் முன்வைக்கப்படவில்லை. இவர்களுக்கெதிராக வழக்குத்தொடர வேண்டும்; அல்லது உடனே இவர்களை விடுதலை செய்யவேண்டுமென இவ்விளைஞர்கள் சார்பாக வழக்கறிஞர்கள் நீதிமன்றங்களில் கோரினர். இந்த 21 தமிழ் இளைஞர்களையும் கைது செய்வதற்கு அவசரகால ஆட்சியும், இராணுவத் தலையீடும் தேவைப்பட்டதுதானு என்பதே அடிப்படைக் கேள்வி. தலைமறைவாகியிருக்காத 21 இளைஞர்களைப் பாதுகாப்பில் வைப்பதற்கு யாழ்ப்பாணத்தைச் சித்திரவதைக் கூடமாக மாற்றித்தான் இருக்க வேண்டுமா? இன்னுமொரு கேள்வியும் மக்கள் மனதிலே எழத்தான் செய்கின்றது. 1979 ம் ஆண்டு ஜுலை 13/14-ந் திகதி இரவு நடைபெற்ற கொலைகளுக்குப் பொறுப்பானவர்கள் கைது செய்யப்பட்டுச் சட்டத்திற்கு முன் நிறுத்தப் படுவார்களா?

பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டால் தான் அரசியல் தீர்வுக்கான நிலைமை உருவாகுமென அரசாங்கம் அவசரகாலப் பிரகடனத் தருவாயில் கூறியது. அவசரகால ஆட்சி ரத்துச் செய்யப்பட்டு எத்தனையோ மாதங்களாகியும் சுமுகமான அரசியல் தீர்வைக் காண்பதற்கு அரசாங்கம் ஏதேனும் நடவடிக்கையை எடுத்துள்ளதா எனக் கேட்கத் தோன்றுகின்றது.

தீர்க்கப்படாத அரசியல் பிரச்சினைகளிலிருந்தே அரசியல் பலாத்காரம் ஊற்றெடுக்கின்றது என்பதே எமது நிலைப்பாடு. பிரச்சினைகளைத் தீர்க்காமல் பலாத்காரத்தைத் தடுத்து நிறுத்த முடியாது. இத்தகைய தீர்வு எவ்வாறு அமைய வேண்டும்; அதற்கான நிபந்தனைகள் என்ன என்பதெல்லாம் இங்கு கூறுவது எமது நோக்கமல்ல. தேசிய இனப் பிரச்சினையை எதிர்கொள்ளும் எந்த அரசாங்கமும் சூழ்ச்சி அரசியலையும், அடக்குமுறையையும் தவிர்க்க வேண்டுமெனக் கூற நாம் கடமைப்

556



பட்டுள்ளோம். இத்தகைய ''மருந்தின்'' விளைவுகள் நோயை விடக் கொடூரமானவை என்பதை 1979-ம் ஆண்டு அவசர கால அனுபவத்தின் வாயிலாகத் தெளிவாக அறியக் கிடக்கின்றது. இன்னும் நோய் முற்றாகக் குணப்படவில்லை என்பதற்கு யாழ். மாவட்டத்திலே இராணுவம் தொடர்ந்தும் நிலை கொண்டிருப்பதும், பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் இலங்கை முழுவதிலும் இன்னும் அமுலிலிருப்பதும் சான்று பகரும்.

அத்தியாயம் இரண்டு

# காலத்தைக் கைப்பற்றுவோம்

1979 ஜூலை தொடக்கம் டிசம்பர் வரை யாழ்ப்பாண மாவட்டத்திலும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் அரச பாதுகாப்புப் படையினால் கட்டவிழ்த்து விடப்பட்ட பலாத்கார நடவடிக்கைகள் தமிழ் பேசும் மக்களின் பிரச்சனைகளைத் தீர்த்து வைப்பதற்கு எந்த விதத்திலும் உதவவில்லை. மாறாக, 79 அவசரகால ஆட்சியின் போது பொலிஸ், இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட கொடூரமானதும் அடக்கு முறையில் அமைந்ததுமான நடவடிக்கைகள் இப்பிரச்சினைகளை அரசாங்கம் சுமுகமாகத் —சமரசப் பேச்சு வார்த்தைகள் மூலம்— தீர்த்து வைப்பதை மேலும் கடினமாக்கியது. பொதுவாக அரசாங்கமும், அதிலும் குறிப்பாக சில அமைச்சர்களும் தமது அடக்கு முறைக் கொள்கைகளை நியாயப்படுத்த முயன்றமை தமிழ் மக்களுக்கு அரசாங்கத்தின் மீதும், சிங்கள அரசியல் கட்சிகள் தலைவர்கள் மீதும், இருந்த நம்பிக்கையின்மையை மேலும் அதிகரிக்கச் செய்தது. சிங்களவர்கள் ஆதிக்கம் செலுத்தும் நிலையிலுள்ள ஒரு அரசில் தமிழர்கள் நீதியையும், சமத்துவத்தையும் பெறமுடியாது என்ற கருத்தைக் கொண்ட பலரின் குற்றச்சாட்டை இது மேலும் உறுதிப்படுத்துவதாயிற்று.

ஜே. ஆர். ஜெயவர்த்தன உட்பட பல சிங்கள அரசியல் தலைவர்கள் தாம் ''நாட்டைப் பிரிப்பதை'' அனுமதிக்கப் போவதில்லை எனவும், அத்தகைய பிரிவினையைத் தடுப்பதற்கு தம் கையிலுள்ள சகல சாதனங்களையும் பயன்படுத்தப் போவதாகவும் பகிரங்கமாகக் கூறியுள்ளனர். அநேகமாக அவர்களுடைய பகிரங்க அறிவித்தல்களில் உபயோகிக்கப்பட்ட சொற்களும், மேற்கொண்ட தொனியும் உணர்ச்சியூட்டத் தக்கதாக இருந்த

துடன் இன மோதல்களை தூண்டிவிடக் கூடியதாகவும் இருந்தன. எப்படியாயினும் தமது பிரச்சினைகளுக்குரிய ஒரே தீர்வு தனியானதொரு தமிழ் அரசை நிறுவுவதே என்ற உணர்வைக் கொண்டிருக்கும் தமிழ் மக்களின் ஒரு பகுதியினரை ஆத்திரமூட்டும் செயல்களோ, பயமுறுத்தல்களோ அல்லது அடக்குமுறைகளோ எதுவுமே தடுத்து நிறுத்தமுடியாது.

பெரும்பான்மையினரின் 'தீர்வை' சிறுபான்மைத் தேசிய இனங்கள் மீது திணிப்பதற்கு முயன்ற ஒவ்வொரு நாட்டிலும் —அயர்லாந்து, சைபிரஸ், பலஸ்தீனம்—இதே அனுபவம் தான் கிடைத்துள்ளது. அத்தகைய அடக்குமுறைக் கொள்கைகள் காலப்போக்கில் முழுநாட்டையும் தொடர்ச்சியான இன மோதல்களில் தள்ளிவிடும்; இவ்வின மோதல்களினல் அதிகமாகப் பாதிப்புக்குள்ளாக்கப்படுவது இரண்டு இனங்களிலுமுள்ள தொழில் புரியும் மக்களே. ஒரு தேசிய இனத்தை அடக்கி ஆளும் வேறு ஒரு தேசிய இனம் சிறுபான்மைத் தேசிய இனத்தின் அடிப்படை ஜனநாயக, மனித உரிமைகளை மறுப்பின் அவ்வினம் ஒரு ''தார்மீக'' சமுதாயத்தை உருவாக்க முடியாமல் போவது மட்டுமல்ல, அமைதியையும், நிலையான ஆட்சியையும், நெடுங்காலத்திற்குப் பேண முடியாது.

ஏற்கனவே எமது அரசு, பாதுகாப்புப் படைகளின் ஆயுதம் மற்றும் உபகரணங்களுக்காகவும், பராமரிப்பிற்காகவும் பற்றுக் குறைவான மூலதனத்தை வீண்விரயம் செய்துள்ளது தொடர்ச்சியான இனமோதல் நடைபெறுமாயின் மக்களின் உணவுக்கும், உடைக்கும், அவசியமாகத் தேவைப்படுகின்ற பெருமளவு மூலதனம், இரு பகுதியினதும் போர் முயற்சிகளுக்கான செலவினங்களுக்கே திருப்பப்பட்டு விடும்; நூற்றுக் கணக்கான மக்களின் விலைமதிப்பற்ற உயிர்களை இழக்க நேரிடும்; ஆண்களும் பெண்களும், சிறுவர்களும் கொடூரப் படுத்தப்பட்டு, மனிதத்தன்மையை இழந்துவிடுவார்கள்.

பொருளாதார அழிவை ஏற்படுத்துவதும், மனிதர்களைப் பொறுத்தவரை துன்பத்தை ஏற்படுத்தக் கூடியதுமான இன்

னும்மொரு நிலைமை யாதெனில், பல வருடங்களாக வட அயர் லாந்து போன்ற நாடுகளில் இருப்பதைப் போன்று, தீர்க்கப் படாத தேசிய இனப் பிரச்சினைகளின் காரணமாக பலாத் காரமும், எதிர்ப்பலாத்காரமும் தோற்றுகின்றமையாகும்.

ஆட்சிப் பலத்தைக் கைப்பற்றுவதற்கும், தொடர்ந்து அதை வைத்திருப்பதற்கும் சிறுபான்மைத் தேசிய இனத் தைப் பயன்படுத்தி, பெரும்பான்மைத் தேசியவாதத்தையும், இனவாதப் பிரச்சாரத்தையும் துஷ்பிரயோகம் செய்பவர்க ளும், அரசியல் பலத்தை எதிர்பார்க்கும் அரசியல் வாதிகளும் அவர்களுடைய கொள்கைகளினாலும், பிரச்சாரத்தினாலும், நட வடிக்கைகளினாலும் ஏற்படுகின்ற பாரதூரமான விளைவுகளைப் பற்றி சிறிதளவேனும் கவலைப்படுவதில்லை. ஒடுக்கப்பட்ட சிறுபான்மையினத்தைப் பொறுத்த மட்டில் எவ்வித முயற் சியோ, செலவோ இன்றி எப்பொழுதும் அவர்களைக் கீழ் நிலையில் வைத்திருக்க முடியுமென்று கூட அவர்களில் சிலர் நினைத்திருக்கக்கூடும். இந்நாட்டிற்குப் பெருமளவு வருவாயைத் தேடித்தருகின்ற தொழிலாளர்களையும், ஏழை விவசாயிகளை யும், கொண்ட மிகப் பெரும்பான்மையாகவுள்ள மக்களுக்கு, இனவாதக்கொள்கையானது மனித முன்னேற்றத்தைத் தடை செய்கின்ற, குறைக்கின்ற முறையிலமைந்த அவர்களது கழுத் தைச் சுற்றிக் கட்டப்பட்ட பெருங்கல்லாகும். இக்கொள்கை கள் கஷ்டப்படுகின்ற மக்களின் கவனத்தை அத்தியாவசிய பிரச்சினைகளிலிருந்து திசைதிருப்புகின்றன. அவை தொழி லாள வர்க்கத்தினையும், அவர்களது நட்புச் சக்திகளையும் பலவீனப்படுத்துகின்றன; எல்லாவற்றுக்கும் மேலாக எமது அபிவிருத்திக்கு மிக அவசியமான அரிய மனித மற்றும் பொருள் மூலதனங்களின் விரயத்திலும், அழிவிலும் முடிகின் றன.

அத்தகைய ஒரு இன வெறியைத் தடுப்பதற்கும், தமிழ் மக்கள் மத்தியில் நீதியையும், சமத்துவத்தையும், நிலைநாட்டு வதற்குமான முதற்கடமை பெரும்பான்மை இன சிங்கள மக் களையே சார்ந்துள்ளது. இன்று வடக்கு, கிழக்கு மாகாணங்

களிலுள்ள தமிழ் மக்களுடைய பிரச்சினைகள் மட்டுமே முக்கிய பிரச்சினைகளாக இருக்கின்றன. நாளை இந்திய வம்சாவழியினராகிய தோட்டத் தொழிலாளர்களிடையே ஒரு புதிய தலைமுறை உருவாகி, அவர்களுடைய தீர்க்கப்படாத பல பிரச்சினைகளை வெளிக்கொணரும். உதாரணமாக, இந்நாட்டில் வசித்து, தொழில் புரிய விரும்பும் தோட்டத் தொழிலாளர்களுக்கும். மற்றையோருக்கும் பிரஜா உரிமை மறுக்கப்படுதல்; சமீபத்தில் இந்திய வம்சாவழித் தோன்றல்களாகவுள்ள தோட்டப் பகுதி மக்களுக்கு போதியளவு கல்வி, சுகாதாரம், வீட்டுவசதிகள் மறுக்கப்படுதல்; இம் மக்களுக்குத் தோட்டங்களில் கோட்டாமுறையில் வேலை வழங்குதல் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

''நாட்டு நலனுக்காகவும்'', ''எமது பாரம்பரியத்தைப் பாதுகாக்கவும்'' ''எமது மக்களுக்கு தொழில் வாய்ப்புக்களை உறுதிப்படுத்தவும் அவசியம் என்ற காரணத்தைக் காட்டி, தமிழ் மக்கள் மீதான பாரபட்சத்தையும் அடக்கு முறைகளையும் நியாயப்படுத்தி நேர்மையற்ற முறையில் தங்கள் உரிமைகளைப்பற்றிப் பேசும் மனச்சாட்சிக்கு அஞ்சாத அரசியல்வாதிகள் எம்மை ஏமாற்றுவதற்கு அதிக காலத்திற்கு விட்டுவிட்டோம். உண்மையில் இந்நாட்டு மக்கள், அவர்கள் சிங்களவர்களாயிருந்தாலென்ன, தமிழர்களாயிருந்தாலென்ன எதிர்நோக்கும் பிரச்சினைகளை இத்தகைய கொள்கைகள் எந்தவிதத்திலும் தீர்த்து வைக்கவில்லை.

இந்நாட்டில் தொடர்ந்து வந்த அரசாங்கங்களினால் தமிழ் மக்களுக்கெதிராக நடைமுறைப் படுத்தப்பட்ட எல்லாவிதமான பாரபட்சங்களையும் நாம் எதிர்க்கின்றோம் எனத் தெளிவாக, உரக்கக் குரலெழுப்ப வேண்டியகாலம் வந்துவிட்டது.

அரசியல் ரிதியான தீர்வு காணவேண்டிய அரசியல் பிரச்சினையாக இது இருப்பதால், சரியான கொள்கையுடைய ஒரு அரசியல் கட்சியே எமக்குத் தேவை என்று வாதிடலாம். துரதிஷ்டவசமாக, இன்று இப்பிரச்சினைக்குத் தீர்வு காணக்கூடிய

அரசியல் கட்சியொன்று இல்லையென்றே தெரிகின்றது. இனங் களுக்கிடையில் நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கம் ஒரு மாற்று அரசியல் கட்சியாக உருவாக முயற்சிக்காவிட்டாலும் தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படுகின்ற பாரபட் சமான எல்லா நடவடிக்கைகளும் உடனே முடிவுக்கு கொண்டு வரப்படவேண்டும் என்ற கொள்கையை வலியுறுத்தி இந்த நாட்டின் பெரும்பான்மையான தொழிலாளர்களின் உள்ளங் களையும், சிந்தனைகளையும் வென்றெடுக்கூடிய தொடர்ச்சியான செயல் முறையினையும், பரந்த தளத்தினையும் கொண்ட இயக் கமாகவும் வளரவேண்டும். இ. நீ. ச. இயக்கம் சக்தி வாய்ந்த வகையில் எல்லாச் சமூகங்களையும் சேர்ந்த தொழிலாளர்கள் மத்தியில் அடிமட்டத்திலிருந்து ஒற்றுமையைக் கட்டியெழுப்பு வதுடன் எல்லா வகுப்புவாதப் பிரச்சாரத்திற்கும் எதிர்ப்புத் தெரிவிக்கவேண்டும். நாடெங்கிலும் இ. நீ. ச. இயக்கக்கிளைகள் அமைக்கப்படவேண்டும். எல்லாத் தொழிற்சங்கங்களுக்கும், தோட்டங்களுக்கும், பாடசாலைகளுக்கும், வீடுகளுக்கும், எல்லா மூலைமுடுக்குகளுக்கும் இயக்கத்தின் செயற்திட்டம் கொண்டு செல்லப்பட வேண்டும்.

இது ஒரு கடினமான அலுவலே. ஆனால் பலாத்காரமும், கொடூரமும் நிறைந்த இனமோதல்களையும், மக்கள் மிருகத் தன்மையுடையவர்களாக மாற்றப்படுவதையும், எமது மக்க ளின் — அவர்கள் சிங்களவர்களாகவோ, தமிழர்களாகவோ, முஸ்லீம்களாகவோ அல்லது பறங்கியர்களாகவோ இருந்தா லென்ன — முன்னேற்றத்திற்கு அத்தியாவசியமான மூலவளங் களை வீண்விரயமாக்குவதையும் நாம் தடுக்கவேண்டுமானால் இனங்களுக்கிடையில் நீதிக்கும் சமத்துவத்திற்குமான இயக் கத்தை ஒரு பரந்த மக்கள் இயக்கமாகக் கட்டி எழுப்புவ தற்கு எம்மிடமுள்ள எல்லா சக்திகளையும் ஒன்று திரட்ட முயலுவதைத் தவிர வேறுமாற்று வழியில்லை.

# பகுதி II

## இனங்களுக்கிடையில் நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கம்.

# இனத்துவேஷ அரக்கன்

இன மதசார்பற்ற தன்மை என்பதன் கருத்தும் நடைமுறை பற்றியும் மக்களுக்கான கல்விக்குரிய தீவிரமான வெகுஜன செயல்முறைகளை ஆரம்பிப்பது, அன்றும் இன்றும் இனமத சார்பற்ற அரசியல் கட்சிகளின் தலையாய கடமையாகும். அவை அதைச் செய்யத்தவறியது மட்டுமல்லாது அரசியல் அதிகாரத்தில் பங்கு கொள்வதற்காக சில இனவாதக் கட்சிகளுடன் இணைந்து கொள்கைகளைக் கடைப்பிடித்ததினால் இனத்துவேஷம் மக்கள் மத்தியில் பரவ உதவியிருக்கின்றன.

வர்க்க ஒருமைப்பாடு ...... மற்றும் இவை போன்ற கோஷங்களை எழுப்புகின்ற தொழிற்சங்கங்க இயக்கங்களின் பக்கம் திரும்பினாலும் இக்காட்சி ஒளியுள்ளதாக இல்லை.

ஆகையால், அரசியல் கட்சிகள் இனத்துவேஷத்தின் சக்தியை உணர்ந்து அதற்கு எதிராகப் போராடவேண்டிய தீரத்தைப் பெறுவிட்டால் அவர்கள் தாமே இனத்துவேஷிகளாக மாறவேண்டும், அல்லது இனத்துவேஷ சக்திகளின் சுமையின் கீழ் அமிழ்ந்து போக வேண்டிநேரிடும்.

அரசியல் கட்சிகளின் கோழைத்தனத்திற்கு ஒரே ஒரு காரணமே உண்டு. இன ரீதியான பயத்தை உண்டுபண்ணுவதாலும், இனவாத விடயங்களைப் பெரிதுபடுத்துவதாலும், இன உணர்வுகளையும் அவாக்களையும் தூண்டி விடுவதாலும் ஒரு சமூகத்தின் வாக்குகளைப் பெறுவது மிகச் சுலபமாக இருக்கின்றது. இதற்கு எதிராக, நியாயமான கோரிக்கைகளை முன்வைத்து வாக்குகளைப் பெறுவது கடினம். இக்காரணத்தினாலேயே இனத்துவேஷம், சாதித்துவேஷம், பிரிவினைவாதம், மொழிவேறுபாடு, பிரதேசவேறுபாடு போன்ற சக்திகள் முன்னேற முடிகின்றது. இன, மத சார்பற்ற கட்சிகள் பிரிவினைக்கும், பிளவுக்குமான சக்திகளுக்கு எதிராகத் தாம் கடைப்பிடிக்க வேண்டிய கொள்கைகளுடன் தீரத்துடன் செயற்பட்டாலன்றி எமது வருங்காலம் இருண்டதாகவே இருக்கும்.

(திரு. ஜயப்பிரகாஷ் நாராயன் எழுதிய "The Challenge of Nation Building" என்ற நூலில் இருந்து எடுக்கப்பட்டது )

## இனங்களுக்கிடையில் நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கத்தின் தோற்றமும், குறிக்கோள்களும் அதன் நடவடிக்கைகளும்.

### 1. தோற்றம்

1977 ஆகஸ்ட் 18-ந் திகதி வியாழக்கிழமை மாலை 4 மணியளவில், கண்டியில் அமைந்துள்ள சமூக ஆய்வுக்கும் சந்திப்புக்குமான 'சத்தியோதய' நிலையத்தில் தங்கியிருக்கும் ஒருவர் தனது நண்பருடன் தொலைபேசியில் பேசிக்கொண்டிருந்தார். ''எங்களுடைய நல்ல காலம்; இதுவரைக்கும் கண்டி தப்பியுள்ளது.'' என்று சொல்வதை அங்கு தங்கியிருந்த ஏனையோர் கேட்டார்கள். ஆனால் அதிக நேரம் செல்லவில்லை.

மாலை 5 மணியளவில் கண்டியின் சந்தைப் பகுதியிலிருந்து முதலாவது புகைக்குறிகள் கிளம்பத் தொடங்கின. அவை மறுநாட் காலையில் முழுநகரத்திற்கும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளுக்கும் பெருந்தீயாகப் பரவியது. வடக்கில் தமிழர்கள் ஒரு பௌத்த பிக்குவை வெட்டி அத்துண்டுகளைச் சிங்களப் பெண்களின் மார்புகளுடன் சேர்த்து மீன் பெட்டிகளில் அடைத்துக் கண்டிச் சந்தைக்கு அனுப்பி வைத்திருக்கிறார்கள் என்ற எவ்வித ஆதாரமுமற்ற கதை மீன் முதலாளியிடமிருந்து, அங்காடி வியாபாரிக்கும், பின்னர் மூட்டை சுமப்பவனுக்குமாகப் பரவியது.

தீவைப்பு, கொள்ளை, தாக்குதல், கொலை என்பன அன்றிரவே ஆரம்பித்து வெள்ளிக்கிழமை காலை காட்டுத் தீ போல எங்கும் பரவியது. பொலிசார் எதிலும் தலையிடாமலோ, பக்கச் சார்பாகவோ, தகுதியற்ற முறையிலோ அல்லது இவையெல்லாம் ஒன்று கலந்த முறையிலோ நடந்து கொண்டனர்.

சத்தியோதய உடனே செயற்படத் தொடங்கியது. அன்றிலிருந்து இன்றுவரை இனங்களுக்கிடையிலான பிரச்சினைகளில் ஈடுபடுவதிலிருந்து அது பின்வாங்கவில்லை. அப்படி ஒரு

கணம் தயங்கியிருந்தாலும் கூட சத்தியோதயவில் தங்கியிருக்கும் தமிழ் அங்கத்தவர் ஒருவரின் தந்தை வத்தேகமவிலுள்ள ஒரு கடையில் கொடூரமாக உயிருடன் எரித்துக் கொல்லப்பட்டதும், நத்தரம்பொத்தவிலுள்ள அவரின் தாயாரின் வீடு பக்கத்துக்குடியிருப்பிலுள்ள இளைஞர்களால் முற்றாகக் கொள்ளையடிக்கப்பட்டதுமான சம்பவங்கள் எமது தயக்கத்தை நீக்கியன. சத்தியோதய, பேரிழப்புக்குள்ளான சகோதரனுடனும், துன்பத்தில் ஆழ்ந்த அவரது குடும்பத்தாருடனும் அசையாத கற்பாறையாக நின்றது.

தமிழ்த் தோட்டத் தொழிலாளர்களின் ''லயன்கள்'' தாக்குதல்களுக்கு உள்ளாக்கப்பட்டன என்ற செய்திகள் எல்லாத் திசைகளிலிருந்தும் வந்து குவிந்தன.

செய்திகளைத் தொடர்ந்து உடனடி உதவிக்கான வேண்டுகோள்கள் முக்கியமாக மத்திய, சப்பிரகமுவ, தென் மாகாணங்களிலிருந்து வரத் தொடங்கின. இவை தொலைபேசி மூலமாகவும், அவலநிலையில் ஓடிவந்த அகதிகள் மூலமாகவும் —1974-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் சத்தியோதயவில் ஸ்தாபிக்கப்பட்ட —தோட்டப்பிரதேச இணைப்புப்பணிமனையை வந்தடைந்தன. இந்த இணைப்புப் பணிமனையின் தோற்றம் ஒரு சுவையான கதையாகும். அது முன் எப்பொழுதுமே எழுதப்படாதபடியாலும் வருங்கால இனங்களுக்கிடையில் நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கத்துடன் இப்பணிமனை நேரடித் தொடர்புகளைக் கொண்டிருப்பதாலும் அதை இங்கு நினைவு கூருவது பொருத்தமானதே.

1972-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் கண்டியில் சத்தியோதய நிலையம் ஆரம்பிக்கப்பட்டது. அப்பொழுது, வருங்காலத்தில் இனங்களுக்கிடையிலான உறவுகள் பற்றிய விடயத்தில் அதன் பங்குபற்றி எவருமே எந்தவித கருத்தையும் கொண்டிருக்கவில்லை. 1972-ம் ஆண்டின் முதலாவது காணிச்சீர்திருத்தச் சட்டமும், அதனைத் தொடர்ந்து 1973-74 இல் ஏற்பட்ட உணவுப் பஞ்சமும் சத்தியோதயவின் வருங்கால பாதையைத் தெளி

வாக அமைத்துக் கொடுத்தன. வெளிநாட்டுச் சக்திகளின் பொருளாதார அடிமைத் தனத்திலிருந்து விடுதலை பெற அன்றைய அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட முதல் தீர்க்கமான நடவடிக்கையெனக் காணிச்சீர் திருத்தத்தை சத்தியோதயவும் மற்றும் பலரும் வரவேற்றனர். ஆனால் சோஷலிச காணிச் சீர்திருத்தம்; இனவெறி இழிநிலை, அரசியற்சுயநலம் என்னும் பலிபீடத்தில் துஷ்பிரயோகம் செய்யப்பட்ட போது தோட்டத் தொழிலாளர்கள் அவர்களின் லயன்களிலிருந்து வெளியேற்றப்பட்டு கண்டி, கம்பளை, நாவலப்பிட்டி, கொழும்பு ஆகிய நகரங்களின் வீதிகளில் அலையும்படி விரட்டி அடிப்பதற்கு சிங்களப்பாட்டாளிகள் தூண்டப்பட்டனர். இதனால் பெரும் ஏமாற்றம் விரைவிலேயே எமக்குக் கிட்டியது. காணிச்சீர்திருத்தத்தால் பாதிக்கப்படாத மக்களைப் பஞ்சம் வாட்டி வதைத்தது. எமது அறிவுக்கு எட்டியவரையில் நம் நாட்டு வரலாற்றிலே, முதன் முறையாக இடம் பெயர்ந்த மக்கள் வீதிகளில் கோரப் பட்டினியால் வாடுவதைக் காணக் கூடியதாக இருந்தது.

இந்நிலை பற்றிச் சத்தியோதய துயரத்துடனும் தயக்கத்துடனும் பேசவும் எழுதவும் ஆரம்பித்தது. அத்துடன் தனது இயல்பான சிந்தனைக்கும் செயற் திட்டத்திற்கும் ஏற்ற நடவடிக்கைகளை—சமூக மாற்றம், சமய கலாச்சாரம்—முன்னெடுத்துச் சென்றது. கண்டியிலுள்ள 'லேவல்ல' என்னுமிடத்தில் 1974-ம் ஆண்டு மே மாதம் 4 — 6-ந் திகதி வரை தங்கியிருந்து மாக்ஸிய கிறிஸ்தவ உரையாடல் ஒன்றை நடாத்துவதற்கு சத்தியோதய நிலையம் ஏற்பாடு செய்திருந்தது. இரவு போசனத்திற்குப் பின் இரு வழக்கத்திற்கு மாறான (Informal) உரைகள் இரண்டு இரவுகளிலும் இடம் பெற்றன. முதலாவது உரையை முன்னணி வகிக்கும் ஒரு மாக்ஸிய வாதியும், இரண்டாவது உரையை ஒரு ஆயரும் நிகழ்த்துவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டிருந்தன. உரையாற்றுவதற்குச் சம்மதித்த மாக்ஸியவாதி கடைசி நிமிடத்தில் வரமுடியாமல் போனதால், அமைப்பாளர்கள் உரையாடலில் பங்கு கொள்ள வந்திருந்த ல. ச. ச. கட்சியைச் சேர்ந்த ஹெக்

டர் அபயவர்த்தனவைத் தங்களுக்கு உதவுமாறு வேண்டினர்; ஹெக்டரும் பெருந்தன்மையாகச் சம்மதித்தார். சிறிது நேரத்தில் தம்மைத் தயார் செய்துகொண்ட அவர், அப்பொழுது நாட்டின் முக்கியமான சமூகப்பிரச்சினை பற்றிப் பேசப்போவதாகவும், அது தோட்டத்தொழிலாளரின் அன்றைய நிலைபற்றியது எனவும் குறிப்பிட்டார். இந்நாட்டு மக்கள் பொதுவான சமூக, வரலாற்று ரீதியான ஒதுக்கப்பட்ட நிலையிலிருந்து விடுதலை பெறுவதற்கான ஒரு முன் நிபந்தனையாக தமிழ்த் தோட்டத் தொழிலாளர்கள் தமது உண்மையான பொருளாதார ஒதுக்கலிலிருந்து விடுதலை பெறுவது அவசியமாகின்றது என ஒரு தீர்க்கதரிசியைப் போன்று அவர் தமது உணர்ச்சிகரமான உரையைத் தொகுத்துக் கூறினர்.

அதன் பின்பு, தொடர்ந்து உரையாடலில் கலந்துகொண்ட சிலர் ''பெருந்தோட்டத் தொழிலாளர்களை ஏனைய மக்களோடு ஒன்றிணைத்தல்'' என்ற தலைப்பில் அறிக்கை ஒன்றினை வெளியிட்டனர் அதன் கடைசிப் பந்தியில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டிருந்தது ''பெருந்தோட்டத் தொழிலாளர்களின் நீதிக்கான போராட்டத்திலும் அதேவேளையில் அடிப்படையான மானிட நலன்களுக்கும், புதிய சமுதாயத்தின் நலன்களுக்குமான போராட்டத்திலும் ஆகக் கூடிய மக்களைத் தம்மால் இயன்றளவில் ஈடுபடுத்துவதே இந்த அறிக்கையின் நோக்கமாகும். இது எல்லோருடையவும் போராட்டமாக இருக்க வேண்டும். பௌத்த குருமார்கள் இவர்களைப் பாதுகாக்க முன்வரவேண்டும்; கிறிஸ்தவ மற்றும் சமய குருமார்களும் சமயவாதிகளும் இது பற்றிப் பேசித் தீர்க்கமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். சிங்கள ஆசிரியர்களும் ஆயுள்வேத வைத்தியர்களும், இவர்களுக்காகத் தம் குரல்களை எழுப்ப வேண்டும். இந்நாட்டில் இப்பொழுது ஏற்பட்டுவரும் பரந்த சமூக சீர்திருத்த இயக்கத்தின் ஒரு பகுதியாகிய தோட்டங்களில் நடைபெறும் அநீதியை இல்லாதொழிக்கும் போராட்டத்தில் இலட்சியவாதியான ஒவ்வொரு சோஷலிசவாதியும் பங்கெடுக்க வேண்டும்.

கடைசியாக, இந்த விடயத்தில் சுயேச்சையாக இயங்கும் அமைப்புக்கள் தம்மாலியன்றனவற்றைச் செய்யவேண்டுமென வேண்டுகோள் விடுப்பதுடன், தனிப்பட்ட ஒவ்வொருவரும் தமது ஒத்துழைப்பை நல்க வேண்டுமெனவும் கேட்டுக்கொள் கின்றோம். எல்லாவற்றுக்கும்மேலாக நாட்டின் முன்னேற்றத் திற்கு அதிமுக்கியமான இக்கால கட்டத்தில் ஏற்ற நடவடிக் கைகளை எடுக்குமாறு அரசாங்கத்தை ஊக்குவிப்பதே எமது முக்கிய நோக்கமாகும்.

இந் நோக்கங்களில் சிலவற்றை அடைவதற்காக, காணிச் சீர்திருத்தம் உணவுப் பற்றாக்குறை ஆகியவற்றின் விளைவாகத் தோட்டப் பகுதிகளில் ஏற்பட்ட நிலைகுறித்துக் கவலை தெரி வித்த 20 க்கு மேற்பட்ட ஸ்தாபனங்களை 1974-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 17-ந் திகதி சத்தியோதய கண்டியில் ஒன்று கூட்டியது. கூட்டத்தின் முடிவில் அங்கு சமுகமளித்திருந்த அங்கத்தவர்களால் தோட்டப் பிரதேசங்களுக்கான இணைப்புப் பணிமனை அமைக்கப்பட்டதுடன் அந்த இணைப்புப் பணிமனை சத்தியோதயவிலிருந்தே செயற்படத் தொடங்கவேண்டுமென வும் கேட்டுக் கொள்ளப்பட்டது. தோட்டத் தொழிலாளர் களையும், நாட்டின் தோட்டப்பகுதி மாவட்டங்களிலுள்ள கிராம விவசாயிகளையும் ஒன்று சேர்த்தே பணிமனை தனது கவனத்தைச் செலுத்தவேண்டும் என்ற நோக்குடனேயே பிர தேசம் என்ற சொல் சேர்த்துக் கொள்ளப்பட்டது.

தோட்டத் தொழிலாளர்களினதும், தோட்டப் பிரதே சங்களிலுள்ள சிங்கள விவசாயிகளினதும்—அவர்களும், பெருந் தோட்ட அமைப்பினுல் சுரண்டப்பட்டு ஒடுக்கப்பட்ட வர்க்கத் தைச் சேர்ந்தவர்களாக இருப்பதுடன், தமிழ்த் தோட்டத் தொழிலாளர்களின் நீதிக்கான போராட்டத்தில் இயற்கை யான நேசசக்திகள் —பொறுமையான கஷ்டமான நீதிக் கான போராட்டமே இணைப்புப் பணிமனையின் முக்கிய குறிக் கோளாக இருந்தது.

சுயேச்சையான குழுக்கள் சில வேலைகளில் மட்டும் தொழிற் சங்க ஆலோசனையுடன் இயங்குவது போதுமானதல்ல எனப் பணிமனை 1977 அளவில் உணர்ந்தது. 'கிறிஸ்தவ தொழிலாளர் கூட்டுறவின்' உதவியுடன், கொழும்பில் தொழிற்சங்கங்களுடன் மூன்று ஆலோசனைக் கூட்டங்களைப் பணிமனை நடாத்தியது. 1977 ஜுலை பொதுத்தேர்தலும், அதனைத் தொடர்ந்து ஆகஸ்ட் (1977) இனவெறி இரத்தக்களரியும் ஏற்பட்டது. தமிழர்கள் என்ற ஒரே காரணத்தினால் தாக்கப்பட்ட 2600க்கு மேற்பட்ட தோட்டத் தொழிலாளர்களின் குடும்பங்களைக் காப்பாற்றுவதில் பணிமனை நேரடியாக ஈடுபட்டது. வடக்கு கிழக்கு மாகாண அரசியலைப் பற்றி எதுவுமே அறியாதவர்கள் தோட்டத் தொழிலாளர்கள் என்பது அப்போது உணரப்படவில்லை. வடக்குக் கிழக்கு மாகாணங்களிலுள்ள தமிழர்களையும் விட தோட்டத் தொழிலாளர்கள் உதவியற்ற நிலையிலும் பாதுகாப்பற்ற நிலையிலும் இருந்தமையால் அவர்கள் கொள்ளை, தீவைப்பு, கொலை ஆகியவற்றுக்கு ஆளானார்கள்

இதைத் தொடர்ந்து 1978இலும் 1979 இன் ஆரம்பத்திலும் தொழிற் சங்கங்களுடனும், ஏனைய இயக்கங்களுடனும் மூன்று ஆலோசனைக் கூட்டங்கள் நடைபெற்றன. தோட்டத் தொழிலாளர்களுக்கும், கிராமவாசிகளுக்கும் நீதியைப் பெற்றுக் கொடுக்கக் கூடிய பல நடவடிக்கைகள் இக் கூட்டங்களில் ஆரம்பித்து வைக்கப்பட்டன. —இப் பிரச்சினைகள் நாடறிந்தவை— இந்த நடவடிக்கைகளை மேலும் விரிவுபடுத்தும் நோக்குடன். கண்டியிலுள்ள சங்கங்களும் இயக்கங்களும், கொழும்பிலுள்ள சங்கங்களையும், இயக்கங்களையும் சந்திக்க வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது.

இதன்படி 79 ஏப்பிரல் 8-ந் திகதி பணிமனை ஒரு ஆலோசனைப் பொதுக்கூட்டத்தைக் கொழும்பில் ஏற்பாடு செய்திருந்தது. இந்தக் கூட்டத்திலேயே முதன் முதலாக, இனங்களுக்கிடையில் நீதிக்கான இயக்கம் என்ற கருத்து முன் வைக்கப்பட்டது. அத்துடன் அதில் பங்கு கொண்டவர்கள் பத்திரிகைகளில் அன்று வெளிவந்து கொண்டிருந்த வகுப்புவாத பிரச்

சாரத்தைக் கண்டித்துப் பத்திரிகை சபைக்குக் கடிதமொன்று எழுதத் தீர்மானித்தனர்; அக்கடிதத்தின் பிரதி ஒன்று ஜனாதிபதிக்கு அனுப்பப்பட்டு, அவரின் செயலாளரினால் பெற்றுக் கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டது. பத்திரிகை சபையும் கடிதத்தைப் பெற்றுக் கொண்டதாக அறிவித்ததுடன், இதுபற்றி மேலும் தொடர்பு கொள்வதாகவும் தெரிவித்தது. ஆனால் இதுவரை எவ்வித பதிலுமே எமக்குக் கிடைக்கவில்லை. இது பற்றிய ஆவணங்கள் அனுபந்தம் - அ என்ற பகுதியில் தரப் பட்டுள்ளன.

அடுத்த ஆலோசனைக் கூட்டம் 1979 - ம் ஆண்டு ஜூலை 1 - ந் திகதி கொழும்பில் நடைபெற்றது. தோட்டப் பகுதிகளில் தமிழ்த் தொழிலாளர்களுக்கும் சிங்கள கிராமவாசிகளிற்குமிடையில் வளர்ந்து வரும் பிணக்குகள், மோதல்களைப் பற்றி விவாதிக்கத் தொடங்கி, நாடு பூராவும் ஏற்பட்டுவரும் ஆபத்தான வகுப்பு வாதத்தின் தாக்கம் அல்லது அடையாளமே தோட்டப் பகுதிகளில் ஏற்பட்டு வந்த மோதல்கள் என ஒரு முழு விவாதத்துடன் முடிவுற்றது. பெரும்பான்மை சிறுபான்மை உறவுகள் பற்றிய தேசிய இனப்பிரச்சினைக்கு ஒரு அரசியல் தீர்வு காணாமல் இனப் பிரச்சினைகளுக்கு உண்மையான தீர்வினைக் காணமுடியாதென்பது ஏற்றுக் கொள்ளப்பட்டது.

1979 ஜூலை 20-ல் இன்னுமொரு ஆலோசனைக் கூட்டம் கொழும்பில் நடைபெற்றது. பின்னோக்கிப் பார்க்கும் போது மூன்று காரணங்களுக்காக இக் கூட்டம் மிக முக்கியமானதாக அமைந்தது. முதலாவதாக கடந்த இரு கூட்டங்களிலும் உருவாகிய ஒரு தேசிய இயக்கம் பற்றிய கருத்து ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டது. சுயேச்சையான இயக்கங்கள்' அரசியல் கட்சிகள், தொழிற் சங்கங்கள் ஆகியவற்றைக் கொண்ட பரந்த தளத்தினைக் கொண்ட இயக்கமாக இருக்கும். ஒவ்வொரு கட்சி, சங்கம், இயக்கங்களினதும் முழுமையான சுதந்திரம் உறுதிப்படுத்தப்பட்டு பாதுகாக்கப்படும். இனவா

தத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்தலையும், இனங்களுக்கிடையில் நீதியையும், சமத்துவத்தையும், நிலைநாட்டும் பொதுவான பொறுப்பையும் ஏற்றுக்கொண்டவர்கள் இந்த இயக்கத்தில் அங்கத்துவத்தைப் பெறலாம். செயலாற்றத்தைப் பொறுத்த வரை ஒவ்வொரு குழுவும் தாமாகவே இயங்கும் எனவும் தீர்மானிக்கப்பட்டது. இரண்டாவதாக யாழ்ப்பாணத்தில் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள அவசரகாலசட்டம் நீக்கப்படவேண்டுமெனவும், வடபகுதி மக்கள் பொலிஸ், இராணுவத்தினரின் அடக்குமுறைக்கு உள்ளாக்கப்படுவதைக் கண்டித்தும், ''பயங்கரவாத தடுப்புச்சட்டம்'' எனக் கூறப்படும் சட்டத்தைக் கண்டித்தும், பல அரசியல் கட்சிகள், தொழிற்சங்கங்கள் மற்றும் இயக்கங்களின் பிரதிநிதிகளால் கைச்சாத்திடப்பட்ட அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டது: அதே நேரத்தில் பொறுப்பு வாய்ந்த அதிகாரி அதைப் பத்திரிகையில் வெளியிடுவதைத் தடுத்தார். அந்த அறிக்கை அனுபந்தம் —'ஆ' என்பதில் கொடுக்கப்பட்டிருக்கின்றது.

அவசரகால நிலை பிரகடனப்படுத்தப் பட்டபின்னர் ஒரு பொதுஸ்தாபனத்தினால் முதல் விடுவிக்கப்பட்ட அறிக்கை என்ற முறையில் அது தொழிற்சங்கங்கள், அரசியல் கட்சிகள் மீது ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியது. செப்ரெம்பர் மாதம் 10 - ந் திகதி, திடநம்பிக்கையுடன் அது பற்றி வர்த்தக ஊழியர் சங்கமும், கொம்யூனிஸ்ட் கட்சித் தொழிற்சங்கங்களும் முன் வைத்த பிரேரணைகளை கூட்டுத் தொழிற்சங்க நடவடிக்கைக்குழு ஏற்றுக்கொண்டு செப்ரெம்பர் 20- ந் திகதி ''ஹைட்'' (HYDE) பார்க்கில் நடைபெறவிருந்த பொதுக் கூட்டத்தில், ''பயங்கரவாதிகள்'' தடுப்புச் சட்டத்தை இயற்றி நாடு முழுவதும் அதை அமுல் நடத்துவதும், யாழ்ப்பாண மாவட்டத்தில் அவசரகால சட்டத்தை அமுல் நடத்துவதும், மக்களின் ஜனநாயக, குடியுரிமைகளுக்கு எதிரான நடவடிக்கைகள் என்பதால் அவைகளுக்கு எதிர்ப்புத் தெரிவிப்பதை நிகழ்ச்சி நிரலில் சேர்த்துக் கொண்டது.

லங்கா சமசமாஜக் கட்சியும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் அக்கட்சிகளினது தொழிற் சங்கப் பிரதிநிதிகளும் செப்ரெம்பர் 20 - ந் திகதி நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்திற்கும், யாழ்ப்பாணத்தில் அவசரகால ஆட்சி நடைமுறையிலிருப்பதற்கும் தெளிவாகவும் தீவிரமாகவும் ஏகமனதான எதிர்ப்பைத் தெரிவித்தனர்.

இனங்களுக்கிடையில் நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கம் ஜுலை 20-ல் நிறைவேற்றிய அதே தீர்மானத்தை, புரட்சிகர மாக்ஸ்சியக் கட்சி, நவசமசமாஜக்கட்சி, ஸ்ரீலங்கா கொம்யூனிஸ்ட் கட்சி, லங்கா சமசமாஜக்கட்சி, ஜனத்தா விமுக்தி பெரமுன ஆகிய ஐந்து கட்சிகள் செப்ரம்பர் 24-ந்திகதி கூட்டாக வெளியிட்ட அறிக்கையில் ஏற்றுக்கொண்டன.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, அதன் தொழிற்சங்கங்கள் எடுத்த நடவடிக்கையைப் பின்பற்றி 1979 டிசம்பர் 4 - ந் திகதி பாராளுமன்றத்தில், அவசரகால ஆட்சி யாழ்ப்பாணத்தில் நீடிக்கப்படுவதை எதிர்த்து வாக்களித்தன.

மூன்றாவதாக, 1979 ஜுலை 20 - ந் திகதி நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட, யாழ்ப்பாணத்தில் ஜுலை 13 – ந் திகதி அரசாங்கத்தால் அவசரகால ஆட்சி பிரகடனப்படுத்தப் பட்டபின்னர் அங்கு ஏற்பட்டுள்ள உண்மை நிலையை அறிந்து கொள்வதற்கென தூதுக்குழு ஒன்றினை அனுப்புவதென்ற தீர்மானம் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இத்தீர்மானத்தின் பேரில் அங்கு சென்ற தூதுக்குழு 30 – 7–79 அன்று யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேறியவுடன் ஜனாதிபதிக்கு எழுதிய கடிதத்தில் வடக்கில் பொலிசாரினால் மேற்கொள்ளப்படும் சட்டவிரோத நடவடிக்கைகள் பற்றிய பாரபட்சமற்ற விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டுமென்று கேட்டுக் கொண்டதுடன், பொலிசாருக்கு எதிராகச் சாட்சிகளாக வரக்கூடியவர்களுக்கு உடனடியாகப் பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டது. கடிதத்தின் பிரதிகள் பிரதம மந்திரிக்கும், எதிர்க்கட்சித் தலைவருக்கும்

அனுப்பி வைக்கப்பட்டன. இக்கடிதத்தைப் பெற்றுக் கொண்டதாக ஜனாதிபதியின் அந்தரங்கக் காரியதரிசியிடமிருந்து 8 – 8 – 79-ல் ஒரு கடிதம் கிடைக்கப்பெற்றது. அனுப்பப்பட்ட கடிதமும், ஏற்றுக்கொள்ளப்பட்ட கடிதமும் அனுபந்தம் 'இ' 1 - ல் வெளியிடப்பட்டுள்ளது.

தூதுக்குழுவின் சார்பில், அதன் அங்கத்தவரான கலாநிதி குமார் டேவிற் 1979 ஆகஸ்ட் 10 - ந் திகதி நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் அறிக்கை ஒன்றினைச் சமர்ப்பித்தார். அந்த அறிக்கை முழுமையாக அனுபந்தம் - 'இ' 2 - ல் வெளியிடப்பட்டுள்ளது. இந்த ஆலோசனைக் கூட்டத்திலேயே இந்த இயக்கத்திற்கு ''இனங்களுக்கிடையில் நீதிக்கும் சமத்துவத்திற்குமான இயக்கம்'' (MIRJE) எனப் பெயரிடப்பட்டது.

இனங்களுக்கிடையில் நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கம் 1979 ஆகஸ்ட் 22 – ந் திகதி ஆலோசனைக் கூட்ட முடிவுகளின் படி 1979 ஆகஸ்ட் 25 - ந்திகதி பத்திரிகை அறிக்கை ஒன்றினை வெளியிட்டது. (அனுபந்தம் 1 'ஈ' இல் வெளியிடப்பட்டுள்ளது.) 1979 ஒக்டோபர் 19 - ம் திகதி பொதுச்சபையின் ஆலோசனைக் கூட்டத்தில் நகல் யாப்பு விவாதிக்கப்பட்டுத் திருத்தப்பட்டது. திருத்தப்பட்ட நகல் யாப்பு, மேலும் சில திருத்தங்களுடன் 1979 டிசம்பர் 7 - ந் திகதி கொழும்பில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டது. (அனுபந்தம் 'ஊ' - இல் வெளியிடப்பட்டுள்ளது.) அன்று, இனங்களுக்கிடையில் நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கம் கொழும்பில் தலைமைப்பீடத்தை அமைத்துக் கொண்டதுடன் யாப்பினைக் கொண்ட இயக்கமாகவும், யாழ்ப்பாணத்தில் ஒரு கிளையையும், கண்டி, குருநாகல், இரத்தினபுரி ஆகிய இடங்களில் ஆரம்ப நிலையிலுள்ள கிளைகளைக் கொண்ட முழுமையான ஒரு தேசிய இயக்கமாக உருப்பெற்றது.

## 2. குறிக்கோள்கள்

யாப்பு அவற்றைக் கீழ்க் கண்டவாறு தெளிவாகக் கூறுகின்றது.

பின் வரும் கொள்கைகளின் அடிப்படையில், இனங்களுக்கிடையில் நீதியையும், சமத்துவத்தையும் விருத்தி செய்வதே இவ்வியக்கத்தின் குறிக்கோள்களாகும்.

1. நாட்டிலுள்ள பல்வேறு இனங்களுக்கும், வெவ்வேறு மொழி பேசும் பிரிவினருக்கும் எல்லா உரிமைகளிலும் சமத்துவத்தை ஏற்படுத்தல்.

2. வெளிப்படையாகவும், மறைமுகமாகவும் காட்டப்படும் இனத்துவேஷம், இன ரீதியான அநீதிகள் பாகுபாடுகள் ஆகியவற்றை எதிர்த்தல்.

3. அரசாங்கத்தின் ஜனநாயக விரோத கொள்கைகளையும், நடவடிக்கைகளையும் சகல அடக்குமுறைச் சட்டங்களையும், பாதுகாப்புப்படையினரின் அடக்குமுறை நடவடிக்கைகளையும் இனங்களுக்கு மத்தியில் நல்லுறவை ஏற்படுத்தும் நோக்கத்துக்காக எதிர்த்தல்.

4. ஜனநாயக, மனித உரிமைகளையும், மனித சுதந்திரங்களையும் இனங்களுக்கிடையில் நல்லுறவை ஏற்படுத்தும் நோக்கத்திற்காக ஆதரித்தல்.

5. தோட்டங்களிலும், ஏனைய பகுதிகளிலும் வாழும் தமிழ் மக்கள் உட்பட இந்நாட்டின் எல்லா மக்களினதும முழுமையான, சுதந்திர பிரஜைகளுக்கான உரிமைகளை ஆதரித்தல்.

6. தொழில், கல்வி, குடியிருப்பு, சுகாதாரம் போன்ற துறைகளில் தோட்டத்தொழிலாளர்களுக்கும், ஏனையவர்களுக்கும் இனரீதியாகக் காட்டப்படும் பாகுபாட்டை எதிர்த்தல்.

7. இனங்களுக்கிடையில் நீதியையும், சமத்துவத்தையும் நிலை நாட்டும் போராட்டத்தில் எல்லா இனங்களையும் சேர்ந்த தொழிலாளர்களுக்கும் விவசாயிகளுக்கும் இடையில் ஐக்கியத்தை வளர்த்தல்.

இனங்களுக்கிடையில் நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கத்தின் குறிக்கோள் (பரந்தளவில்) குடியுரிமைப் பாதுகாப்புக் குழு அல்லது மனித உரிமைகளைப் பாதுகாக்கப் பயன்படும் அரசியல் இயக்கத்திலும் பார்க்கக் குறுகியதாகவும் அதே சமயத்தில் பரந்ததாகவும் இருக்கின்றது. இனங்களுக்கிடையிலான உறவுகள் பற்றிய விடயத்தில் மட்டும் தலையிடுவதால் இது குறுகிய நோக்கினைக் கொண்டதெனலாம். வகுப்புவாதத்தையும், இனவெறியையும் நீக்குவதற்கு ஒரு குறிப்பிட்ட வரலாற்றுக் காலகட்டத்தில் அநீதிக்கும் பாரபட்சமான நடவடிக்கைகளுக்கும் ஆளானவர்களை குறிப்பாகவும், பொதுவாகவும் நீதியையும் சமத்துவத்தையும் நிலைநாட்டுவதற்கான குறிக்கோள்களையுடைய திடசங்கர்ப்பங் கொண்ட தனிநபர்கள், சுயேச்சையான இயக்கங்கள், சமயக்குழுக்கள், தொழிற்சங்கங்கள், அரசியல் கட்சிகள் ஆகியனவற்றைக் கொண்ட தேசிய இயக்கமாக இருப்பதால் இதை பரந்த நோக்கினைக் கொண்ட இயக்கமாகவும் கருதவேண்டும்.

## 3. நடவடிக்கைகள்

இ. நீ. ச இயக்கம் தனக்குரிய பெயரையும் யாப்பினையும் பெற்று அநேக மாதங்கள் சென்றுவிடவில்லை. இந்தக் குறுகியமாதகாலத்தில் எமது இயக்கம், தனது தனித்தன்மையை உருவாக்குவதிலும், குறிக்கோள்களைத் தெளிவாக்குவதிலும், தெளிவான சூழ்நிலைகளில் தனது தன்மையையும் குறிக்கோள்களையும் நிலைநாட்டுவதிலும் செலவிட்டது

யாழ்ப்பாணத்திற்கு, உண்மைகளை அறிந்து வர ஒரு குழுவை அனுப்பியதையும், அதன் பின்னர் அறிக்கை வெளியிட்டது பற்றியும் முன்னர் கூறப்பட்டது.

1979 ஜுலை 30 – ந் திகதி இத்தூதுக்குழு யாழ்ப்பாணத்தில் பல அரசியல் கட்சிகள், தொழிற்சங்கங்கள், சமயக்குழுக்கள், சுயேச்சையான இயக்கங்கள், மாணவ மன்றங்கள் ஆகியவற்றைச் சேர்ந்த சுமார் நூறுபேர்களைச் சந்தித்து இயக்கத்தின் கிளை ஒன்றினை ஸ்தாபித்தது. அன்றிலிருந்து இ. நீ. ச இயக்கத்தின் வடபிராந்தியக்கிளை இயற்கையாகவே நாம்

எதிர்பார்த்தபடி இனங்களுக்கிடையில் நீதிக்கும் சமத்துவத்துக்குமான நடவடிக்கைகளில் முன்னின்று உழைத்து வருகின்றது. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சாசனம் பிரகடனப் படுத்தப்பட்ட 31 - வது ஆண்டு நிறைவு தினத்திற்கு முதல் நாள், 1979 டிசம்பர் 9 - ந் திகதி முழு நாள் மனித உரிமைகள் தின அனுட்டானத்தை நடாத்தியமை, இ. நீ. ச. இயக்க வடபிராந்தியக்கிளையின் ஒரு முக்கிய செயல் எனக் குறிப்பிடலாம். இது சம்பந்தமாக 1980 ஜனவரி 1 - ம் திகதி 'லங்கா கார்டியனில்' வெளிவந்த உணர்ச்சி மிக்க அறிக்கை அனுபந்தம்—'உ' 1 - ல் வெளியிடப்பட்டுள்ளது.

நான்கு இளைஞர்கள், டிசம்பர் 9 - ந் திகதிக்கான கொண்டாட்டங்களை விளம்பரப்படுத்தும் சுவரொட்டிகளை டிசம்பர் 7 - ந் திகதி ஒட்டும் போது பொலிசாரால் கைது செய்யப் பட்டனர். யாழ்ப்பாணக் கிளைத் தலைவர்களின் வேண்டுகோளின் பேரில் அவர்கள் டிசம்பர் 8 – ந் திகதி விடுதலை செய்யப் பட்டனர் கைது செய்து மறியலில் வைக்கப்பட்டமை, இன்னும் எத்தனையோ இடர்ப்பாடுகளின் மத்தியிலும் அபூர்வமான திடசங்கர்ப்பத்துடனும், தைரியத்துடனும் இ. நீ. ச. இயக்கம் யாழ்ப்பாணத்தில் மனித உரிமைகள் தினத்தைக் கொண்டாடியது. இளம் இயக்கத்தின் உணர்ச்சிமிக்க செயல் என்று கொள்ளமுடியாது. ஏனெனில் இதன் பின்னரும் மனித உரிமைகள் மீறல்கள் பற்றி பிரச்சாரம் செய்யவும், ஐ. நாடுகள் மனித உரிமைப் பிரகடனங்களுச்கு அரசாங்கமும் சட்ட ரீதியான அங்கீகாரத்தைக் கொடுக்க வேண்டுமென்ற கோரிக்கைகளை முன்வைத்து தளராது தொடர்ந்தும் வடக்கில் போராடி வருகின்றது. இ. நீ. ச. இயக்கம் வடக்கில் —ஏனைய இடங்களில் விரைவில் ஸ்தாபிக்கப் படுமென நம்புகின்றோம் — மக்களின் மனச்சாட்சியின் குரலாக மாறிவருவதுடன் தனக்கென ஒரு அரசியல் ஆதிக்கத்தை வேண்டாமல் எல்லோருக்கும், முக்கியமாகப் பொலிஸ் இராணுவத் தலையீடுகளால் தம் வாசஸ்தலங்களின் பாதுகாப்பை இழந்து அதை எதிர்க்கச் சக்தியற்ற எளிய மக்களுக்காகவும், பொலிஸ் இராணுவப் படையினர்களால் கைது செய்யப்பட்டவர்களின் குடும்ப அங்கத்தவர்களை

இழிவுபடுத்துதல், தொந்தரவு, சித்திரவதை ஆகியவற்றி லிருந்து பாதுகாக்க; பெரிய இடங்களில் நண்பர்களைக் கொண் டிராத எளிய மக்களுக்கு நீதியையும் சமத்துவத்தையும் வேண்டி நிற்கின்றது.

இனங்களுக்கிடையில் நீதியை நிலை நாட்டுவதற்கும், அந்தக் கொள்கையை முன்னெடுத்துச் செல்வதற்கும், இனவெறிப் பிரசாரத்திற்கு எதிர்ப்புத் தெரிவிப்பதற்கும் பல்வேறு அளவில் பல மட்டங்களிலான குழுக்கள் இ' நீ. ச. இயக்கத்தால் தூண் டப்பட்டும் அல்லது அதனோடு இணைந்து பல இடங்களில் ஒன்று கூடி பிரச்சாரம் நடாத்தி வருகின்றன. நாடு முழுவதிலும் பரந்தளவில் அங்கத்தவர்களைச் சேர்க்கும் முயற்சி இப்போது நடைபெற்று வருகின்றது

1979 ஒக்டோபர் 27-ந் திகதி இலங்கை வர்த்தக ஊழி யர் சங்கத்தின் தலைமையகத்தில் ''தேசிய இனப்பிரச்சினையும் சமதர்மத் தீர்வும்'' என்னும் பொருள் பற்றி ஒரு கருத்தரங் கினை இயக்கம் நடாத்தியது; வடக்கிலும் கிழக்கிலுமுள்ள தமிழ் மக்களுக்கு சுயநிர்ணய உரிமை உண்டென்றும் பரந்த ளவில் ஒருமைப்பாடு தெரிவிக்கப்பட்டது. ஒரு சிறுபான்மைத் தேசிய இனத்திற்குப் பிரிந்து செல்லும் உரிமை உண்டென்றும் ஏற்றுக்கொள்வதன் அர்த்தம் பிரிவினைதான் உண்மையான ஒரே தீர்வு என ஏற்றுக்கொள்ளப்பட்டதாகாது எனவும் ஒத்துக் கொள்ளப்பட்டது.

1980 பெப்ரவரி 15-ந் திகதி இ. நீ. ச. இயக்கம் கொழும் பில் ''பிரஜா உரிமையும் நாடுகடத்தலும்'' என்னும் பொருள் பற்றி ஒரு கருத்தரங்கை நடாத்தியது. இந்த இரு பிரச்சினை களும் ஆழமாக ஆராயப்பட்டதுடன் முக்கியமாகத் தமிழ்த் தோட்டத் தொழிலாளர்களின் உரிமைகள் பற்றியும், இலங்கை இந்தியப் பிரதம மந்திரிகளுக்கிடையில் நாடு கடத்தல் பற்றி ஏற்பட்ட ஒப்பந்தங்கள் பற்றியும் ஆராயப்பட்டன.

விவாதத்தின் பின் ஏகமனதாகக் கீழ்க் கண்ட முடிவுகள் எடுக்கப்பட்டன.

1. சமீபகால இந்தியத் தொடர்புள்ள இளம் சந்ததியினர்களும் தோட்டங்களிலும், ஏனைய இடங்களிலுமுள்ள எல்லா மக்களுக்கும் அவர்கள் விரும்பினல் (பிரஜா உரிமை, குடியுரிமை) முழு உரிமைகளும் கொடுக்கப்படல் வேண்டும் ஸ்ரீலங்காவில் பிரஜா உரிமை பெறவிரும்புபவர்களுக்கு அதைப் பெற இலங்கை இந்திய ஒப்பந்தங்கள் தடையாக இருக்குமாஞல் அவை திருத்தப்படவேண்டும், அல்லது ரத்துச் செய்யப்பட வேண்டும்.

2. வம்சாவழிப் பிரஜைகளுக்கும், பதிவுசெய்யப்பட்ட பிரஜைகளுக்கும் இடையில் உள்ள வேறுபாடுகள் உடனே இல்லாதொழிக்கப்படவேண்டும்.

3. இரண்டாவது குடியரசு யாப்பின் 14 (2) சரத்தின்படி தொழில், காணிவழங்குதல் முதலிய விடயங்களில் தோட்டங்களிலும் வேறு இடங்களிலும் இப்பிரஜைகளின் உரிமைகளையும், வாய்ப்புக்களையும் கட்டுப்படுத்தும் பாரபட்சமான எல்லா சுற்றறிக்கைகளும், விதிகளும் உடனே வாபஸ் பெறப்பட வேண்டும்.

4. இலங்கைப் பிரஜைகளாகப் பதிவு செய்யப்பட்டவர்களுக்கு பிரஜா உரிமை உறுதிப்பத்திரங்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகள் விண்ணப்பத்தின் பேரில் கொடுக்கப் பட வேண்டும்.

5. இந் நாட்டிலுள்ள எல்லா இந்திய மக்களும் அவர்கள் விரும்பி பிரஜா உரிமை கோரும் பட்சத்தில் அவர்களுக்கு முழுமையான சுதந்திரமான பிரஜா உரிமை கொடுக்கப்பட வேண்டுமென்று எல்லா அரசியல் கட்சிகளும், தொழிற்சங்கங்களும், சுயேச்சையான இயக்கங்களும், சமயக்குழுக்களும் வலியுறுத்த வேண்டுமென நாம் வேண்டுகின்றோம்.

இந்தக் கருத்தரங்கு, தேசிய இயக்கமாகிய இனங்களுக்கிடையில் நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கத்திற்கு, அது தோன்றக் காரணமாய் அமைந்த இந்நாட்டில் தோட்டப் பகுதிகளில் வாழும் சுரண்டப்படும் தொழிலாளர்களின் நலன்களைக் கருத்தில் கொண்ட சிறிய அடித்தள இயக்கத்தை ஞாபகமூட்டியது;

## அனுபந்தம் — அ

பெருந்தோட்ட பிரதேச
இணைப்புப் பணியகம்
30, புஸ்பதான மாவத்தை
கண்டி.
8 - 4 - 1979

தலைவருக்கும்,
ஸ்ரீலங்கா பத்திரிகை சபை
அங்கத்தவர்களுக்கும்

அன்பார்ந்த பெரியோர்களே,

ஸ்ரீலங்காவில் பத்திரிகைகளைக் கட்டுப்படுத்தும் சட்ட ரீதியான பொறுப்புள்ள சபை என்ற முறையில், பயங்கரமானதும் ஆபத்தானதுமான சூழ்நிலை, பத்திரிகைகளின் இனவெறிப்பிரசாரத்தினாலும் இந்த நாட்டு சிங்கள தமிழ் பேசும் மக்களுக்கிடையில் இனவெறி உணர்வுகளை தூண்டக் கூடியதாகவும் மோதல்களை பெரிதுபடுத்தியும் உள்நோக்குடைய செய்தி அறிக்கைகளினாலும், உண்டாக்கப்படுகின்றது என்பதை உங்களுடைய சபையின் கவனத்திற்கு கொண்டு வரவிரும்புகின்றோம்.

இன வெறிப்பிரசாரம் செய்வதற்கென பல செய்தித்தாள்களும் சிறிய பத்திரிகைகளும் சிங்களத்திலும் தமிழிலும் சமீபகாலத்தில் வெளிவந்திருக்கின்றன எனினும் சிங்கள தமிழ் பேசும் மக்களின் சமாதான உறவுகளுக்கு பெரும் ஆபத்து

உருவாகுவதற்கு இந்தநாட்டின் மூன்று பெரும் பத்திரிகை ஸ்தாபனங்கள் கடந்த சில மாதங்களாக தங்களுடைய பத்திரிகைகளில் அறிக்கைகளை வெளியிடும் வகையிலும், பிரசுரிக்கும் வகையிலும், தலையங்கம் தீட்டும் முறையிலும் இனரீதியாக ஆத்திரமூட்டும் செய்திகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து மிகக் கபடமான, மிக ஆபத்தான கொள்கைகளை கடைப்பிடித்து வருகின்றன. இந்த நடவடிக்கைகள் தற்செயலாகவோ, அல்லது தெரியாமலோ மேற்கொள்ளப்பட்டன என்பதை நாம் நம்பத் தயாராக இல்லை. ஏனெனில் ஒரே ஸ்தாபனம் வெளியிடும் வெவ்வேறு மொழிப் பத்திரிகைகளில் ஒரே செய்தி மாறுபட்ட வகுப்புவாத சார்பாக வெளிவருகின்றது. சன்சோனிக்கமிஷன் நடவடிக்கைகள் அறிவிக்கப்படுவதை ஒரு உதாரணமாக காட்ட விரும்புகின்றோம். பல பத்திரிகைகள் இரு பகுதியிலும் வகுப்புவாத உணர்வுகளை தூண்டிவிடக் கூடிய முறையில் இவற்றை வெளியிடுகின்றன. இந்தக் கமிஷன் தங்களுடைய உழைப்பைச் செலவழிப்பது இப்படியான ஒரு நோக்கத்திற்காக அல்ல என்பதே எமது கருத்தாகும்.

எதிர்வரும் ஸ்தலஸ்தாபன தேர்தல்களுடன், பத்திரிகைகளின் இந்தவித விஷமத்தனமான ஆத்திரமூட்டுகின்ற அறிக்கைகளும் பிரச்சாரமும், அளவிலும், தீவிரத்திலும், அதிகமாக்கப்படலாம் என நாம் பயப்படுகின்றோம். இது விசேடமாக சிங்கள தமிழ் பேசும் மக்கள் நெருங்கி வாழ்கின்ற தோட்டப் பகுதிகளிலும், நாட்டின் ஏனைய பகுதிகளிலும் பாரதூரமான முடிவுகளுக்கு இட்டுச் செல்லலாம். இவ்வகையான நடவடிக்கைகள் கட்டுப்படுத்தப்பட்டாலன்றி, இன்னும் ஒரு வகுப்புவாத மோதல் எற்படுவதற்கு பத்திரிகைகளே உடனடியான மூல காரணிகளாக அமையும்;

இன உணர்வுகளைத் தூண்டி விடக்கூடிய இந்த விடயத்தில் பத்திரிகைகளைக் கட்டுப்பாட்டில் கொண்டுவர தங்களிடம் இருக்கக்கூடிய செல்வாக்கையும், அதிகாரத்தையும் பாவிக்குமாறு நாம் வேண்டுகின்றோம். அரசின் கட்டுப்பாட்டிற்குள் இருக்கும் இரு பத்திரிகை ஸ்தாபனங்களைப் பொறுத்தமட்டில் விசேட பொறுப்பு இருக்கின்றதென நாம் அபிப்பிராயப்படுகின்றோம்;

நாம் இக்கடிதத்தில் குறிப்பிட்டவைகளை நிருபிப்பதற்கு பத்திரிகைகளில் இருந்து பெறப்பட்ட ஆவணங்களை உங்களிடம் சமர்ப்பிப்பதற்கு ஒரு நேர்முகப் பேச்சு வார்த்தைக்கு இடம் தருமாறு வேண்டுகின்றோம். இது விடயமாக எந்த விதமான தொடர்புகளும் மேற்கூறிய விலாசத்தில் பிதா போல் கஸ்பர்ஸ்க்கு அனுப்பப்படலாம்.

உங்கள் நம்பிக்கையுள்ள

(ஒப்பம்) ரெஜி சிறிவர்த்தன
மனித உரிமைகள் இயக்கம்

(ஒப்பம்) போல் கஸ்பர்ஸ்
(பெருந் தோட்ட
இணைப்பு பணியகம்)

| | |
|---|---|
| எம். தம்பு | — ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் |
| இன்டிக்கா குணவர்த்தன | — மனித உரிமைகள் இயக்கம் |
| ஒஸ்வின் பெர்னண்டோ | — ஐக்கிய தொழிலாளர் சம்மேளனம் |
| ஜெவ்றி அபயசேகர | — கிறிஸ்தவ தொழிலாளர் கூட்டுறவு |
| ஜயரட்ண மாலியகொட | — இலங்கை பொதுசேவை சங்கம் |
| ஏ. ரி. அல்போன்ஸ் | — ஹற்றன் சமூகசேவை நிலையம் |
| பொப்பகே லயனல் | — ஜனதா விமுக்தி பெரமுன |
| சாள்ஸ் அபயசேகர | — சமூக விஞ்ஞானிகள் கழகம் |
| சி. வி. வேலுப்பிள்ளை | — தேசிய தொழிலாளர் சங்கம் |
| ஏ. சி. இம்மனுவேல் | — சமூக பொருளாதார பயிற்சி நிலையம் கண்டி |
| ஆரியவம்ச குணசேகரா | — அகில இலங்கை சமாதான காங்கிரஸ் |
| ஆனு அபய சேகர | — கிறிஸ்தவ தொழிலாளர் கூட்டுறவு |
| லயனல் ஜயதிலக | — ஜனத்தா விமுக்தி பெரமுன |
| குசல அபயசேகர | — சர்வதேச சிவில் சேவை |
| விக்கிரமபாகு கருணரட்ண | — எல். எஸ் எஸ். பி. புதிய தலைமை |
| எல். சாந்திகுமார் | — பெருந்தோட்ட மக்கள் இயக்கம் |

| | |
|---|---|
| ஆர். சந்திரமோகன் | — இலங்கை பெருந்தோட்டத் தொழிலாளர் சங்கம் |
| வி. எல். பெரேரா | — மலைநாட்டு இளைஞர் பேரவை |
| குமாரி ஜயவர்த்தனு | — பெண்ணின் குரல் |
| எஸ், பாலகிருஷ்ணன் | — பெருந்தோட்ட இணைப்புப் பணிமனை |
| மில்ரன் பெரேரா | — சத்தியோதய |
| பி. விஜிறஞானதேரோ | — சமாஜவாதி பிக்கு பெரமுன |

பிரதி: மாட்சிமை தங்கிய ஸ்ரீலங்கா ஜனுதிபதி

---

பெருந்தோட்ட இணைப்பு
பணிமனை
30 புஷ்பதான மாவத்தை
கண்டி
9 - 4 - 1979

மாண்புமிகு
ஸ்ரீலங்கா ஜனுதிபதி,
அன்பார்ந்த ஜனுதிபதியவர்களே!

பல தொழிற்சங்கங்களும் தொழிலாள விவசாயிகள் இயக்கங்களும் பணியகத்தின் ஆதரவில் நேற்று கொழும்பில் ஒன்று கூடி எங்கள் நாட்டுப் பத்திரிகைகளில் கலக்கத்தைத் தரக்கூடிய வகையில் அதிகரித்து வரும் வகுப்புவாதப் போக்கை பத்திரிகை சபையின் கவனத்திற்குக் கொண்டுவருவதென தீர்மானித்தன. இதை பத்திரிகை சபைக்கு ஒரு கடிதம் எழுதுவதன் மூலம் நடைமுறைப்படுத்துவதென்றும் அதன் பிரதியை உபயோககரமாக மேன்மை தங்கிய தங்களுக்கு அனுப்புவதன் மூலமும் தங்கள் உயர்பதவியின் மூலமும் பத்திரிகைகள் தங்கள் சக்தியை இனங்களுக்கிடையில் அமைதியின்மையை ஏற்படுத்துவதற்குப் பதிலாக இனங்களுக்கிடையில் சமாதானத்

தையும் நீதியையும் ஏற்படுத்த முடியுமெனவும் தீர்மானிக்கப்பட்டது.

இனங்களுக்கிடையில் சமாதானமான சூழ்நிலையை அவசியம் வேண்டுகின்ற தேசிய அபிவிருத்தியில் எங்களின் முழு ஒத்துழைப்புக்கும் உறுதியளிப்பதுடன் எனது நல்வாழ்த்துக்களையும் தெரிவிக்கின்றேன்.

தங்களின் மிக உண்மையுள்ள
(ஒப்பம்) (பிதா) போல் கஸ்பர்ஸ், சே. ச.

---

37. கெப்பெட்டிபொல மாவத்தை
கொழும்பு 5.
11 - 4 - 1979

திரு. போல் கஸ்பர்ஸ்,
பெருந்தோட்ட பிரதேச
இணைப்பு பணிமனை
30 புஷ்பதான மாவத்தை,
கண்டி.

அன்பார்ந்த ஐயா!

ஸ்ரீலங்கா பத்திரிகை சபைத்தலைவருக்கு ஏப்ரல் 8, 1979 திகதியிட்டு நீங்கள் எழுதிய கடிதம் கிடைக்கப் பெற்றது. மீண்டும் தொடர்பு கொள்ளுவோம் என்பதை அறிவிக்கின்றேன்.

தங்கள் நம்பிக்கையுள்ள
(ஒப்பம்) செயலாளர்
ஸ்ரீலங்கா பத்திரிகை சபை

எமது இல. 315/I/Misc.
குடியரசு சதுக்கம்
கொழும்பு — 1
16 — 4 — 1979

வண. பிதா போல் கஸ்பர்ஸ் சே. ச.
பெருந் தோட்ட இணைப்புப் பணிமனை
30, புஷ்பதான மாவத்தை
கண்டி.

அன்பார்ந்த வணக்கத்துக்குரிய ஐயா!

ஸ்ரீலங்கா பத்திரிகைகளில் கலக்கத்தைத் தரும் வகையில் அதிகரித்து வரும் வகுப்பு வாதப் போக்கைப்பற்றி பத்திரிகைச் சபையின் கவனத்திற்கு கொண்டுவர பெருந்தோட்ட பிரதேச இணைப்புபணியகத்தின் ஆதரவில் கூடிய பல தொழிற்சங்கங்களும் மற்றும் தொழிலாள விவசாய இயக்கங்களினதும் தீர்மானித்ததை மேன்மை தங்கிய ஜனாதிபதியவர்கட்கு அறிவித்த, 79 ஏப்ரல் 9 திகதியிடப்பட்ட கடிதம் கிடைக்கப்பெற்றதென தங்களுக்கு அறிவிக்குமாறு மேன்மை தங்கிய ஜனாதிபதியவர்களினால் பணிக்கப்பட்டுள்ளேன்.

உங்கள் நம்பிக்கையுள்ள
(ஒப்பம்) ஜனாதிபதியின்
செயலாளர்.

# அனுபந்தம் ஆ

## இனங்களுக்கிடையில் நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கம்

பின்வரும் அமைப்புக்களும், (Organisations) தனியார்களும் இன்று 20 - 7 - 1979 சந்தித்து—

(1) யாழ்ப்பாண மாவட்டத்திற்கு விதிக்கப்பட்டுள்ள அவசர கால சட்டத்தை உடனடியாக நீக்குமாறு வற்புறுத்தியும்;

(2) பொலிசாராலும், ஆயுதப்படையினராலும் வடபகுதி மக்கள் அடக்கப்படுவதைக் கண்டனம் செய்தும்;

(3) இலங்கையின் எல்லா மக்களினதும் ஜனநாயக உரிமைகளைப் பாதிப்பதான பயங்கரவாதிகள் தடுப்புச் சட்டத்தைக் கண்டித்தும், அதை ரத்துச் செய்யும்படி வற்புறுத்தியும், தீர்மானங்கள் நிறைவேற்றினர்.

அகமகா பண்டித றண்டோம்பே ஞானரட்ண தேரோ — எக்சாத் பிட்சு பெரமுன, [அனுராதபுரம்

பகமுனே பன்காசிக்க தேரோ — எக்சாத் பிட்சு பெரமுன

அபயசேகரா அன்னத்தை [குருநாகல்

அபயசேகர ஜெவ்றி — கிறிஸ்தவ தொழிலாளர் கூட்டுறவு (பெருந்தோட்ட சேவைக்குழு)

அலெஸ் எம்

| | |
|---|---|
| அல்போன்சஸ் ஏ. ரீ. | —கற்றன் சமுகசேவை நிலையம் |
| அரசரட்ணம் கே. டி. | — சர்வதேச சிவில் சேவை |
| பாலகிருஷ்ணன் எஸ் | — பெருந்தோட்டப் பகுதிகள் பணிமனை |
| பொப்பகே லயனல் | — ஜனதா விமுத்தி பெரமுன |
| கந்தப்பா சேர்வி | — |
| டேவிற் குமார் | — ஜனதா தருனயோ |
| தேவானந்த யோகன் | — அகில இலங்கை சமாதான காங்கிரஸ் |
| பெர்னண்டோ ஒஸ்வின் | — ஐக்கிய தொழிலாளர் சம்மேளனம் |
| கஜசிங்கி லஷ்மன் | — கிறிஸ்தவ தொழிலாளர் கூட்டுறவு |
| குணசேகர ஆரியவம்ச | — அகில இலங்கை சமாதான காங்கிரஸ் |
| கெவ்வபத்தகே பிறேமபால | — ஜனதா சங்கமய |
| ஜயரட்ண ஒஸ்மன்ட் | — லங்கா சமசமாஜ கட்சி |
| ஜயவர்த்தன குமாரி | — பெண்ணின் குரல் |
| கருணாரத்ன விக்கிரமபாகு | — லங்கா சமசமாஜக் கட்சி [புதிய தலைமை] |
| கேர்ன் றியென்சி | —கிறிஸ்தவ மாணவர் இயக்கம் |
| மாலியகொட ஜயரட்ண | — இலங்கைப் பொதுசேவைகள் சங்கம் |
| மல்லவ ஆராச்சி டி. எஸ். | —மாக்ஸிச இளைஞர் முன்னணி |
| நாகரத்தினம் எஸ். ரீ. என். | — தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம் |
| தாணயக்கார வாசுதேவ | — ஐக்கிய தொழிலாளர் சம்மேளனம் |
| பெரேரா வி. எல். | —மலைநாட்டு இளைஞர் பேரவை |
| ரங்கநாதன் எம். | — செந்தமிழர் இயக்கம் |
| சண்முகதாசன் என். | — இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி |
| சதாசிவன் கே. | — அரசாங்க எழுதுவினைஞர் சங்கம் |

| | |
|---|---|
| சீவதாச ஐ. டி. | — எக்சத் கம்கரு சமித்திய |
| சேனரட்ண ஜி. சுனில் | |
| டீ சில்வா அலென்சன் | — கிறிஸ்தவ தொழிலாளர் (கொழும்புமறைமாவட்டம்) |
| சுதந்திரராஜா பீ. | — பெருந்தோட்ட மக்கள் [இயக்கம் |
| தம்புபாலா | — புரட்சிகர மாக்சிஸ்ட்கட்சி |
| தம்பு எம். | — ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் |
| வீரக்கோன் திசநாயக்க | — லங்கா குரு சங்கமய |
| விஜயசிங்க டீ. வேர்னன் | — இலங்கை வர்த்தக ஊழி யர் சங்கம் |
| விமலபால கே. | — நவலங்கா கம்யூனிஸ்ட் கட்சி. |

(கையொப்பம்) போல் கஸ்பர்ஸ் (பெருந்தோட்டப் பகுதி கள் இணைப்புப் பணிமனைத் தலைவர்), றெஜி சிறிவர்த்தன (மனித உரிமைகள் இயக்கம்), காமினி திசநாயக்க (பத்தி ரிகை எழுத்தாளர்), எம். ஐதுறுஸ் (ஜனதா வியாபாரய), ராஜன் பிலிப்புப்பிள்ளை, பற்றிக் பெர்ணண்டோ (ஜனதா சங் கமய), எல். சாந்திக்குமார் (பெருந்தோட்ட மக்கள் இயக் கம்)

மாகாணக்குழுவின் அங்கத்தவர்கள்

30, புஷ்பதான மாவத்தை,
கண்டி (தொலைபேசி: 2955) 20 – 7 - 1979

---

முக்கிய குறிப்பு:

நான் ஆசிரியராகவுள்ள 'சத்தியோதய' என்னுஞ் செய்தித்தாளில் வெளியிடும் நோக்கத்துடன், இதைத் தணிக்கை அதிகாரியின் கவனத்திற்கு அனுப்பியுள் ளேன்.

கண்டி, 23 - 7 - 79 (ஒப்பம்) போல் கஸ்பர்ஸ்

# அனுபந்தம் இ 1

தொலைபேசி : 2955

இனங்களுக்கிடையில் நீதிக்கும்
சமத்துவத்துக்குமான இயக்கம்
30, புஷ்பதான மாவத்தை,
30 - 7 – 1979

மாண்புமிகு
ஸ்ரீலங்கா ஜனதிபதி
அன்பார்ந்த ஜனதிபதிக்கு,

இனங்களுக்கிடையில் நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கம் 93 அமைப்புக்களையும், (Organizations) தனியார்களையும் கொண்டு, இவ்வாண்டு யூலைமாதம் கொழும்பில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. அக்கூட்டத்திலேயே, தங்கள் அரசாங்கத்தால் பிரகடனப் படுத்தப்பட்டுள்ள அவசரகால ஆட்சியின் கீழுள்ள வடபகுதியின் நிலைமைகளை அலசி ஆராய்வதற்கென எமது இயக்கத்திலிருந்து ஒரு பிரதிநிதித்துவக் குழுவை அனுப்பவேண்டியது அவசியமெனத் தீர்மானிக்கப்பட்டது. இதன் கீழ் கையொப்பமிட்டிருக்கும் நாங்களே உண்மைத்தகவல்களை ஆய்ந்து அறியும் குழுவினராக அங்கு சென்றவர்கள் என்பதால் யாழ்ப்பாணமாவட்டத்தில் கீழே, குறிக்கப்பட்டுள்ள சம்பவங்கள் நடைபெற்ற இடங்களுக்கு நாம் நேரடியாகச் சென்று விசாரித்து அறிந்த உண்மைகளின் அடிப்படையில் நாம் தங்களுக்கு இக்கடிதத்தை வரைகின்றோம்.

ஜூலை 13/14 - ந் திகதி இரவு ஒன்றோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட குழுக்களைக் கொண்ட பொலிஸ் உத்தியோகத்தர் களும், அவர்களைச் சேர்ந்த ஆட்களும் நன்கு திட்டமிட்ட முறையில் சட்டவிரோத நடவடிக்கைகளை மேற்கொண்டிருந் னர்; என்ற எமது முடிந்த முடிவைத் தங்கள் கவனத்திற்கு கொண்டு வர நாம் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளோம். பொலிசா ரால் பலபேர் கடத்தப்பட்டும், சித்திரவதைக்குள்ளாக்கப்பட் டும், சிலர் கொலை செய்யப்பட்டுமிருக்கின்றார்கள் என்பதை நாம் தற்பொழுது ஐயத்திற்கிடமின்றி நம்புகின்றோம். இவர் களுட் சிலர் படுகாயங்களுடன் சிறையிலும் வைத்தியசாலையி லும் இருக்கின்றார்கள். ஏனைய சிலருக்கு என்ன நேர்ந்ததென் பது இன்னமும் அறியப்படாதிருக்கின்றது.

நீதியின் மேல் எமது இயக்கத்துக்குள்ள அக்கறையினால், சாட்சியங்களைச் சீர்தூக்கி ஆராய்ந்து குற்றவாளிகளாகக் காணப்படும் உத்தியோகத்தர்களுக்கும், அவர்களைச் சேர்ந்த ஆட்களுக்கும் எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு அதிகாரம் பெற்ற, பாரபட்சமற்ற விசாரணைக் குழுவொன்றை உடனடி யாக நியமிக்குமாறு, உண்மைத் தகவல்களை ஆய்ந்து அறியும் குழுவினராகிய நாம் தங்களைக் கேட்க நிர்ப்பந்திக்கப்படுகின் றோம். எமது விசாரணை முடிவுகளைச் சமர்ப்பிப்பதன் மூலம் அத்தகைய குழுவிற்கு ஒத்தாசை புரிய நாம் ஆயத்தமாகவுள் ளோம்.

பொலிசாரின் சட்ட விரோத நடவடிக்கைகளைத் தடுக்கும் முகமாக இன அடிப்படையிலும், மக்களுக்கு விடையிறுக்க வேண்டிய நிலையிலும் வடக்கிலுள்ள பொலிஸ் மீளமைத்தலைத் தாமதிக்காது விரிவுபடுத்துமாறு தங்களை நாம் கேட்டுக் கொள் கின்றோம்.

இறுதியாக எமக்கு இருக்கக்கூடுமான அத்துணை ஆர்வத்துட னும் பொலிசாருக்கு எதிராகச் சாட்சிகளாகக் கணிக்கப்ப டக்கூடிய சகலரது உயிரையும் உடமைகளையும் பாதுகாப் பதற்கு உடனடியாகப் பயனளிக்கக் கூடிய நடவடிக்கைகளை

உடனே மேற்கொள்ளுமாறும் நாம் கேட்டுக் கொள்கின்றோம்;
தங்கள் நம்பிக்கையுள்ள,

(ஒப்பம்) வண. போல் கஸ்பர்ஸ், டாக்டர் குமார் டேவிற், காமினி திசநாயக்கா, ராஜன் பிலிப்புப்பிள்ளை, ஜெய ரத்தின மாலியகொட, எஸ். பாலகிருஷ்ணன், சேவக யோகன் தேவானந்த

பிரதி 1. பிரதம அமைச்சர்
2. எதிர்க்கட்சித் தலைவர்

---

ஜனாதிபதியின் அந்தரங்கச்
செயலாளர்,
குடியரசு சதுக்கம்
கொழும்பு—1
8 - 8 - 1979

அன்பார்ந்த ஐயா,

30 - 7 - 1979 திகதியிடப்பட்ட கடிதம் கிடைக்கப்பெற்றதுடன், அதில் குறிப்பிடப்பட்டுள்ளவை கவனத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் எனபதையும் தங்களுக்கு அறிவிக்குமாறு மாட்சிமை தங்கிய ஜனாதிபதியினால் பணிக்கப்பட்டுள்ளேன்.

உங்கள் நம்பிக்கையுள்ள

(ஒப்பம்) அந்தரங்கச் செயலாளர்

திரு. போல் கஸ்பர்ஸ், சே. ச.
30, புஸ்பதான மாவத்தை,
கண்டி.

## அனுபந்தம் இ 2

# இனங்களுக்கிடையில் நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கம்

*யாழ்ப்பாண விஜயத்தை மேற்கொண்ட தூதுக்குழுவின ரால், 10 - 08 - 1979 - ல் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் வாசித்துச் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை.*

முன்னுரை

இவ்வியக்கத்தில் ஈடுபட்டுள்ள அமைப்புக்கள் தனிநபர்கள் ஆகியோர் ஒன்று சேர்ந்து 20-7-1979-ல் நடாத்திய கூட்டத் தில், இவ்வியக்கம் தொடர்ந்து இயங்க வேண்டுமென தீர்மா னித்ததுடன், 13/14 ஜுலை 1979 ல் அரசாங்கத்தால் அவசரகாலச் சட்டம் யாழ்ப்பாணத்தில் பிரகடனம் செய்யப்பட்டதன் பின் னர் அங்குள்ள உண்மை நிலையினை நேரில்கண்டறிவதற்கென ஒரு தூதுக்குழு யாழ்ப்பாணத்திற்கு அனுப்பப்படவேண்டுமென வும் தீர்மானிக்கப்பட்டது. அத்தீர்மானத்திற் கிணங்க போல் கஸ்பர்ஸ், யோகான் தேவானந்தா, ராஜன் பிலிப்புப்பிள்ளை, காமினி திசநாயக்கா, ஜயறத்ன மாலியகொட, எஸ். பால கிருஷ்ணன், குமார் டேவிட் ஆகியோரடங்கிய தூதுக்குழு 1979 ஜுலை 28 - லிருந்து 31 - வரை வடமாகாணத்திற்கு, முக்கிய மாக யாழ்ப்பாண நகரத்திற்கும், அதனைச்சுற்றியுள்ள பகுதிக ளுக்கும் விஜயத்தை மேற்கொண்டது தூதுக்குழு அங்கு நடை பெற்ற சம்பவங்களை நேரிற் கண்ட காட்சிகளையும் சம்பவங் களினால் பாதிப்புற்ற குடும்பங்களின் அங்கத்தவர்களையும், பல்வழிப்பட்ட சமூகத் தலைவர்களையும், அரசியற் தலைவர்களை

யும், பாராளுமன்ற உறுப்பினர்களையும், யாழ். பல்கலைக்கழக மாணவர்கள், விரிவுரையாளர்களையும் தொழிற்சங்கவாதிகளை யும் மற்றும் பல்வேறு யாழ்நகர்ப் பிரசைகளையும் சந்தித்தது.

**பொதுவான நிலைமையும் மக்களின் மனோபாவங்களும்**

அவசரகாலச் சட்டம் பிரகடனப்படுத்தப்பட்ட பின்னர், முதல் ஓரிரு தினங்களில் பொலிஸ் படையினரும், குறைந்த பட்சத்தில் இராணுவத்தினரும் பொறுப்பற்ற காடைத்தனச் செயல்களில் ஓரளவிற்கு ஈடுபட்டனர். சில இளைஞர்கள் முக ஷவரம் செய்யப்பட்டும், நீண்ட தலைமுடி வெட்டப்பட்டும், இது போன்ற வேறு வழிகளாலும் இழிவு படுத்தப்பட்டனர். சைக்கிளில் சென்ற இருவர் விஷமத்தனமாகச் சுடப்பட்டனர். அதில் ஒருவர் காயமுற்றார். ஏராளமானோர் .. கிட்டத்தட்ட நூற்றுக்கும் அதிகமானோர் அவர்களது இல்லங்களிலிருந்தோ அல்லது பஸ்தரிப்பு நிலையம் போன்ற பொது இடங்களிலிருந்தோ விசாரணைக்குட்படுத்தப் படுவதற்காக எடுத்துச் செல்லப்பட்டனர். இவர்களில் அரைவாசிக்கு மேற்பட்டோர், எமது குழு யாழ்ப்பாணத்தை விட்டகலும் வரையும் விடுதலை செய்யப்படவில்லை.

வீதிகளில் மக்கள் அச்சுறுத்தப்படுதல் ஓரிரு தினங்களிற்கு மேல் நீடிக்கவில்லை; அத்துடன் நாம் அங்கு விஜயம் செய்த சமயத்தில் பொதுச் சந்தைகள், சாலைகள் சந்திகள் போன்ற இடங்களிலும் அசாதாரணமான இராணுவ, பொலிஸ் நடமாட்டத்தைக் காணக் கூடியதாக இருக்கவில்லை.

பொது மக்கள் மத்தியில் பயமும், தெளிவின்மையுமே நிலவின; மேற்குறிப்பிட்ட சில சம்வங்களும், கீழே விபரிக்கப் படவிருக்கும் பல சம்பவங்களுமே பொதுமக்களிடத்தில் பயத்தினை ஆழமாகத் தோற்றுவித்தன. அவசரகாலச் சட்டமானது மக்களின் வெறுப்பைச் சம்பாதித்ததுடன் ஒரு நியாயமற்ற, ஜனநாயக உரிமைகளுக்கப்பாற்பட்ட எதேச்சாதிகாரமான செயலாகவே கருதப்பட்டது: அரசாங்கத்தால் கூறப்படும், பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கான தீர்மானமானது, தமிழ்

மக்களை இழிவு படுத்துவதற்காகவும், அவர்களை இராணுவ பொலிஸ் அட்டூழியங்களுக்கு இலக்காக்கவும், அவர்களது அடிப் படை ஜனநாயக உரிமைகளான பேச்சுச் சுதந்திரம், பத்தி ரிகைச் சுதந்திரம் போன்றவற்றை மறுப்பதற்காகவும் கையா ளப்படுகின்ற ஒரு தந்திரமேயென மக்கள் கருதுகின்றனர். எமது கணிப்பின்படி, அரசாங்கத்தினால் தமிழர் மீது பாவிக் கப்படும் அடக்குமுறைச் சம்பவங்கள் காரணமாக, யாழ்ப் பாண மக்களின் பயம் கலந்த தெளிவற்ற மனப்பான்மை படிப்படியாக கோபம் கலந்த வெறுப்பாக மாறி அவர்களை ஆத்திரப்பட வைத்துள்ளது. அரசினால் ஜனநாயக உரிமை களுக்கு ஏற்படுத்தப்பட்டுள்ள அபாயம் குறித்து அங்கு உண் மையான அக்கறை ஏற்பட்டுள்ளது. உதாரணமாக பத்திரிகைத் தணிக்கையானது. எழுச்சியூட்டும் பேச்சுக்களையும், மிகைப் பட்ட வதந்திகள் பரப்பப்படுதலையும் தடுப்பதற்கு மட்டும் பயன்படுத்தப்படவில்லை. அது அரசாங்கத்திற்கெதிரான விமர் சனங்களையும், ஆட்சியிலுள்ள கட்சிக்கு அரசியல் ரீதியில் பாதிப்பு ஏற்படுத்தவல்ல செய்திகளையும் இருட்டடிப்பு செய்வ தற்கே மிகக் கச்சிதமாகப் பயன்படுத்தப்படுகின்றது. தமிழர் விடுதலைக் கூட்டணித் தமிழ்ப்பத்திரிகை ஒன்று, அமைச்சர் தேவநாயகம் பாராளுமன்றத்தில் பயங்கரவாதத் தடைச் சட்டமூலம் என வர்ணிக்கப்படும் தலைப்பில் ஆற்றிய உரை யினை பிரசுரிப்பதிலிருந்து தடை செய்யப்பட்டமை மேற்கூறப் பட்டதற்கு ஒரு உதாரணமாகும். ஒரு தமிழ் ஐ. தே. க. அமைச்சரின் உரை தணிக்கை செய்யப்பட்டதற்கான உண் மையான ஒரே காரணம், அரசாங்கத்திற்கு சிங்கள மக்கள் மத்தியில் நல் அபிப்பிராயத்தை ஏற்படுத்தும் நோக்கத்துடன் நிகழ்த்தப்பட்ட அந்த உரையானது, தமிழ் மக்கள் மத்தியில் ஆளும் கட்சிக்கு அபகீர்த்தி ஏற்படுத்தி விடும் என்பதுதான். அத்தகைய தணிக்கையானது அரசியற் பிரச்சாரக்கலையின் தனித்துவமான ஒரு கண்டுபிடிப்பாகும்.

13, 14ஜூலை இரவில் நடந்த சம்பவங்கள்.

அந்த முக்கியமான இரவு நடந்த சம்பவங்களின் விளைவாக மூன்று இளைஞர்கள் இறந்தனர். மேலும் இரு இளைஞர்களின் சடலங்கள் பெறப்படவில்லை. எனினும் அவர்கள் இறந்துவிட்டனர் என நம்புவதற்கு காரணங்கள் உண்டு. அத்துடன் இன்னொரு இளைஞனைக் காணவில்லை என்பதுடன் அவர் இறந்திருப்பார் எனவும் ஊகிக்கப்படுகின்றது. இதே போன்ற சம்பவங்களின் கீழ் ஐந்துபேர் கடத்தப்பட்டிருப்பதுடன் ஒருவர் இறக்கும் நிலையின் போது பொலிசாரினால் தூக்கிச் செல்லப்பட்டமை ஒத்துக்கொள்ளப்பட்டது. ஆயினும் இதுவரை இவைகள் சரியாக விளக்கப்படவில்லை. மர்மமான சூழ்நிலையில் இறந்த அல்லது இறந்து விட்டதாகக் கருதப்படும் ஐந்து நபர்கள் மட்டில் கையாளப்பட்ட விதம் குறித்து இப்பொழுது விளக்கப்படுகின்றது. எல்லோருமே பொதுவாக ஒரே மாதிரியான முறையிலேயே கைது செய்யப்பட்டனர். அது பற்றி இங்கு பொதுவான முறையில் விளக்கப்படினும் மிக வெளிப்படையான காரணங்களுக்காக, விசேட விபரங்கள் இவ்வறிக்கையினின்றும் தவிர்க்கப்பட்டுள்ளன.

இந்நாடகம் அதிகாலை 1 மணிக்கும் 3 மணிக்கும் இடையே நடைபெற்றது. வெவ்வேறு சம்பவங்களில், நான்கிற்கும், பதினைந்துக்கும் இடைப்பட்ட எண்ணிக்கையில் மனிதர்கள், ரோச்லைட்டுக்கள், சுழல் துப்பாக்கிகள், துப்பாக்கிகள், இயந்திர துப்பாக்கிகள் போன்ற பல்வேறுபட்ட ஆயுதங்களுடன் ஒரு இளைஞனின் வீட்டை அடைந்தனர். அவர்கள் சில சமயங்களில் காக்கிக் காற்சட்டையும், வெள்ளை பெனியனும், சில சமயங்களில் சீருடையும் அணிந்திருந்தாலும் அடையாள எண்கள் எதுவும் காணப்படவில்லை. அவர்கள் ஒரு சில வார்த்தைகளே பேசினர் எனினும், அவை ஒரு சிங்களவர் தமிழ் பேசும் போது எப்படி இருக்குமோ, அப்படி இருந்ததாக, பல தனி மனிதர்கள் அபிப்பிராயம் கூறினர். அவர்கள் தங்களுக்குத் தேவையான நபரையும், சில சமயங்களில் வீட்டில் உள்ள இன்னொரு இளைஞனையும் அழைத்துக் கொண்டதன் பின் தங்களை பொலிசார் என அறிமுகப்படுத்திக் கொண்டதுடன்

வீட்டிலுள்ளவர்களை லைட்டைப் போடவேண்டாம் எனவும் கேட்டுக்கொண்டனர். இச் சம்பவங்களுக்குள்ளான அங்கத்தவர்களினதும் வீட்டிலுள்ளோருக்கு, இவ்விதம் வந்தவர்கள் பொலிசார்தான் என்பதில் சிறிதளவும் சந்தேகமில்லை. கைதானோரும், சட்ட விரோதமாகக் கடத்திச் சென்றோரும் பின்னர் ஜீப்களில் அகன்றார்கள்.

மறு நாட் காலை குடும்ப அங்கத்தவர்கள் பாராளுமன்ற சட்டத்தரணி அங்கத்தவர்களதும், மற்றவர்களினதும் உதவியுடன் தேடத் தொடங்கினர். பொலிசார், கைது செய்யப்பட்டதையோ, அன்றிக்காவல் வைக்கப்பட்டதையோ பற்றி தகவல்கள் எதுவும் தெரியாது எனத் திடமாக மறுத்தனர். அவர்களுடைய சீரான ஒரே கதை "எங்களுக்கு அதைப் பற்றி எதுவும் தெரியாது. எங்களுக்கு அதில் செய்வதற்கு எதுவும் கிடையாது." இரு சடலங்கள் கொடுமையான சித்திரவதையுடனும், அங்கவீனமாகவும் வீதி ஓரத்தில் கண்டுபிடிக்கப்பட்டன. ஒருவர் காவற்பகுதியினரின் சிறையில் மரணமானார். இது போன்ற பல சம்பவங்கள் பரவலாக நடந்துள்ளன. இதுவும் எங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்பட்ட முக்கியமான சம்பவத்தையும் நம்பத்தகுந்த ஆதாரங்களையும் சொல்லப்பட்ட விபரங்களையும் எங்கள் ஏழு பேராலும் விளக்கமாக முறையிடப்பட முடியாததான அச்சம்பவத்தினை நாம் ஜனாதிபதிக்கு எழுதிய கடிதத்தில் பின் வருமாறு சேர்த்துள்ளோம். நாங்கள் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர நிர்ப்பந்திக்கப் பட்டுள்ளோம். அதாவது ஒன்றோ அல்லது அதற்கு மேற்பட்ட கூட்டமாகவோ பொலிஸ் உத்தியோகத்தர்களும் அவர்களது ஆட்களும் திட்டமிட்ட முறையில் ஜூலை 13/14 இரவு சட்ட விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். பலர் கடத்தப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டும், இன்னும் சிலர் பொலிசாரினால் கொலை செய்யப்பட்டுமுள்ளனர் என அறிகின்றோம். இவர்களில் சிலர் சிறையிலோ அல்லது வைத்தியசாலையிலோ பலத்த காயங்களுடன் இருப்பதுடன், இன்னும் சிலருக்கு என்ன நடந்ததோ என்பது இதுவரை அறியப்படவில்லை.

சடலங்களின் உருச்சிதைக்கப்பட்ட நிலைமைகள் மாத்திர மன்றி, சிறையிலோ அல்லது வைத்தியசாலையிலோ இருக்கும் ஐம்பதிற்கும், மேற்பட்டோருக்கு ஏற்படுத்தப்பட்டுள்ள காயங் களும் சிறிலங்காவின் பொலிசாரே சித்திரவதைகளுக்கும். பெரு மளவில் மனித உரிமைகள் மீறல்களுக்கும் காரணமானவர் கள் என்று சொல்ல எம்மை நிர்ப்பந்திக்கின்றது.

கடத்தல்கள், கொலைகள் யற்றிய தகவல் எதுவும் தெரி யாது என்ற பொலிசாரின் வாதம் பின்வருவனவற்றைக் காட்டுகின்றது. சுழல் துப்பாக்கிகள் இயந்திரத் துப்பாக்கிகள் கொண்ட பல கொலைகாரக் கூட்டங்கள் ஜீப்களில் பிரயா ணம் செய்து, தெரியாத காரணங்களுக்காக இளைஞர்களைக் கடத்திக் கொலை செய்துள்ளன. அநேகமாக ஒரே இரவில் ஆறுபேர் இவ்வாறு கடத்திக் கொல்லப்பட்டதாக அறிய வருகின்றது. இன்னும் பொலிசாரும் அவசரகால சட்டங்க ளின் கீழ் ஆயுதங்களைப் பயன்படுத்தும் முழுச் சக்திவாய்ந்த தரைப்படையும் இக்கூட்டங்களைக் கண்டு பிடிக்கத்தவறியுள் ளதுடன், நாம் அறிந்தவரை, இதுவரை தெரியாத பரிமா ணங்களையுடைய இப்புதிய கொலைகாரக் கூட்டம் பற்றிய முழுவிபரங்களை அரசாங்கத்திற்கோ, பொது மக்களுக்கோ அளித்து எச்சரிக்கை செய்யவும் தவறியுள்ளனர். எங்கள் கவ னத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ள குறிப்பிடத்தக்க சான்று களுக்குப்புறம்பாகக் கூட பொலிசாரின் இந்தக் கதை தன் னிலேயே வலுவற்றதாகும்.

அவசர காலப் பிரகடனம், சடலங்களை அழிக்கும் அதி காரம் சட்ட விசாரணைக்குட்படுத்தப் படுவோர் தடுத்து வைக்கப்படுதல் என்பன பொலிசாரினால் வெற்றுக் காசோலை போலக் கருதப்பட்டு வருகிறது. மேலும் வர்த்தக அமைச் சரினால், ஜெனரல் அலெக்சாண்டருக்கு சேர்ச்சில் இட்ட கட் டளைக்கு ஒப்பிடப்பட்டதான, ஜனாதிபதியினால் மாவட்ட நிறைவேற்று அதிகாரிக்கு இடப்பட்ட அதிக முக்கியம் வாய்ந்த கட்டளையைப் பொலிசார், அரசு தமிழ் மக்கள் மேல் தொடுத்த போராகவே உண்மையில் கருதினர்.

நாம் இக்கட்டத்தின் கவனத்தை மிக முக்கிய ம உண்மையொன்றின் பால் விசேடமாக ஈர்க்கின்றோம். அதாவது பகலில் சட்டத்திற்கமைந்த படையாகவும் இரவில் அநாமதேயக் கொலைகாரர்களாகவும் பொலிசார் இரட்டை வாழ்க்கை நடாத்துகின்றனர். சிறிலங்காவின் இயக்க அரசியலிற்குள்ள பயங்கர ஆபத்தை முன்னறிவிக்கும் இது பொது மக்களின் கருத்துக்களாலும், எதிர்ப்புக்களின் தாக்கத்தாலும் முளையிலேயே கிள்ளியெறியப்படல் வேண்டும் என நாம் இக் கூட்டத்தை எச்சரிக்கின்றோம். சுதந்திரத்தின் விலை சதா காலமும் விழிப்பாயிருத்தல் என முன்பு கூறப்பட்டது. இதே போன்ற அநாமதேயமாக கொலை செய்யும் முறைகள் ஆர்ஜென்ரீனாவில் இடது சாரிகட்கும், தொழிலாளி வர்க்க அரசியலதிகாரிகட்கும் எதிராக உபயோகிக்கப்பட்டது அத்துடன் அண்மையில் ஜனநாயகத்தைக் குழி தோண்டிப் புதைத்த எனைய நாடுகளிலும் உபயோகிக்கப்பட்டது. இவற்றை நாம் தனிப்பட்ட முறையில் உறுதிப்படுத்த முடியாவிடினும் கூறக் கேட்டுள்ளோம்.

**மக்களின் பதிலும், பங்களிப்புகளும்;**

நாம் சென்ற இடங்களிலெல்லாம் வரவேற்கப்பட்டோம் இவ்வரவேற்பிற்கு முக்கிய காரணம் சிலர் தலைமையை ஏற்று நிலைமையை எதிர்நோக்க தைரியத்தை அளித்துள்ளனர் என்னும் மகிழ்ச்சியேயாகும். எமது விசாரணைகளுக்குக் கிடைத்த பொதுவான பதில் ஆம், நாம் அனைவரும் ஒன்றுபட்டு எம்மையும், எமது ஜனநாயக உரிமைகளையும் பாதுகாக்கவும் கொலை சித்திரவதைகளுக்கு ஆளாகும் அப்பாவிகட்கு, நீதியைப் பெற்றுக்கொடுக்கவும் ஒரு இயக்கத்தை அமைப்போம் என்பதேயாகும். எம்மை வரவேற்பதில் காட்டப்பட்ட ஆர்வத்திஜெரு பகுதி யாழ்ப்பாணத்தில் வளர்ந்துள்ள தலைமைப் பதவியின் வெற்றிடமாகும். இக் கஷ்டமான நேரத்தில் மக்கள் பாதுகாப்போ, தலைமையோ அல்லது வழிகாட்டலோ எதுவுமின்றித் தனித்து விடப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்ட இளைஞர்களின் நிலைமையை அறியவும், சித்திரவதை, கொலை

போன்றவற்றில் குறுக்கிடவும் தனிப்பட்ட துணிவுடன் செயற்பட்ட ஒருவர், யாழ்ப்பாண பா. உ. திரு. யோகேஸ்வரன் ஆவார். துரதிஷ்ட வசமாக அவர் தனித்து விடப்பட்டுள்ளார். மற்றைய அரசியல் தலைவர்கள், பொதுமக்கள், மதப்பிரமுகர்கள் ஆகியோரில் இது மிகக் குறைந்த தாக்கத்தையே ஏற்படுத்தியது.

எனவே, நாம் ஜூலை 30-ல் நடாத்திய கூட்டம் அத்துணை வெற்றிகரமாக இருந்ததில் ஆச்சரியமெதுவும் இல்லை. பல்வேறு கட்சிகள், தொழிற் சங்கங்கள், மத நிறுவனங்கள், மாணவர் சங்கங்கள் போன்றவற்றைச் சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்டவர்களும், மற்றையோரும், அவசரகாலச் சட்டத்திலும் எங்கும் பரவியிருந்த பீதியான சூழ்நிலையிலும் சமுகமளித்திருந்தனர். கூட்டத்தின் பொதுவான நோக்கம் அவசரகால சட்டத்தை எதிர்ப்பது பொலிசாரின் காட்டுமிராண்டித் தனத்திற்கும், கொலைகளுக்கும் எதிரான உணர்வுகள், ஜனநாயக மனித உரிமைகள் சம்பந்தமாக ஒன்றுகச் சேர்ந்து ஏதாவது செய்யவேண்டுமென்ற விருப்பு என்பனவாகும். இவ்வியக்கத்தின் தன்னுட்சியுள்ள கிளையொன்று தாபிக்கப்பட்டுள்ளதுடன் எமது இயக்கம் தனது உறுதிகளை நிறைவேற்றும் பொருட்டு தொடர்ந்து செயற்பட முடியுமென்ற நம்பிக்கையும் பெருமளவில் ஏற்பட்டுள்ளது. எமது பிரதிநிதிகள் குழு இந்த எதிர்பார்ப்புக்களையும், தொடர்ச்சியான செயற்பாடொன்றை உருவாக்க வேண்டியதன் அவசியத்தையும் இக்கூட்டத்தில் எடுத்துரைக்கின்றது. இந்த ஆரம்ப நடவடிக்கைகளை எடுக்க நாம் தவறுவோமாகில் பாரதூரமான, ஈடு செய்ய முடியாத நம்பிக்கையின்மை உருவாகும். இக்கூட்டத்தின் அறிக்கையினை அங்கத்தவர்கள் ஆலோசனைக்காக போல் கஸ்பர்ஸிடம் இருந்து பெற்றுக்கொள்ள முடியும். இந்நேரத்தில் நாம் மிக முக்கியமாக குறிப்பிடவேண்டிய ஒரு விடயம் என்னவெனில், எவ்விடத்திலேனும், எவராலும் பயங்கரவாதம் ஆதரிக்கப்படவோ அல்லது மன்னிக்கப்படவோ இல்லை என்பதே. நாம் சந்தித்த தமிழ்ப் பொது மக்களும், பல்வேறு அமைப்புக்களின் பிரதிநிதி

களும் பயங்கரவாதத்தில் நம்பிக்கையற்றோராயிருந்ததுடன், அதை அழிவுக்குரிய தம்மையே தோற்கடிக்கும் ஒன்றாகவன்றி வேறு விதமாக நோக்கவில்லை. எப்படியாயினும், அவர்கள் அதே சமயத்தில் பொலிசாரது பயங்கரவாதத்தையோ, அரசாங்கம் பொதுமக்களை பெருமளவில் அடக்குவதையோ மன்னிக்கப்போவதில்லை என்பதில் உறுதியாக உள்ளனர். மேலும் யாழ்ப்பாண மக்கள் அங்கு வசிக்கும் சிங்களவர்மேல் வெறுப்புணர்வு கொள்ளவில்லை. சிங்களவருக்கு தொல்லை கொடுப்பதாகக் கூறப்படும் சிங்களப் பேரினவாதிகளின் தீவிர பிரச்சாரம் பொய்யானதாகும்.

**அரசாங்கத்தின் செயலின்மை:**

இந்தச் சம்பவங்களின் குழப்பமான தன்மை என்னவெனில் இவ்வளவு பலாத்காரச் சம்பவங்கள் நடந்தும், அரசாங்கம் சிறிதளவேனும் செயற்படாததேயாகும். ஜுலை 13/14 இரவிலிருந்து இன்று கிட்டத்தட்ட ஒரு மாதமாகியும் கொலைகாரர்களை அறிவதற்கான நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. எதிர்க்கட்சித் தலைவர் ஜனாதிபதிக்கு கொலைகள் பற்றி எழுதி மூன்று கிழமைகளுக்கு மேலாகிறது என்பது யாவருமறிந்ததாகும். எம்முடைய ஜுலை 30 கடிதம் கிடைத்து என்று கூட இன்னும் ஜனாதிபதியால் அறிவிக்கப்படவில்லை. இதுவரை பாராளுமன்றத் தெரிவுக் குழுவினதும், அதிகாரமுள்ள உத்தியோகத்தர்களது விசாரணைகள் பற்றியும் வெறும் உறுதிமொழிகளே கிடைத்துள்ளன. சட்டத்தினதும், ஒழுங்கினதும் காவலர்கள் சம்பந்தப்பட்ட குற்றங்களில் அரசாங்கம் விரைவாகவும், தீர்மானத்துடனும் செயற்படுமென நாம் எதிர்பார்த்திருப்போம். ஆனால் எதிரிடையாக அரசாங்கம் வேண்டுமென்றே பின்னின்று கொண்டு பொலிசாரின் நடவடிக்கைகளை மன்னித்துவிட்டு மூடி மறைக்கும் முறையில் செல்லத் தயாராகவுள்ளது எனமட்டுமே கருதக்கூடிய விதத்தில் செயலாற்றுகின்றது.

இவ்வறிக்கையை நாம் மிக அவசரமாக இச்சபையின் முன்வைக்கும் சிபார்சுடன் முடிக்கின்றோம். அதாவது இருமடங்கு

வீரியத்துடன் முழுமையான பாரபட்சமற்ற விசாரணையைக் கோரும் நடவடிக்கையை மேற்கொள்வதுடன் அத்தகைய ஒரு விசாரணையின் அவசியத்தை பொதுமக்கள் அபிப்பிராயத்தின் மூலம் ஊக்குவிப்பது என்பனவாகும்.

இவ்வறிக்கையின் பொரிசின் சுருக்கம்:

1. பொலிசார் இரவில் அநாமதேய கொலைகாரர்களாகச் செயற்படுவதால் ஏற்படும் பெரும் ஆபத்தைப் பற்றி பொதுமக்கள் எச்சரிக்கப்படல்.

2. வடக்கில் சில கிழமைகளாக மனித உரிமைகள் மீறல் ஜனநாயக உரிமைகள் மறுக்கப்படல் என்பவற்றிற் கெதிராக பொதுசன அபிப்பிராயத்தைத் திரட்டுவதுடன் இவ்வழிகளில் பிரசார நடவடிக்கைகளை மேற் கொள்ளல்.

3. ஒரு பாரபட்சமற்ற விசாரணைக்குழு ஒன்றை நியமிப்பதை உறுதிப்படுத்துமுகமாக இது தொடர்பாக நடவடிக்கையெடுக்க அரசாங்கம் காட்டும் இயக்கத்தைக் கருத்திற்கொண்டு, அத்தகைய குழு அமைக்கப்படுவதற்கான தீவிரப் பிரசாரம்.

4 யாழ். மாவட்டக்கிளையைப் பொறுத்தவரை தொடர்ச்சியான வேலைத்திட்டத்தை ஏற்படுத்தலும், அதன் கடமைகளை மேலும் தெளிவாக்கலும்; யாழ். மாவட்டக் கிளையோடு நெருங்கிய பிணைப்பைப் பேண ஒழுங்குகள் மேற்கொள்ளப்படுதல்.

ஏ. குமார் டேவிற்
(இ. நீ ச. இயக்கத்தின் தூதுக்குழு சார்பில்)

## அனுபந்தம் - ஈ

இனங்களுக்கிடையில் நீதிக்கும்
சமத்துவத்திற்குமான இயக்கம்
6, அலோய் அவனியூ,
கொழும்பு —3
(தொலைபேசி: 34742)

1979 – ம் ஆண்டு ஆவணி 10– ந் திகதியும், 22 ந் திகதியும் பல இயக்கங்களும், தனிநபர்களும் கொழும்பில் சந்தித்து இனங்களுக்கிடையில் நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கத்தை உருவாக்கினர். இந்த நாட்டின் ஜனநாயக உரிமைகளையும், சலுகைகளையும் பாதுகாக்கும் வரையறைக்குள் சோஷலிச சமத்துவத்துக்கும், இனநீதிக்கும் தங்களை அர்ப்பணிக்கும் ஆவலைத் திரும்பவும் திரும்பவும் வெளியிட்ட, நாளுக்கு நாள் பெருகி வந்த எண்ணிக்கையைக் கொண்ட இயக்கத்தினால் நடாத்தப்பட்ட பல கூட்டங்களில் இறுதிக்கூட்டமாக இது அமைந்தது.

இவ்வியக்கத்திலுள்ள ஒவ்வொரு அமைப்புகளும், அவை அரசியல் கட்சிகளாயிருந்தாலென்ன, தொழிற் சங்கங்களாயிருந்தாலென்ன, அல்லது மத, சமூக, சுயேட்சை நிறுவனங்களாயிருந்தாலென்ன தேசிய இனப்பிரச்சினையைப் பொறுத்த மட்டில் தமக்கே உரித்தான கொள்கைகளையும், திட்டங்களையும் கொண்டிருக்க அவற்றுக்குப் பூரண சுதந்திரம் உண்டென்றாலும் கூட சில அடிப்படைக் கொள்கைகளிலாவது அவற்றுக்கு ஒற்றுமை இருப்பது அத்தியாவசியம் என எம் இயக்கம் கருதுகின்றது. இந்த அடிப்படைக் கொள்கைகளை ஒத்துக்கொள்வதே இந்த அமைப்புக்கள் எமது இயக்கத்தில் வந்து சேருவதற்கு அல்லது அங்கத்துவம் வகிப்பதற்குரிய முக்கிய நிபந்தனைகளாகும்;

ஆவணி 22-ந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் கீழ்வரும் அமைப்புக்களும், தனிநபர்களும் பின்வரும் அடிப்படைக் கொள்கைகளுக்குச் சம்மதம் தெரிவித்தனர்.

1. இந்த நாட்டிலுள்ள பல்வேறு இன, மொழி குழுக்களிடையே எல்லா உரிமைகளைப் பொறுத்தவரையிலும் சமத்துவம் நிலைநாட்டப்படவேண்டும் ஆகவே வெளிப்படையாகவோ மறைமுகமாகவோ காட்டப்படும் இனத்துவேஷம் இன அநீதி பாரபட்சம் என்பவற்றுக்கு இயலுமான எல்லா வகையிலும் எதிர்ப்புக் காட்டப்படல் வேண்டும்.

2. மொழி, குடியேற்றம், கல்வி தொழில்வாய்ப்பு காவல் படையினரின் அடக்குமுறைச் செயற்பாடுகள் என்பன போன்ற துறைகளில் தமிழ் மக்களுக்குள்ள குறைபாடுகளைத் தாமதமின்றி நிவர்த்தி செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும்.

3. பெருந்தோட்டங்களிலும், ஏனைய இடங்களிலும் வதிகின்ற இந்திய வம்சாவழியினரான தமிழ்மக்கள் விரும்புமிடத்து அவர்களுக்குப் பிரஜா உரிமை வழங்கப்படவேண்டும். தொழில் வாய்ப்பு, கல்வி, வீட்டு வசதி, சுகாதாரம் முதலிய துறைகளில் தோட்டத் தொழிலாளர்களுக்குள்ள குறைகளை நிவர்த்தி செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும்.

4. பொலிசாரும், இராணுவத்தினரும் மக்களை அடக்கும் கருவிகளாகப் பாவிக்கப்படுவதை நாம் எதிர்க்கின்றோம்.

மேற்கூறியவற்றின் பின்னணியில் ஆவணி 22-ந் திகதி கொழும்பில் கூடியிருக்கின்ற அமைப்புக்களும், தனியார்களும் ஆடி 20-ந் திகதி நிகழ்ந்த கூட்டத்தில் முன்வைத்த கோரிக்கைகளைத் திரும்பவும் வலியுறுத்துகின்றோம்.

1. யாழ்ப்பாண மாவட்டத்திற்கு விதிக்கப்பட்டுள்ள அவசரகாலச் சட்டத்தை உடனடியாக நீக்குமாறு வற்புறுத்துகிறது;

II. இலங்கையின் எல்லா மக்களினதும் ஜனநாயக உரிமைகளைப் பாதிப்பதான பயங்கரவாதிகள் தடுப்புச் சட்டத்தைக் கண்டித்தும் அதை ரத்துச் செய்யும் படியும் வற்புறுத்துகின்றது

| | |
|---|---|
| கே. ஆனந்த தேரோ | — |
| அபயசேகர அன்னுத்தை | — பெருந்தோட்ட சேவைக்குழு [கிறிஸ்தவ தொழிலாளர் கூட்டுறவு] |
| அபயசேகர ஜெவ்றி | — கிறீஸ்தவதொழிலாளர் கூட். |
| அபரசேகர அனிலா | — மனித உரிமைகள் இயக்கம் |
| அபயசிங்க லலித் | — சத்தியோதய |
| ஐயாத்துரை ரி. | — தேசிய தொழிலாளி சங்கம் |
| அலெஸ் எம். | — |
| அண்ணுமலை ஏ. கே. | — எல். எஸ். எஸ். பி. (புதிய தலைமை) |
| அரசரட்ணம் கே. டி | — சர்வதேச சிவில்சேவை (ஸ்ரீலங்கா) |
| பாலக்கிருஷ்ணன் எஸ். | — பெருந்தோட்டப் பகுதிகள் இணைப்புப் பணிமனை. |
| பொப்பெக் லயனல் | — ஜனத்தா விமுக்திப்பெரமுன |
| கந்தப்பா மொனிக்கா | |
| கந்தப்பா சேர்லி | — தேசியகிறிஸ்தவசபை - அபிவிருத்தி ஆணைக்குழு |
| கஸ்பர்ஸ் போல் | — பெருந்தோட்டப் பகுதிகள் இணைப்புப் பணிமனை |
| கூறே உப்பாலி | — புரட்சிகர மாக்ஸ்சிசக் கட்சி |
| டேவிற் குமார் | — ஜனத்தா தருணயோ |
| தயரட்ண. எஸ் | — ஸ்ரீலங்கா எக்சாத்குருசங்கமய |
| தேவராஜ். பி. | |
| திசநாயக்க காமினி | — பத்திரிகையாளன் |
| பெர்னுண்டோ பற்றிக் | — ஜனத்தா சங்கமய |
| பெர்னுண்டோ விமல் | — ஜனத்தா வியபாரய |
| ஞானமுத்து ஜோர்ஜ் | — ஜனத்தா வியபாரய |
| கெற்றி ஆராய்ச்சி நிகால் | — எக்சத் விதுலி சந்தேச எஞ்சினியரு சேவக்க சங்கமேய |

| | |
|---|---|
| கெற்றி ஆராச்சி . டபிள்யூ. | |
| ஐதுருஸ். எம். | —ஜனத்தா வியபாரய |
| ஜயசிங்க ஹரி | — தேசிய கிறிஸ்தவ சபை-அபிவிருத்தி ஆணைக்குழு |
| ஜயதிலக டயான் | |
| கருணரட்ன விக்கிரமபாகு | — எஸ். எஸ். எஸ். பி. (புதிய தலைமை) |
| கோதா கொட | ஜி. சி. எஸ். யூ |
| லூர்துசாமி. ஏ. | — போவந்தலாவை சமூக நடவடிக்கைக் குழு |
| மகாநாம குணசேன | — ஜி. சி. எஸ். யூ |
| மலிய கொட. ஜே. | — லங்கா பொது சேவை சங்கம் |
| நாணயக்கார வாசுதேவ | — ஐக்கிய தொழிலாளர் சம்மேளனம் |
| பாக்கிய நாதன். எம். | — மலையக மக்கள் இயக்கம் |
| பெரேரோ. வி . எல் | — மலைநாட்டு இளைஞர் பேரவை |
| பெரேரோ. எல். பி. | — ஸ்ரீலங்கா எக்சத் குரு சங்கமேய |
| பெருமாள். பி. | — என். யூ. டபிள்யூ. |
| பிலிப்புப்பிள்ளை ராஜன். | |
| பிறேமசிறி சரத் | —இலங்கை மாணவர் சம்மேளனம் |
| ராமையா. ஓ. ஏ. | —சி. பி. டபிள்யூ. ஆர். எவ். யூ |
| ரணசிங்க. வி. | — கொம்யூனிஸ் தொழிலாளர் இயக்கம் |
| ரட்ணயக்கா. டி. ஏ. | — இலங்கை இளைஞர் சம்மேளனம் |
| ரங்கநாதன். எம். | |
| றெட்றிக்கோ. டபிள்யூ ஜி. | — ஸ்ரீலங்கா எக்சத் குருசங்கமேய |
| சாந்தகுமார். ஜி. | — மாணவர் ஒன்றியம்-மொறட்டுவ பல்கலைக்கழகம். |
| சாந்திக்குமார். எல் | — மலையக மக்கள் இயக்கம் |
| சத்தியபாலா. எஸ். | — ஜி. யூ. எவ் எல். |
| செனிவரத்ன கீர்த்தி | —சி. இ. எஸ். யூ-சி பி. எஸ். யூ. |

| | |
|---|---|
| சண்முகதாசன். என். | — இலங்கை கொம்யூனிஸ் கட்சி |
| சில்வா. ஜே. டி. | —ஸ்ரீலங்கா எக்சத் குரு சங்கமேய |
| சிறிவர்த்தன ஏ. எம். எவ். | — எஸ். சி. எம். |
| சுந்தரலிங்கம். பி. | |
| தம்பு பாலா | — புரட்சிகர மாக்ஸ்சியக்கட்சி |
| தம்பு எம் | — ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் |
| தங்கசாமி. எஸ். | —விவசாய தொழிலாளர் காங்கிரஸ் |
| தங்கராசா. எஸ். | — இலங்கை தொழிற் சங்க சம்மேளனம் |
| திருஞானதீபன் ஆர். | — கற்றன் சமூக சேவை நிலையம் |
| திருநாவுக்கரசு வி. | — ஜி. சி. எஸ். யூ. |
| திருநாவுக்கரசு. ஆர். | |
| உயாங்கோட. ஜே. | |
| வல்கம கே. எஸ். | — மாணவர் ஒன்றியம்.-மொறட்டுவ பல்கலைக்கழகம் |
| விக்கிரமசூரிய மே. | — இலங்கை வர்த்தக ஊழியர் சங்கம் |
| விஜயசிங்க வேர்ணன் | — இலங்கை வர்த்தக ஊழியர் சங்கம் |
| விமலதாசன். ஏ. | — இனங்களுக்கிடையில் நீதிக்கும் சமத்வத்துக்குமான இயக்கம் வடபிராந்தியம் |
| யோகேஸ்வரன். எஸ். | — தமிழ் தொழிற் சங்க சம்மேளனம் |

போல் கஸ்பர்ஸ்
தலைவர்.
இனங்களுக்கிடையில் நீதிக்கும்
சமத்துவத்துக்குமான இயக்கம்
25 - 8 - 79

## அனுபந்தம் — உ

# யாழ்ப்பாணத்தில் மனித உரிமைகள் தினம்

அவசரகால ஆட்சியின் கீழிருந்த யாழ்ப்பாணத்திலே இவ் வருட மனித உரிமைகள் தினம் மிகுந்த உற்சாகமான முறையில் அனுஷ்டிக்கப்பட்டது முக்கியமானதும், பொருத்தமானதுமாகும். பல வருடங்களின் பின் வடக்கு தெற்கு ஒருமைப்பாடு ஏற்படுவதற்கு அன்றைய தினம் முக்கிய காரணமாக அமைந்தது. சமீபகாலத்தில் உருவாக்கப்பட்ட இனங்களுக்கிடையில் நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கத்தின் யாழ்ப்பாணக்கிளையிலிருந்தே, அன்றைய தினத்தில் விரதத்திலும் வழிபாட்டிலும் ஈடுபட்டு அதனைத் தொடர்ந்து ஒரு பொதுக் கூட்டம் நடாத்த வேண்டும் என்ற அழைப்பு விடுக்கப்பட்டது. அதன் தலைவர் பிதா போல் கஸ்பர்ஸ் தலைமையில் இ. நீ. ச. இயக்கத்தையும், (MIRJE) தெற்கில் அதனுடன் இணைந்து செயற்படுகின்ற ஏனைய ஸ்தாபனங்களையும் சேர்ந்த பல சிங்களப் பிரதிநிதிகளை உள்ளடக்கிய குழுவொன்று அத் தினத்தை அனுஷ்டிக்க யாழ்ப்பாணத்திற்குச் சென்றது.

நல்லூர் வீரமாகாளி அம்மன் கோவிலில் திருமதி. அமிர்தலிங்கத்தின் தலைமையில் பெண்பக்தர்கள் (வயது முதிர்ந்த பெண்களிலிருந்து சிறு பெண்கள் வரை) தேவாரப் பாடல்களை விரதத்தின் போது பாடியதுடன், முடிவில் கடந்த சில மாதங்களாக ஏற்பட்ட சம்பவங்களைப் பற்றியும் தேவிக்கு முறையிட்டுப் பாடினார்கள். திருமதி. அமிர்தலிங்கம் தனது சிறப்பான சக்தி வாய்ந்த குரலில் நான்கு மணித்தியாலங்கள் (ஒரு

துளித் தண்ணீர் கூடக் குடியாமல்) பாடுவதைக் கேட்ட, தென்னகத்திலிருந்து வந்த பார்வையாளர் ஒருவர் அது ஒரு உணர்ச்சிகரமான சங்கீத அனுபவம் என்றும், யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்தமைக்கு அது ஒன்றே போதும் என்றும் கூறினர்.

உரோமன் கத்தோலிக்க ஆலயத்தில் நடைபெற்ற பொதுக் கிறிஸ்தவ வழிபாட்டில் சிறிய தொகையினரே காணப்பட்டனர். பிதா. போல் கஸ்பர்ஸ் சிறிய கிறிஸ்தவ சிறுபான்மையினர் (அதன் தலைவர்கள் வருகை தராமையால் கவனத்தை ஈர்த்தனர்.) மனித உரிமைகளைப் பாதுகாக்க என்ன செய்ய முடியும் என்ற கேள்வியை எழுப்பினர். தாவீதினதும், கோலியாத்தினதும் கதையை ஞாபகப்படுத்தி அதற்கு விடை கூறினர். நாசரேத் ஆலயத்தில் இளம் யூத தச்சுத் தொழிலாளியான யேசு அருளிய ''செயற் திட்ட விஞ்ஞாபனத்தி'' லிருந்து மேற்கோள் காட்டினர்: அதற்குக் காரணம் நிறைவு பெற்ற உணர்வு, சித்திரவதை, சிறைவாசம், சட்டமுறையற்ற சிறைப்பிடித்தல் ஆகியவற்றுக்கு எதிரான ஆத்திரம், மற்றும் தமது மக்களுக்கு சமத்துவமும் நீதியும் வேண்டுமென்ற விருப்பமே,' என்றும் கூறினர்.

சிறு தொகையினரான முஸ்லீம்கள் - ஒரு மாநகர சபை அங்கத்தவர் உட்பட - விரதத்திலும்: வழிபாட்டிலும் தமது மசூதியில் பங்கு பற்றியது ஒரு சாதனை என்றே இ. நீ. ச. இயக்க அமைப்பாளர்கள் கருதினர்கள்.

பிற்பகல் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில், இ: நீ. ச. இயக்கத்தின் தெற்கிலிருந்து வந்த பிரதிநிதிகளும், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தொழிற்சங்க, சமூக அரசியல் ஸ்தாபனங்களைச் சேர்ந்த பிரதிநிதிகளும், மூன்று மொழிகளிலும் உரை நிகழ்த்தினர். பாலா தம்பு, அரசியல் கோஷங்கள் அற்றதும், சந்தர்ப்பத்திற்கும் கூட்டத்தினருக்கும் ஏற்றதுமான தனது பேச்சில் யாழ்ப்பாண மக்களின் ''நல்லதொரு

ஆரம்பத்திற்கு'' வாழ்த்துக்கூறினார். எம். சிவசிதம்பரம் தெற்கிலிருந்து வருகை தந்திருந்தவர்களுக்குத் திருப்தி தெரிவித்ததுடன் பலகாலமாகத் தமிழ் பேசும் மக்கள் தம் உரிமைகளுக்காக, தெற்கிலிருந்து எந்தவிதமான ஆதரவுக் குரலும் எழுப்பப்படாமலே தமது போராட்டங்களை நடாத்தி வந்திருக்கின்றார்கள் என்றும் சுட்டிக்காட்டினார். இ.நீ.ச. இயக்கத்தின் பதாகையைப் பார்த்தபடியே, அடிப்படை ''நீதியும் சமத்துவமுமாக'' தமிழ் பேசும் மக்கள் வேண்டுவது தமது வருங்காலத்தை நிர்ணயிக்கும் உரிமையினையே என்று கூறினார்.

அவசரகாலநிலை நீக்கப்பட வேண்டும் என்றும், பயங்கரவாத தடைச்சட்டம் ரத்துச் செய்யப்பட வேண்டுமென்றும், சமூகக்குறைபாடுகள் சட்டம் அமுல் நடத்தப்பட வேண்டும் என்றும், அரசியல் சட்டத்தை மீறிய சித்திரவதைகளுக்குக் கண்டனம் தெரிவித்தும் அதற்குப் பொறுப்பானவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் எனவும் கூட்டத்தில் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

லங்கா கார்டியன், தொகுதி 2 இல. 17
1-ந் திகதி ஜனவரி 1980
(ஆசிரியரின் அனுமதியுடன்)

## அனுபந்தம் ஊ

# இனங்களுக்கிடையில் நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கத்தின் சட்ட மூலம்

1. **பெயரும் விலாசமும்.**

இவ்வமைப்பு இனங்களுக்கிடையில் நீதிக்கும், சமத்துவத்துக்குமான இயக்கம் என பெயர் பெறும். இதன் பதிவு செய்யப்பட்ட தலைமை அலுவலகம் கொழும்பில் இருக்கும்.

2. **குறிக்கோள்கள்**

பின்வரும் கொள்கைகளின் அடிப்படையில் இனங்களுக்கிடையில் நீதியையும், சமத்துவத்தையும் விருத்தி செய்வதே இவ்வியக்கத்தின் குறிக்கோள்களாகும்.

1. நாட்டிலுள்ள பல்வேறு இனங்களுக்கும், வெவ்வேறு மொழி பேசும் பிரிவினருக்கும் எல்லா உரிமைகளிலும் சமத்துவத்தை ஏற்படுத்தல்.

2. வெளிப்படையாகவும், மறைமுகமாகவும் காட்டப்படும் இனத்துவேசம், இனரீதியான அநீதிகள், பாகுபாடுகள் ஆகியவற்றை எதிர்த்தல்.

3. அரசாங்கத்தின் ஜனநாயக விரோத கொள்கைகளையும், நடவடிக்கைகளையும், சகல அடக்குமுறைச் சட்டங்களையும், பாதுகாப்புப் படையினரின் அடக்குமுறை நடவடிக்கைகளையும், இனங்களுக்கு மத்தியில் நல்லுறவை ஏற்படுத்தும் நோக்கத்துக்காக எதிர்த்தல்;

4. ஜனநாயக மனித உரிமைகளேயும், மனித சுதந்திரங் களேயும் இனங்களுக்கிடையில் நல்லுறவை ஏற்படுத்தும் நோக்கத்திற்காக ஆதரித்தல்.

5. தோட்டங்களிலும் ஏனைய பகுதிகளிலும் வாழும் தமிழ் மக்கள் உட்பட இந்நாட்டின் எல்லா மக்களினதும் முழுமையான சுதந்தர பிரஜைகளுக்கான உரிமைகளே ஆதரித்தல்.

6. தொழில், கல்வி, குடியிருப்பு, சுகாதாரம் போன்ற துறைகளில் தோட்டத் தொழிலாளர்களுக்கும், ஏனைய வர்களுக்கும் இனரீதியாகக் காட்டப்படும் பாகு பாட்டை எதிர்த்தல்.

7. இனங்களுக்கிடையில் நீதியையும், சமத்துவத்தையும் நிலைநாட்டும் போராட்டத்தில் எல்லா இனங்களேயும் சேர்ந்த தொழிலாளர்களுக்கும், விவசாயிகளுக்கும் இடையில் ஐக்கியத்தை வளர்த்தல்.

3 அங்கத்துவம் :

அ. 2-ம் பந்தியில் குறிப்பிட்டுள்ள இயக்கத்தின் குறிக் கோள்களுக்கு இணங்கும் எல்லா இயக்கங்களும், தனி நபர்களும் இவ்வியக்கத்தில் அங்கத்தவராவதற்கு தகுதியுடையவராவர்.

ஆ. 1979 ஆகஸ்ட் 25-ம் திகதி விடுக்கப்பட்ட பத்திரிகை களுக்கான அறிக்கையிலும், 1979 டிசம்பர் மாதம் 7-ம் திகதி சமர்ப்பிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட இவ்வியக்கத்தின் யாப்பிலும் கையொப்பமிடுபவர்கள் இவ்வியக்கத்தை உருவாக்கிய அங்கத்தினராகக் கரு தப் படுவார்கள்.

இ. 2ம் பந்தியில் குறிப்பிட்டுள்ள இயக்கத்தின் குறிக் கோள்களுக்கு இணங்கும் ஏனைய அமைப்புக்களும்,

தனி நபர்களும் இவ்வியக்கத்தின் செயற்குழுவினுல் வெளியிடப்பட்டுள்ள அங்கத்துவ விண்ணப்பப் பத்திரத்தில் விண்ணப்பிக்கும் பட்சத்தில், அவ்விண்ணப்பங்கள் செயற்குழுவினுல் பரிசீலனை செய்யப்பட்டு ஏற்றுக் கொள்ளப்படும்.

ஈ எந்த ஒரு செயற்குழு உறுப்பினரோ அல்லது அங்கத்தினரோ இயக்கத்தின் நன்மைகளுக்கு பாதகம் ஏற்படும் வகையில் நடந்துகொண்டால் அவரை இயக்கத்தில் இருந்து தர்காலிகமாக நிறுத்திவைக்கவோ அல்லது இயக்கத்தில் இருந்து நீக்கும்படி பொதுக் கூட்டத்திற்கு சிபார்சு செய்யவோ செயற்குழுவுக்கு அதிகாரமுண்டு. இப்படியான தற்காலிக இடை நிறுத்தத்திற்கோ அல்லது நீக்குவதற்கான சிபார்சுக்கோ செயற்குழு தீர்மானிக்குமாயின், அத்தீர்மானத்தின்பின் நடைபெறும் முதலாவது பொதுக்கூட்டத்தில் இத்தீர்மானம் பிரேரிக்கப்பட்டு கூட்டத்தில் சமுகமளித்திருப்போரில் அதிகப்படியானவர்களின் வாக்குகளின் மூலம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும். இப்படியான தற்காலிக இடை நிறுத்தம் பற்றிய அல்லது நீக்குவதற்கான சிபார்சு பற்றிய தீர்மானத்தை அங்கத்தவர்களுக்கு பொதுக் கூட்டத்திற்கு அறிவிக்கும்போது எழுத்து மூலமாக அறிவித்தல் வேண்டும்.

உ. இவ்வியக்கத்தில் அங்கத்துவம் வகிக்கும் எந்த ஒரு அமைப்பிற்கும், இயக்கத்தின் அங்கத்துவ நடவடிக்கைகள் சம்பந்தப்படும் எந்தச் சந்தர்ப்பங்களிலும், அவ்வமைப்பின் பிரதிநிதி யொருவரை அதன் சார்பாக பங்கு பற்ற வைக்க அதிகாரம் உண்டு.

ஊ. அங்கத்துவத்தைப் பெறும் இயக்கங்கள் ரூபா 120 யும் தனிநபர்கள் ரூபா 12 யும் வருடாந்த அங்கத்துவ கட்டணமாக செலுத்த வேண்டும். இக்கட்டணத்தை

விரும்பினால் மாதாந்த தவணைமுறையிலோ அல்லது காலாண்டு தவணைமுறையிலோ செலுத்தலாம். எந்த ஒரு அங்கத்தினராவது இக்கட்டணத்தைச் செலுத்த முடியாதவரென செயற்குழு திருப்திப்படுமிடத்து அக் கட்டணத் தொகையைக் குறைப்பதற்கு செயற்குழு வுக்கு அதிகாரமுண்டு.

எ. ஒரு வருட காலத்திற்கு தமது அங்கத்துவ கட்டணத் தைச் செலுத்தாத எந்த ஒரு அங்கத்தினரும் தனது அங்கத்துவத்திற்கான உரிமைகளை இழந்து விடுவார்.

4. செயற்குழு :

அ. செயற்குழுவானது இயக்கத்தின் ஒரு முகப்படுத்தப் பட்ட அமைப்பாகும். இது இயக்கத்தின் பொதுக் கூட்டத்தில் எடுக்கப்படும் தீர்மானங்களை அமுல்படுத் தும். இது பொதுக்கூட்டங்களுக்கிடைப்பட்ட காலத் தில் ஏற்படும் சகல விவகாரங்களிலும் இயக்கத்தின் சார்பாக நடவடிக்கைகளில் ஈடுபட அதிகாரமுடைய தாகும்.

ஆ. செயற்குழுவானது எங்காவது யாப்பிற்கு உட்படாத பிரச்சினைகள் எழும்பொழுது, இது சம்பந்தமாக தீர் மானிப்பதோடு, அடுத்த பொதுக்கூட்டத்தில் அறிவிக் கவும் வேண்டும்.

இ. செயற்குழுவானது அதன் பதிவு செய்யப்பட்ட காரி யாலயத்திலிருந்து தமது கடமைகளைச் செயற்படுத்து வதற்குத் தேவையான விதிமுறைகளையும், செயல் முறைகளையும் அமைத்துக் கொள்ளும் அதிகாரமுடை யது.

ஈ. செயற்குழுவானது தலைவர், உபதலைவர், செயலாளர், உதவிச்செயலாளர், பொருளாளர், உதவிப்பொருளா

ளர் ஆகியோருடன் பன்னிரண்டு செயற்குழு உறுப்பினர்களையும் கொண்டதாக இருக்கும்.

உ. வருடாந்தப் பொதுக் கூட்டங்களுக்கு இடைப்பட்ட காலத்தில் ஏற்படும் வெற்றிடங்கள் செயற்குழுவின் நியமனத்தின் மூலம் நிரப்பப்படல் வேண்டும், அப்படியான நியமனங்கள், உடனடியாக அடுத்து வரும் பொதுக் கூட்டத்தில் உறுதி செய்யப்படல் வேண்டும்.

ஊ. செயற்குழுவின் பதவிக்காலம் ஒரு வருடமாகும்.

எ. செயற்குழு கூட்டத்தை நடத்துவதற்குத் தேவையான குறைந்த பட்ச செயற்குழு அங்கத்தவர்களின் எண்ணிக்கை ஒன்பது ஆகும்.

ஏ. செயற்குழு குறைந்தது மாதத்திற்கு ஒரு முறையாவது கூடும்.

5. அலுவலகப் பொறுப்பாளர்களுக்கான கடமைகள்

அலுவலக பொறுப்பாளர்களுக்கான கடமைகள் பின்வருமாறு:

அ. தலைவர் அல்லது அவர் வருகை தராதிருக்கும் சந்தர்ப்பத்தில் உபதலைவர், இயக்கத்தினதும், செயற்குழுவினதும் கூட்டங்களுக்குத் தலைமை வகிப்பார். தலைவர், உபதலைவர் ஆகிய இருவரும் வருகை தராத சந்தர்ப்பத்தில், கூட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட எந்த ஒரு அங்கத்தினரும் தலைமை வகிக்கலாம்.

ஆ. செயலாளர் இயக்கத்தினதும், செயற்குழுவினதும் கூட்டங்களைக் கூட்டுவதும், கூட்டங்களின் அறிக்கைகளையும் அங்கத்தினரின் பதிவுகளையும் வைத்திருப்பதோடு, செயற்குழுவினால் கொடுக்கப்பட்ட வேறு எந்த கடமைகளையும் செயற்படுத்துவார்,

இ. பொருளாளர் இயக்கத்தின் நிதிகளைச் சேகரிப்பதற்கும், பராமரிப்பதற்கும், செலவழிப்பதற்கும் பொறுப்பாக இருப்பார். இவ்வியக்கத்தின் நிதி, பொருளாளருடன் தலைவர் அல்லது செயலாளர் சேர்ந்து இயக்கக் கூடிய, இயக்கத்தின் பெயரில் உள்ள வங்கிக் கணக்கிலிடப் பட்டு, இயக்கத்தின் விதிமுறைகளுக்கும், நடைமுறை களுக்குமேற்ப, செயற்குழுவின் வழிகாட்டலுடன் பொருளாளரினால் நிர்வகிக்கப்படும்.

ஈ. பெற்றுக்கொள்ளப்படும் எல்லாப் பணத்திற்கும் இயக் கத்தின் சார்பாக வழங்கப்படும் பற்றுச் சீட்டுகளுக் கும், தேவைப்படும்போது கணக்கு விபரங்களை சமர்ப் பிப்பதற்கும் பொருளாளர் பொறுப்பாக இருப்பார்.

உ. பொதுக்கூட்டத்தில் நியமிக்கப்படும் பரிசோதகரால் இயக்கத்தின் நிதி விபரங்கள் வருடாந்தம் பரிசோதிக் கப்படும்.

6. பொதுக்கூட்டங்கள் :

அ. பொதுக்கூட்டம் கூட்டப்படல் வேண்டும் என செயற் குழு தீர்மானிக்கும் பொழுதோ அல்லது எப்பொழு தாவது பொதுக்கூட்டம் நடத்துவதற்குத் தேவையான அங்கத்தவர்களின் குறைந்த பட்ச எண்ணிக்கைக்குச் சமமான இயக்க அங்கத்தவர்களால் கையொப்பமிடப் பட்டு பொதுக்கூட்டம் கூட்டப்படல் வேண்டும் என வேண்டுகோள் விடுக்கப்பட்டு 14 நாட்களுக்குள்ளோ பொதுக் கூட்டம் கூட்டப்படல் வேண்டும்.

ஆ. இவ்வியக்கத்தில் அங்கத்துவம் வகிக்கும் ஒரு அமைப்பு, ஒன்றோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட பிரதிநிதிகளோ அவ்வமைப்பின் பிரதிநிதிகளாக பொதுக்கூட்டத்தில் சமுகமளிக்கலாம். ஆனால் பொதுக்கூட்டத்தில் வரும் எந்த பிரேரணைகளுக்கோ அல்லது தீர்மானங்களுக்கோ

வாக்கெடுப்புகள் நடைபெறும் போது அவ்வமைப்பின் சார்பாக ஆகக்கூடுதலாக ஐந்து பிரதிநிதிகள்மட்டுமே வாக்களிக்கத் தகுதியுடையவராவர்.

இ. எல்லா பொதுக்கூட்டங்களுக்கும் ஆகக் குறைந்தது ஏழு நாட்களுக்குக் குறையாமல் அறிவித்தல் கொடுக்கப்படல் வேண்டும்.

7 வருடாந்தப் பொதுக் கூட்டம் :

அ. வருடாந்தப் பொதுக் கூட்டம் ஒவ்வொரு வருடமும் ஒக்டோபர் மாதம் நடைபெறும்.

ஆ. எல்லா வருடாந்தப் பொதுக் கூட்டங்களுக்கும் ஆகக் குறைந்தது பதினுன்கு நாட்களுக்கு முன் அறிவித்தல் கொடுக்கப்படல் வேண்டும்

இ. 6-ம் பந்தியில் ஆ. பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள விடயம் வருடாந்தப் பொதுக் கூட்டங்களுக்கும் பொருந்தும்.

ஈ. ஒவ்வொரு வருடத்திற்குமான செயற்குழு வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் தெரிவு செய்யப்படும்.

உ. ஒவ்வொரு வருடாந்தப் பொதுக்கூட்டத்திலும் கடந்த நிதியாண்டுக்கான பரிசோதிக்கப்பட்ட கணக்கு விபரங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

8 கோரம் :

பதிவு செய்யப்பட்ட மொத்த அங்கத்தினர்களின் எண்ணிக்கையில் ஐந்தில் இரண்டு பங்கு அல்லது ஐம்பது அங்கத்தினர்கள் ஆகியவற்றில் எண்ணிக்கையில் குறைந்தளவுக்குச் சமமான எண்ணிக்கையைக்கொண்ட அங்கத்தினர்களின் வருகையே பொதுக்கூட்டங்களையும், வருடாந்தப் பொதுக் கூட்டங்களையும் நடத்துவ

தற்குத் தேவையான குறைந்தபட்ச அங்கத்தினர்களின் எண்ணிக்கையாகும்.

9 வாக்களிப்பு:

செயற்குழுக் கூட்டங்களிலோ அல்லது இயக்கத்தின் கூட்டங்களிலோ வாக்களிப்பு கைகளை உயர்த்துவதன் மூலம் நடைபெறும்.

10. கிளைகள்:

அ. இயக்கமானது, அதன் நோக்கங்களை செயற்படுத்த இயக்கத்தின் அங்கத்தினர்களைக் கொண்ட பிரதேச வாரியாக கிளைகளை ஸ்தாபிக்கும். அத்தகைய கிளைகள் தமது கடமைகளை செயற்படுத்த கிளைகளுக்கான செயற்குழுக்களை தெரிவு செய்யும்.

ஆ. இயக்கத்தின் நோக்கங்களையும், குறிக்கோள்களையும் செயற்படுத்துவதற்குத்தேவையெனக்கருதும் எந்தவித நடவடிக்கைகளையும் இயக்கத்தின் கிளையோ அல்லது கிளைச்செயற்குழுவோ மேற்கொள்ளலாம்.

இ இயக்கத்தின் செயற்குழுவின் அதிகாரத்தைப் பெறுமல், தனிப்பட்டவர்களுடனோ அல்லது அமைப்புக்களுடனோ இயக்கத்தின் நிதி அல்லது வேறு எந்த வகையிலும் இயக்கம் பொறுப்பேற்க வேண்டிய எந்த விதமான ஒப்பந்தத்தையோ அல்லது இணக்கத்தையோ ந்கொள்ளக் கிளைக்கோ அல்லது கிளைக்குழுவிற்கோ அதிகாரம் கிடையாது.

ஈ. இயக்கத்தின் நோக்கங்களுக்கும், குறிக்கோள்களுக்கும் மாறுபாடாக அல்லது, முரண்பாடாக எந்த ஒரு கிளையோ அல்லது கிளைக்குழுவோ செயற்படுகிறது என இயக்கத்தின் செயற்குழு கருதுமிடத்து அக்கிளையையோ அல்லது கிளைக்குழுவையோ இயக்கத்திலிருந்து

நீக்குவதற்காக பொதுக்கூட்டத்தில் செயற்குழு சிபார்சு செய்யும். இப்படி நீக்குவதற்கான சிபார்சு செய்யும் தீர்மானத்தை அங்கத்தவர்களுக்கு பொதுக் கூட்டத்திற்கான அறிவித்தலில் எழுத்து மூலமாக அறிவிக்க வேண்டும்.

11 **யாப்பிற்கான திருத்தங்கள் :**

இயக்கத்தின் யாப்பில் மேற்கொள்ளப்பட வேண்டிய எந்த ஒரு திருத்தமும் பின்வரும் முறையில் மாத்திரமே செய்யப்பட வேண்டும்.

அ. செயற்குழுவோ, அல்லது அங்கத்தினரோ யாப்பில் திருத்தமொன்றை ஏற்படுத்த முடிவு செய்தால், அவர் அத்திருத்தப் பிரேரணையை எழுத்து மூலமாக செயலாளருக்கு அறிவிக்க வேண்டும். செயலாளர் அப்பிரேரணையை, பொதுக் கூட்டத்திற்கான நிகழ்ச்சி நிரலில் சேர்த்துக் கொள்வதுடன் அங்கத்தவர்களுக்கு கூட்டத்துக்கான அறிவித்தலில் எழுத்து மூலமாக அறிவிப்பார்.

ஆ. அத்தகைய ஒரு பிரேரணை, கூட்டத்திற்கு வருகை தந்துள்ளவர்களில், மூன்றில் இரண்டுபங்கு பெரும்பான்மை வாக்குகளைப்பெற்று நிறைவேற்றியதன்பின்பே ஏற்றுக் கொள்ளப்படும்.

12 **இயக்கம் கலைப்பு :**

இவ்வியக்கமானது, கலைக்கப்பட வேண்டும் என்னும் நோக்கத்துக்காக கூட்டப்படும். விசேட பொதுக்கூட்டத்தில் சமுகமளித்துள்ளவர்களில் வாக்களிக்கத் தகுதி வாய்ந்தவர்களின் மூன்றில் இரண்டு பங்கு பெரும் பான்மை வாக்குகளினுல் கலைக்கப்பட வேண்டும் என்னும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டாலன்றி, தன்னிச்சையாகக் கலைக்கப்படமாட்டாது. இயக்கம் கலைக்கப்பட வேண்டிய சந்தர்ப்பத்தில், சட்டப்படி மேற்கொள்ளப்பட்டிருக்கும் கடன்களும், கொடுப்பனவுகளும் முற்றுகத் தீர்க்கப்பட வேண்டியதுடன், மிகுதியாக இருக்கும் நிதி அமைப்புகளுக்கும், தனி நபர்களுக்கும் இடையில் அவரவர்களுக்கு சேரவேண்டிய விகிதாசாரப்படி பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்.

LIBRARY
556
JAFFNA

சென், பிலோமினு அச்சகம், யாழ்ப்பாணம்.

சென். பிலோமினு அச்சகம், யாழ்ப்பாணம்.